பதிவு இலக்கம் : 105267

தமிழின் முதல்தர
வார இதழ்


# தீபம்

www.deepamtv.asia

விலை 30 ரூபா • தீபம் 209 • 22.12.2019







## சம்பந்த புராணம்





## காற்றாலை ஆற்றல்












## குமுறும் இந்தியா

## கோத்தாவின் அறிவிப்புக்கள்






இது தமிழ் பேசும் மக்களுக்கான தனித்துவமான பத்திரிகை
















தீபம் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விளம்பர முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 077 198 9445

வார இதழ்
# தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
22.12.2019 — இதழ் - 209
gmail : newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் : 021 492 7542, 077 198 9445

## சம்பந்தன் விடுத்த இரு செய்திகள்

இலங்கை தமிழரசுக் கட்சியின் 70வது ஆண்டு நிறைவு விழா கூட்டத்தில் வைத்து இரண்டு முக்கிய செய்திகளை சம்பந்தன் ஐயா வெளியிட்டுள்ளார். அதில் ஒன்று எதிர் வரும் நாடாளுமன்ற தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்ற தீவிர அரசியல் இருந்து ஓய்வு பெறப் போகும் அறிவிப்பு

இரண்டாவது ஈழத் தமிழர்களின் எதிர்காலத்தை இந்தியா பொறுப்புக் கொடுக்கும் தன்மையிலான- தமிழர்களை ஏமாற்றுவதற்கு இந்தியா இனிமேலும் இடமளிக்கக் கூடாது என்ற கோரிக்கை

இரண்டு அறிவிப்பிலுமே சம்பந்தனின் இயலாமையின் குரலும் அவரது தலைமைத்துவத்தின் கீழான கட்சியின் வலுவற்ற தன்மையும் வெளிப்படையாகவே தெரிகிறது. முதிர்ந்த அனுபவ அறிவும், தெளிந்த அரசியல் ஞானமும், உண்மையான தமிழ் தேசிய சிந்தனையும், வரலாற்று ரீதியான பட்டறிவும் தொலைநோக்குப் பார்வையும் கொண்ட ஆளுமை மிகுந்த தலைமை ஒன்றின் கம்பீரமான தலைவணங்கா வழிகாட்டலுக்காகப் நம்பிக்கையுடன் காத்திருக்கும் தமிழினத்திற்கு விடுதலை போராட்டகாலத்திற்கு பின்னர் பொருத்தமான தலைவன் கிடைக்காமல் போனது பெருந் துரதிக்ஷ்டமே

சம்பந்தன் வெறுமனே தேர்தலையும், பதவிகளையும் இலட்சியமாகக் கொண்ட மிகச் சாதாரணமான மூன்றாந்தர கட்சி அரசியலை நடாத்திய ஒருவராக தனது அடையாளத்தை இனங்காட்டியுள்ளார். ஒரு முறையான தலைவராக இருந்திருப்பின் போருக்குப் பின்னரானதமிழ் மக்களின் வாழ்வியல் மற்றும் அரசியல் - சமூகவியல் வளர்ச்சியில் விழிப்புணர்வுடன் கூடிய ஒரு எழுச்சியை ஏற்படுத்தியிருக்க முடியும். அப்படி எதனையும் அவர் செய்யவில்லை. குறைந்தபட்சம் தமிழ் தேசியக் கூட்டமைப்பையேனும் அதற்கான ஒரு எதிர்கால மக்கள் அரசியலை இலக்காகக் கொண்ட அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் யாப்பை உருவாக்கி ஒரு பெரும் சக்தியாக உருவாக்கி இருக்க முடியும். ஆனால் அப்படியான நோக்கம் எதுவும் அவருக்கு இருக்கவில்லை.

மாறாக முரண்பட்ட கருத்தியலின் அடிப்பயையில் சந்தர்ப்பவாத அரசியலை பேசும் ஒருவராகவே தன்னை அவர் அடையாளப்படுத்தி வந்துள்ளார். மேலாதிக்க சக்திகளுக்கும், அயலாதிக்க சக்திகளுக்கும், வக்காளத்து வாங்கும் ஒருமிகப் பலவீனமான தலைவராக அவர் தன்னை தொடர்ந்தும் இனங்காட்டியதன் மூலம் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் தங்கள் வாழ்வியல் அரசியல் உரிமைகளுக்காக, அயலகத்தையும், சர்வதேச சமூகத்தையும் யாசித்து நின்றும் அதலபாதாளத்தினுள் தள்ளி விட்டுள்ளார். இதனை அவரும், அவரது சகாக்களும் மறுக்கலாம் மக்கள் அவரை வெறுக்கத் தொடங்கி வெகு காலமாகிவிட்டது. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை என்ற நிலையிலேயே அவரும், அவரது கட்சியும் இப்போது இருக்கிறது என்பதை அவரும் நிச்சயம் உணர்ந்திருப்பார்.

தந்தை செல்வா இறுதிக் காலத்தில் "தமிழினத்தை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்னதாகக் கதையொன்றுண்டு. சம்பந்தரோ அந்தக் கடவுளாக இந்தியாவை விரல் சுட்டிக் காட்டியுள்ளதுதான் வேதனை. இலங்கை தமிழர் பிரச்சினையில் இந்தியா எத்தகைய பங்கினை வகித்தது? எத்தகைய குழப்பத்தினை ஏற்படுத்தியது இந்திய படையை அனுப்பி எத்தகைய நாசத்தை விளைவித்தது என்பதும் சர்வதேச அரங்கில் இலங்கையின் மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளில் இருந்து அதனைப் பாதுகாக்க எவ்வாறெல்லாம் முயன்றது? என்பது குறித்து சம்பந்தர் அறியாதவரல்லர். தமிழ் மக்கள் பிரச்சினையை இந்தியா எப்படியெல்லாம் தனது பிராந்திய அரசியல் நலன்களை பேண பயன்படுத்தி வந்துள்ளது, என்பதை சர்வதேச சமூகமும் அறியும். இந்த நிலையில் தமிழ் மக்களின் பலமான தலைமை என்ற தனது தலைமையிலான அமைப்பை சுயபிரகடனம் செய்யும் சம்பந்தன் ஐயா, தன்னை ஒரு இந்திய விசுவாசியாக மாற்றி, அதன் உத்தரவுக்கு காத்திருக்கும் நபராகவே வைத்திருக்கட்டும். அவரது சுயம் அத்தகையதாகவும் இருக்கட்டும். ஆனால் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் அந்த நிலைக்குள் தள்ளி விட வேண்டாம்.

உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும் அந்நியரிடம் கையேந்தும் நிரந்தரமான அவலநிலைக்குள் தமிழ் மக்களை இடைநிறுத்தி விட்டுப் பொறுப்பற்ற ஒரு தலைவராக சம்பந்தன் தன்னை இனம் காட்டிவிட்டுள்ளமை பரிதாபகரமானது. இந்தநிலையில் அவர் தேர்தலில் இருந்து ஒதுங்குவது என்ற முடிவின் அறிவிப்பு கூறும் செய்தி எதுவாக இருக்கும் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. புலிகள் அழிக்கப்பட்டது, அதாவது தோற்கடிக்கப்பட்டது நல்லவிடயமாக இருக்கலாம் என்றும், ஒருகருத்துப்பட அவர் கூறியது இந்தியாவுக்காக மட்டுமல்ல, தனக்காகவும் தான். புலிகள் இன்னமும் இருக்கும் நிலை தொடர்ந்திருந்தால் ஐயா கூட்டமைப்பின் நிரந்தரதலைவராக இருந்திருப்பாரா? என்ற ஐயம் அவருக்குமுண்டு

அதனால் தான் முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்த இறுதி நாட்களில் ஐயா எதுவும் பேசாது, மௌனவிரதம் காத்து புலிகளதும் பல்லாயிரக்கணக்கான போராளிகளினதும், மக்களினதும் அழிவைக் கண்காணிக்கும் கடமையில் கண்ணாக இருந்தார் என்று மக்கள் பேசிக் கொள்வதை வரலாறு பதிவு செய்தே உள்ளது.




சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் - இனி - அஞ்சிடோம்:
எந்த நாட்டினு மிந்த அநீதிகள்
ஏற்குமோ? - தெய்வம் - பார்க்குமோ?

பொழுதெல் லாமெங்கள் செல்வங்கொள்ளை கொண்டு
போகவோ? - நாங்கள் - சாகவோ?
அழுதுகொண் டிருப்போமோ? ஆண்பிள்ளைகள் நாங்கள்
அல்லமோ? - உயிர் - வெல்லமோ?

நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ - பன்றிச் - சேய்களோ?
நீங்கள் மட்டு மனிதர்க ளோவிது
நீதமோ? பிடி - வாதமோ?

பார தத்தினுடை யன்பு செலுத்துதல்
பாபமோ! - மனஸ் - தாபமோ?
கூறு மெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ - இதிற் - செற்றமோ?

ஒற்று மைவழி யொன்றே வழியென்ப
தோர்ந் திட்டோம் - நன்கு - தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள்செய் யுங்கொடு மைக்கெல்லாம்
மலைவுறோம் - சித்தம் - கலைவுறோம்.

## சுந்தரச் சிரிப்பு







நன்றி : சிரித்திரன் சித்திரக்கொத்து

# அயலக அரசியல்

**- செம்பருத்தி -**

இந்திய நாட்டின் பொருளியல் நிலைமை அதல பாதாளத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது. ஏற்றுமதியில் பாரிய வீழ்ச்சி, இறக்குமதியில் பாரிய வீழ்ச்சி வேலையின்மை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளில் ஆள் குறைப்பு நடைபெறுவதால் இலட்சக்கணக்கான மக்கள் தொழில்களை இழந்து வருகின்றனர். இந்தியப் பணத்தின் பெறுமதியில் பெரும் வீழ்ச்சி நிலை தொடருகின்றது. ஆனால் பாரதிய சனதாக்கட்சியின் அரசு இவற்றைக் கண்டுகொள்ளாமல் மக்களின் கவனத்தை இன, மத பேதங்களை வளர்த்து, மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி, குளிர்காயலாம் என்ற நினைப்பில் பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்து தனது நாடாளுமன்றப் பலத்தின் மூலம் நிறைவேற்றி வருகிறது. ஐந்து ஆண்டுகளாக ஆட்சி செய்த அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்து இன்னமும் மக்களின் முதன்மையான பிரச்சனைகளைக் கருத்தில் கொள்ளாது இசுலாமிய எதிர்ப்பு நிலையில் தனது கவனத்தை முற்றாகச செலுத்தி, அடுத்தடுத்து அம்மக்களுக்கு எதிரான சட்டங்களை நிறைவேற்றி வருகிறது.



## குடியுரிமைத் திருத்தச் சட்டமும் கொந்தளிக்கும் இந்தியாவும்

இசுலாமியப் பெண்களுக்குப் பெரும் பாதுகாப்பான "முத்தலாக்" என்னும் நடை முறையை நீக்கி ஒரு சட்டத்தை இசுலாமியப் பெண்களின் பெரும் எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றியது. இதன் பின்னர் அரசியல் யாப்பில் காஷ்மீர் மாநிலத்திற்கு அரசியல் யாப்பு வழங்கிய சிறப்பு அதிகாரமான 370ஐ நீக்கியதுடன் நில்லாது. அந்த மாநிலத்தின் மாநிலத் தகுதியையும் குறைத்து இரு யூனியன் பகுதிகளாக ஆக்கியமை.அதிலும் ஒரு பகுதிக்கு அதிகாரங்கள் குறைந்த, யூனியன் சட்டசபையும் பிரிக்கப்பட்ட மற்றப்பகுதி நேரடியான மத்திய அரசின் கீழ் சட்டசபை இல்லாத நிர்வாகமாகவும் ஆக்கப்பட்டது. இது வேண்டுமென்றே இசுலாமிய மக்களுக்கெதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. காஷ்மீரை இவ்வாறு சிதைத்தாலும், அம்மக்களின் எதிர்ப்புத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஏழு எட்டு திங்கள்கள் கடந்த நிலையிலும் அங்கு நிலைமை வழமைக்குத் திரும்பவில்லை.


இதனைத் தொடர்ந்து அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் அடுத்த பிரச்சினையைக் கையிலெடுத்து இசுலாமிய மக்களுக்கெதிராக இந்துக்கள் எனப்படுவோரின் கவனத்தைத் திசை திருப்பியது. இவ்வாறு மதவாத எண்ணங்களை மக்களுக்கு ஊக்கித் தனது ஆட்சியின் குறைகளிலிருந்து கவனத்தை திருப்பிய மோடியின அரசு இப்பொழுது இந்தியக்குடியுரிமைத் திருத்தம் என்ற பெயரில் ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

இச்சட்டம் கொண்டுவந்த உடனேயே இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், மேகாலய, மீசொராம், நாகலாந்து ஆகிய மாநிலங்களில் பலத்த எதிர்ப்பும் போராட்டங்களும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கிவிட்டன. ஆனால் தனது நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டு இந்தச் சட்டத்தை மக்களவையில் நிறைவேற்றியது அரசு. ஆனால் மாநிலங்களவையில் பெரும்பான்மை இல்லாத நிலையில் தமிழ் நாட்டின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளிமக்கள் கட்சி ஆகியனவற்றின் ஆதரவுடன் சட்டத்தை நிறைவேற்றியது. இதன் பின்னர் நாட்டின் பல பகுதிகளிலும் இச்சட்டத்திற்கு எதிராக மக்கள் போராடத் தொடங்கி விட்டனர். இச்சட்டமானது அரசியல் சட்டம் வழங்கிய சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உரிமையை மீறும் சட்டம் என்றும், இது நாட்டில் ஒரு பகுதியினராகிய இசுலாமியர்களுக்கு எதிரான ஒன்று என்று சட்ட வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதே நேரம் இச்சட்டம் பற்றிய பல வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. உச்சநீதிமன்றம் நாட்டின் கொந்தளிப்பான நிலைமையைக் கவனத்தில் எடுத்துத்தானாகவே விசாரிக்கவும் முன்வந்துள்ளது..

இச்சட்டமானது இங்கு வாழும் இசுலாமியர்களுக்கு எதிரானது அல்ல.மற்ற நாடுகளில் இருந்து இடம்பெயர்ந்து இங்கு வந்துள்ளோருக்கான குடியுரிமை பற்றியது என்றும், ஆனபடியால் இது அரசியல் சட்ட மீறல் அல்ல என்றும் பாஜகவினர் கூறுகின்றனர்.ஆனால் இச்சட்டம் கொண்டுவரப்பட்டதன் நோக்கம் இது இசுலாமியர்களுக்கு எதிராக மட்டும் கொண்டு வரப்பட்டதல்ல. இது பாரதிய சனாதாக் கட்சிக்கான ஒரு வாக்கு வங்கியை உண்டாக்குவதற்குமான உத்தியாகவே கொண்டு வரப்பட்டுள்ளது என்பது தான் இங்கு புதைந்துள்ள உண்மையாகும்..

### இரு வேறு அடிப்படைகளைக் கொண்ட போராட்டம்

குடியுரிமைத் திருத்தச்சட்டத்தை எதிர்த்து நடக்கும் போராட்டங்கள் இரு வகையான நோக்கங்களைக்கொண்டதாகும். வடக்குக் கிழக்கு மாநிலங்களில் நடக்கும் போராட்டங்கள் குடியுரிமைச் சட்டங்களால் தங்கள் மாநிலங்களுக்குப் பாரிய பாதிப்புகள் ஏற்படும், எனவே இச்சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்ற கருப்பொருளில் அங்கு மக்கள் போராடுகிறார்கள். இம்மாநிலங்களில் தான் முதலில் பெரிய மக்கள் எழுச்சி ஏற்பட்டுப் போராட்டம் வலுவான நிலைக்குச் சென்றது. இதர பகுதிகளில் நடைபெறும் போராட்டங்கள் இந்துக்களுக்கு ஒரு நீதி இசுலாமியர்களுக்கு வேறு நீதியா என்ற அடிப்படையில் நடைபெறும் போராட்டங்களாகும். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்காளதேசம், மியான்மார் ஆகிய நாடுகளில் இருந்து வந்த இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் குடியுரிமை வழங்குவதென்றும் ஆனால் அங்கிருந்து வந்த இசுலாமியர்களுக்குக் குடியுரி மை வழங்குவதில்லை என்றும் இத்திருத்தம் கூறுகிறது. எனவே இது அடிப்படை அரசியல் யாப்பு வழங்கிய உரிமை மீறல் என்று இந்தியா எங்கும் ஒரு போராட்டம் நடைபெறுகிறது. முதலில் கிறித்துவர்களுக்கும் குடியுரிமை வழங்குவதில்லை என்று இருந்ததைப் பின்னர் அவர்களுக்கும் குடியுரிமை வழங்குவதென்று திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இலங்கைத் தீவில் இருந்து சென்ற ஏதிலிகளான தமிழ் மக்களுக்கு அவர்கள் இந்துக்களாக இருந்தும் குடியுரிமை வழங்குவதை இந்தத்திருத்தச் சட்டம் மறுக்கிறது. இசுலாமியர்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு குடியுரிமை மறுக்கும் மோடி அரசு என்ன காரணத்தினால் இலங்கையிலிருந்து சென்ற ஏதிலிகளான தமிழ் இந்துக்களுக்குக் குடியுரிமை வழங்க சட்டம் மறுக்கிறது? என்று தமிழ் நாட்டில் போராட்டம் தொடங்கி வலுப்பெற்று வருகிறது.




### தமிழ் நாட்டு அரசியல்கட்சிகளின் நிலை.

தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் என்றால் தேசியக் கட்சிகளை நீக்கிப் பார்த்தால் திமுக, அதிமுக, பாட்டாளிமக்கள் கட்சிகளே பெரிய கட்சிகளாகும். இவற்றில் பாமக, அதிமுக என்பன பாரதிய ஜனாதாக் கட்சியின் கூட்டாளிக் கட்சிகளாகும். எனவே அவை சட்டத்திருத்தத்தை ஆதரித்தே வாக்களித்திருந்தன. அதிமுக இப்பொழுது உள்ள தலைமை தனது அரசைக் காப்பாற்றிக்கொள்ள முற்று முழுவதுமாக மோடி அரசை நம்பியே இருக்கிறது அதனால் தமிழ் நாட்டுக்குப் பாதகமான சட்டங்கள் வந்தாலும் அவற்றை ஆதரித்தே வருகிறது. அதேபோல் இச்சட்டத் திருத்தத்தையும் ஆதரித்தே வாக்களித்தது. அதிமுக இச்சட்டத்தை ஆதரிக்காது மாநிலங்களவையில் நடந்திருந்தால் இச்சட்டம் தோற்றுப்போயிருக்கும். ஆனால் முதுகெலும்பு இல்லாத தலைமையால் அவ்வாறு எதிர்க்க முடியவில்லை.

வாக்களிப்பு முடிந்த பின்னர் தமிழ் நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலைமையால் சில அதிமுக மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டணி நிர்ப்பந்தத்தால் தாங்கள் சட்டத்திருத்தத்தை ஆதரித்து வாக்களித்ததாகக் கூறியுள்ளனர். பாட்டாளி மக்கள் கட்சியும் சட்டத்திருத்தத்தை ஆதரித்தே வாக்களித்துள்ளது. இதனால் அங்கு இசுலாமிய மக்களின் வெறுப்பை இக்கட்சிகள் பெற்றுக் கொண்டுள்ளன. இதே நேரம் இப்பொழுது வெளியில் நின்று இலங்கைத் தமிழ் ஏதிலிகளுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்று கூறுகிறது. திமுக போராட்டமே நடத்தியு ள்ளது. இதுவும் ஒரு வேடிக்கையான நிகழ்வாகவே பார்க்கப்படுகிறது. திமுக தாங்கள் நாடாளுமன்றத்தில் மூன்றாவது நான்காவது பெரிய கட்சி என்று கூறிக்கொண்டு வாக்களிப்பில் கலந்து கொள்ளாது வெளிநடப்புச் செய்து ஒரு சமரச நிலையைக் காட்டினர். ஆனால் பின்னர் தான் விழித்துக் கொண்டு மாநிலங்களவையில் எதிர்த்து வாக்களித்தனர். இப்பொழுது ஈழ மக்களுக்கு எதற்காக குடியுரிமை மறுக்கப்பட வேண்டும் அவர்கள் இந்துக்கள் தானே எனவே பாரபட்சம் காட்டாது இசுலாமியர்களுக்கும் இலங்கையிலிருந்த வந்த தமிழ் இந்துக்களுக்கும் குடியுரிமை வழங்க வேண்டும் என்று கூறி வருகின்றனர். அதிமுக எதிர்த்து வாக்களித்திருந் தால் சட்டம் நிறைவேறியிருக்காது என்று அதிமுகவின் மேல் குற்றம் சுமத்தி தாங்கள் நேர்மையானவர்கள் என்றும் காட்டிப் பரப்புரை செய்கின்றனர். அனைவருக்கும் இலங்கைத் தமிழ் மக்கள் இப்பொழுது தான் கண்களுக்குத் தெரிகின்றனர். என்பது தான் யதார்த்தமாகும்.

### மோடி அரசின் இரு முனை நகர்வு.

மோடி அரசு தன்னை வடக்குக்கிழக்கு மாநிலங்களில் நிலைநிறுத்திக்கொள்ள இச்சட்டத்திருத்தத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டுள்ளது. அதே நேரம் இந்துத்துவ வெறியை வளர்ப்பதர்காகவும், அதன் மூலம் தன்னை இன்னொரு வழியில் பலப்படுத்தவும் முனைகிறது. இசுலாமியர்களே போராடுகிறார்கள் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தவும், அரசு முயல்கிறது. ஆனால் நிலைமை மாறாகவே இருக்கிறது. மக்கள் நாடு முழுவதும் நடைபெறும் போராட்டங்கள் மக்கள் அரசின் கூற்றுக்களை ஏற்கவில்லை என்பதையே காட்டுகின்றன. மோடி அரசின் கூற்றுத் தவறானது என்பதைப் பல்வேறு வகையான ஊடகங்களும் உண்மைகளை உலகுக்குக் காட்டி வருகின்றன. உண்மையான நிலைமை மக்கள் இன மத வேறுபாடின்றி போராடுகிறார்கள் என்பதேயாகும்.

வடகிழக்கு மாநிலங்களில் எவருக்கும் குடியுரிமை வழங்கப்படக் கூடாது. குடியுரிமைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று தான் போராட்டம் வலுவாக நடைபெறுகிறது. அங்கு வாழ்கின்ற மக்கள் தமது மண்ணில் வேற்று இனத்தவரோ நாட்டவரோ குடியேறினால் தங்களின் தனித்துவம் பண்பாடு போன்றவை சீரழியும், பெரும் தொகையான இந்துக்கள் குடியேற்றப்ப ட்டால் தாங்கள் தங்கள் மாநிலத்திலேயே சிறுபான்மையினர் ஆகிவிடுவார்கள் என்ற உண்மையான பயத்தால் தான் சட்டத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். இம்மாநிலங்களுக்கும், காஷ்மீர் போன்று சிறப்பு அதிகாரங்கள் இருக்கின்றன. ஆனால் காஷ்மீரில் செய்ததுபோல் இங்குள்ள சிறப்பு அதிகாரங்களை நீக்காமல் வெளியிலிருந்து வந்த இந்துக்களைக் குடியேற்றுவதன் மூலம் மறைமுகமாக அந்தச் சிறப்பு அதிகாரங்களை நீர்த்துப் போகச் செய்வதே பாஜக அரசின் திட்டமாகும். அத்துடன் தாங்கள் அம்மாநிலங்களில் இந்துக்களைக் குடியேற்றுவதன் மூலம் பாஜகவின் வாக்கு வங்கியை இந்துக்கள் என்ற அடிப்படையில் அம்மாநிலங்களில் நிலை நிறுத்தலாம் என்ற இன்னொரு வஞ்சக எண்ணமும் அவர்களுக்கு உண்டு.

வடகிழக்கு மாநில மக்களைப் பலமற்றவர்களாக சிறுபான்மையினராக அம்மாநிலங்களிலேயே ஆக்குவதன் மூலம் தனது நோக்கத்தை நிறைவேற்ற முனைந்துள்ளது மோடியின் ஆட்சி. ஆனால் இது கைகூடுமா? என்றால் நிச்சயமாக நிறைவேறாது என்பதே யதார்த்தமாகும். கேரளா, மேற்கு வங்கம் புதுச்சேரி போன்ற மாநில அரசுத் தலைவர்களே பேரணிகளில் கலந்து கொண்டு தமது மாநிலங்களில் இதை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று சூளுரைக்கின்றனர். முதலில் ஆதரித்த ஜனதாத் தளம் இப்பொழுது தமது தவற்றிற்கு மன்னிப்புக் கேட்டு எதிர்க்க முடிவு செய்துள்ளது.

இந்தியா முழவதும் இச்சட்டத்திற்கு எதிராக எழுந்துள்ள எதிர்ப்புகளும் போராட்டங்களும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத அளவுக்கு மோடி அரசைக் கொண்டுபோய் விடும் என்பது தான் நோக்கர்களின் கருத்தாக உள்ளது. அத்துடன் இச்சட்டமானது இந்திய அரசியலமைப்புக்கு எதிரானது என்ற வழக்கின் தீர்ப்பு வருமாக இருந்தால் நிச்சயம் மோடிக்கும் அமித்சாவுக்கும் பெரிய பின்னடைவாகவே கருதப்படும்.




- லக்ஷனா பாலகுமாரன் -

# தகர்க்கிறதா குடியுரிமைச் சட்டம்?

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. அத்தகைய இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் மதச்சார்பற்ற தன்மை கொண்டதாகும். அதில் இந்தியக் குடியுரிமை என்பது ஓர் அடிப்படை உரிமையாகும். இந்தியக் குடியுரிமை என்பது நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும், அவர்களின் பாலினம், சாதி, மொழி போன்ற எவ்வித பராபட்சம் இன்றி அனைவரும் சமம் என்பதுடன் அடிப்படை உரிமைகளுக்கும் உத்தரவாதம் தரும் ஒன்றாகும். இதனை அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரையிலுள்ள 5 முதல் 11 வரையிலான பிரிவுகள் தெட்டத் தெளிவாக வலியுறுத்துகின்றன. அத்துடன் இந்திய நாடாளுமன்றத்தின் நுழைவு வாயிலில் சமஸ்கிருத மொழியில் பொறிக்கப்பட்டிருக்கும் வாக்கியம் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது. அதன் பொருள் யாதெனில் "இந்தியா என்பது மத ஒடுக்குமுறைக்கு ஆளாயிருக்கும் யாராக இருந்தாலும் அவர்கள் யூதர்களாக, ஏமனைச் சேர்ந்தவர்களாக, ஈரானியர்களாக, ஆப்கானிஸ்தானியர்களாக, திபெத்தியர்களாக, வங்கதேசியத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இதனைத் தங்கள் இல்லமாகக் கருதலாம்" என்பதேயாகும். இந்தியாவின் சுதந்திரத்திற்கு பிந்தைய வரலாற்றில் இப்போதைய பாஜக ஆட்சியில், அதன் மதசார்பற்ற தன்மை அழிக் கப்படும் என்ற அச்சுறுத்தல் காணப்படுகிறது. காரணம் அண்மையில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்ட மசோதா எனலாம். எனவே இக்கட்டுரை குடியுரிமை திருத்தச் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டமைக்கான பின்னணி மற்றும் அதற்கு ஆதரவான, எதிரான கருத்துக்களை தேடுவ தாக அமைந்துள்ளது.

1955ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட குடியுரிமை சட்டத்தில் திருத்தம் செய்து குடியுரிமைச் சட்டதிருத்த மசோதாவை கடந்த 2016ம் ஆண்டிலியே பா.ஜ.க நிறைவேற்ற முனைப்புக் காட்டியது. ஆனால் மாநிலங்களவையில் போதிய பெரும்பான்மை இல்லாமை மற்றும் கடந்த அரசின் பதவிக்காலம் முடிவு உள்ளிட்ட காரணங்களால் அப்போது அந்த மசோதா காலவதியாகிவிட்டது. இதனைத் தொடர்ந்து, எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் குடியுரிமைச் சட்டத் திருத்த மசோதாவை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மக்களவையில் தாக்கல் செய்தார். மசோதாவிற்கு ஆதரவாக 334 உறுப்பினர்களும், எதிராக 106 உறுப்பினர்களும் வாக்களித்ததால் மக்களவையில் நிறைவேறிய குடியரிமைச் சட்டத்திருத்த மசோதா மாநிலங்களவையில் தாக்கல் செய் யப்பட்டது. அங்கு மசோதாவிற்கு ஆதரவாக 125 உறுப்பினர்களும் எதிராக 105 உறுப்பினர்களும் வாக்களித்தனர். இரு அவைகளிலும் நிறைவேறிய மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு பின்னர் சட்டமாகியுள்ளது.

குடியுரிமை திருத்தச் சட்டத்தில் இடம் பெற்ற அம்சங்கள்

- 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்கு முன்பு பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவில் குடியேறிய இஸ்லாமியர்கள் அல்லாத இந்துக்கள், சீக்கியர்கள், ஜைனர்கள், பார்ஸிகள், கிறிஸ்தவர்கள், பௌத்த மதத்தை சேர்ந்தவர்கள் ஆகியோர் சட்ட விரோதமாகக் குடியேறியவர்களாகக் கருதப்படமாட்டார்கள்.
- இந்தியாவில் அவர்கள் குடியேறிய ஐந்து ஆண்டுகளில் அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க மசோதாவின் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்பு அது 11 ஆண்டுகளாக வே இருந்தது.
- இந்தச் சட்டப்படி போதிய ஆவணம் இல்லை என்றாலும் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.
- குடியுரிமை அளிக்கப்படுவர்களுக்கு அவர்கள் மீது ஏற்கனவே தொடரப்பட்டுள்ள சட்டவிரோதமாக குடியேறியதற்கான வழக்குகளிலிருந்து சட்டப் பாதுகாப்பு அளிக்கப்படும்.
- அரசியலமைப்பின் 6வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள அசாம், மிசோரம், மேகாலயா, திரிபுரா மாநிலங்களில் உள்ள குறிப்பிட்ட பழங்குடியினப் பகுதிகளுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- எல்லைப்புற ஒழுங்குமுறை ஒப்பந்தத்துக்குட்பட்ட அருணாசலப் பிரதேசம், நாகலாந்து, மிசோரம் பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கக்கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த சட்டத்துக்கு இரண்டு தனித்துவக் காரணங்களால் எதிர்ப் புக்கள் வலுத்து வருகிறது. வடகிழக்கு மாநிலங்களில் வாழும் பூர்வீகக் குடிமக்கள் தங்களது பெரும்பாண்மைக்கும், பாரம்பரியத்திற்கும் ஆபத்து வந்துவிடும் என அஞ்சுவதால் அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதே போல் இஸ்லாமியர்கள் தவிர்த்துப் பிற மதத்தினருக்கு மட்டும் ஆதரவாக இருப்பதால் நாட்டின் ஏனைய பகுதிகளில் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை, இலங்கையிலிருந்து அகதிகளாக வந்த தமிழர்கள் விடுபட்டு ள்ளதையும், இஸ்லாமியர்கள் சேர்க்கப்படாததையும் கண்டி த்தும் போராட்டங்கள் வலுவடைந்துள்ளன.

தமிழகத்தினைப் பொறுத்தவரை 24 மாவட்டத்தில் 107 முகாமில் ஏறத்தாழ 60000 இலங்கை அகதிகள் வாழ்கின்றனர். தற்போது வரை இந்தியாவில் அகதிகளுக்கான சட்டம் இல்லையென்பதால் இலங்கையிலிருந்து அகதிகளாக செல்பவர்கள் அனைவரும் சட்டவிரோத குடியேறிகளாக பதிவு செய்யப்பட்டே முகாம்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். எனவே அவர்கள் இக்குடியுரிமைத் திருத்தச் சட்டமசோதா மூலம் இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. காரணம் இந்தியச் சட்டப்படி குடியுரிமை பெற சில வழிகளே இருக்கின்றன. ஒன்று சட்டபூர்வமாக குடியுரிமை உள்ள இந்தியப் பெற்றோர்களுக்குப் பிறந்திருக்க வேண்டும். அல்லது இந்தியாவில் வசிக்கத் தகுதி பெற்ற பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்திருக்க வேண்டும். அல்லது 11 ஆண்டுகள் இந்தியாவில் சட்டபூர்வமாக வசித்திருக்க வேண்டும். அல்லது இந்தியா எந்த நாட்டையாவது தன்னோடு இணைத்துக் கொண்டால் அங்கு வசிக்கும் குடிமக்களாக இருக்க வேண்டும். இத்தகைய எந்த வழிகளிலும் ஈழத் தமிழர்கள் குடியுரிமையினை பெற்றுக் கொள்ள முடியாததுடன் தற்போதை குடியுரிமை திருத்தச் சட்ட மசோதாவிலும் அத்தகைய வழிகள் பற்றி குறிப்பிடவில்லை. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அங்கு வாழும் ஈழத்தமிழர்களுக்கு ஆக்கபூர்வமான எத்தகைய தீர்வினையும் வழங்காத இத்தகைய மசோதா கடுமையான எதிர்ப்புக்குள்ளாகியுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினையே மீறும் ஒன்றாகவே இக் குடியுரிமை திருத்தச் சட்டம் என்பது காணப்படுவதாக இம் மசோதாவிற்கு எதிரானவர்கள் தமது தரப்பு வாதங்களை முன்வைக்கின்றனர். இந்தச் சட்டத்திருத்த மசோதாவிற்கு பின்னே ஆட்சியாளர்களின் மதவெறி சித்தாந்தம் ஒளிந்து கொண்டிருக்கிறது. இந்தச் சட்டமுன் வடிவமானது எவ்விதமான ஜனநாயக விவாதமும் இன்றி ஆட்சியாளர்களால் கொண்டு வரப்பட்டுள்ளது. ஜனநாயகத்தின் ஆரோக்கியமான விவாதத்தையே ஒரு கேலிக்கூத்தாக இது மாற்றி உள்ளது. காரணம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தியக் குடியுரிமையை ஓர் அடிப்படை உரிமையாக வழங்கியிருக்கிறது. அத்தகைய இவ் உரிமை மதத்தின் அடிப்படையிலோ அல்லது நாட்டின் அடிப்படையிலோ இருக்க முடியாது. அத்துடன் இந்தச் திருத்தச் சட்டதிருத்தமானது நாட்டில் நிலவும் எந்த பிரச்சினைகள் எதற்கும் தீர்வுகளைத் தராது. மாறாக, மேலும் அதிக அளவில் பிரச்சனைகளையே உருவாக்கி விடும்.

மேலும் நாடு முழுவதற்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்துடன் தேசியக் குடிமக்கள் பதிவேட்டு நடைமுறை விரிவாக்கப்படும் என்று மோடி - பா.ஜ.க அரசாங்கம் பிரகடனம் செய்திருப்பது என்பது தற்போதைய இந்தியக் குடியரசின் அடித்தளமாக இருக்கக்கூடிய மதச்சார்பற்ற ஜனநாயகத்தை ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் அரசியல் சித்தாந்தமான "இந்துத்துவா ராஷ்ட்ரம்" ஆக மாற்றுவதை குறிக்கோளாகக் கொண்டது எனவும் இந்திய அரசியல் அவதானிகள் விமர்சனம் செய்கின்றனர்.

ஆனால் "குடியுரிமை திருத்தச் சட்டம், இந்திய முஸ்லீம்களுக்கு உரிமை மறுக்கக்கூடியது என்ற நோக்கில் தகவல் பரப்பப்படுகிறது. ஆனால் அதில் உண்மையில்லை. தேசிய குடிமக்கள் பதிவேட்டுடன் இணைத்து குடியுரிமை திருத்த மசோதா மீது சிலர் இவ்வாறு வதந்தி பரப்புகிறார்கள்" என்பதே ஆளும் தரப்பினரின் அல்லது சார்பானவர்களின் வாதமாக இருந்து வருகிறது. குடியுரிமை திருத்தச் சட்டத்தால் முஸ்லீம் இனத்தவர்களைப் பெரும்பான்மையாக கொண்ட பாகிஸ்தான், ஆப்கான், வங்கதேசம் ஆகிய நாடுகளின் சிறுபான்மையினரான ஏனைய மதத்தினர் இந்தியாவில் குடியேற முடியும். அதே நேரம் இந்தச் சட்டத்தால் இந்திய முஸ்லீம்களின் குடியுரிமைக்கு எந்த ஆபத்துமில்லை. தேசிய குடிமக்கள் பதிவேடு கூட நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டாலும் சட்டவிரோத குடியேறிகளை வெளியேற்றுமே தவிர இந்திய குடிமக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்கின்றனர்.


குடியுரிமை திருத்தச் சட்டம் இந்தியாவின் எந்த மதத்தையும், குடிமகனையும் பாதிக்காது என இந்திய மக்களுக்கு ட்விட்டர் வாயிலாக பிரதமர் தொடர்ச்சியாக ட்விட் செய்து வருகிறார். அவற்றுள் சில:

"குடியுரிமைச் சட்டத்திற்கு எதிரான வன்முறைகள் துரதிஷ்டமானவை, கவலை அளிக்கக்கூடியவை. விவாதம், கலந்துரையாடல், எதிர்க்கருத்து ஆகியவை ஜனநாயகத்தின் முக்கிய கூறுகள். ஆனால் பொதுச் சொத்தை சேதப்படுத்துவதற்கும், இயல்பான வாழ்விற்கு இடையூறு செய்வதற்கும் இடமில்லை என்பது நமது பண்பாட்டின் நெறியாகும்."

"குடியுரிமை திருத்தச் சட்டம் 2019 நாடாளுமன்ற இரு அவைகளிலும் அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. இது நிறைவேற பல அரசியல் கட்சிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர். இந்தச் சட்டம் இந்தியாவின் நூற்றாண்டு பழமையான ஏற்பு, இணக்கம், கருணை, சகோதரத்துவம் என்ற கலாசாரத்தை பிரதிபலிக்கிறது."

"குடியுரிமைத் திருத்தச் சட்டம் இந்தியாவின் எந்த மதத்தினரையோ, குடிமகனையோ பாதிக்காது என்று திட்டவட்டமாக நான் உறுதியளிக்கிறேன். இந்தச் சட்டம் தொடர்பாக இந்தியர் எவரும் கவலைப்பட எதுவுமில்லை. பல ஆண்டுகளாக இன்னல்களை சந்தித்து புகலிடம் பெறுவதற்கு இந்தியாவைத் தவிர வழியில்லை என்ற நிலை ஏற்பட்டவர்களுக்கு மட்டுமே இந்தச் சட்டம். எனினும் இவ் வாதங்களை நிராகரிக்கும் அரசியல் அவதானிகள் முஸ்லீம்களுக்கு எதிராக வெளிப்படையாக பாகுபாடு காட்டி அவர்களை இந்தியாவில் இரண்டாம் தர குடிமக்களாக மாற்றும் ஒரு சட்டத்தை பா.ஜ.க அரசு நிறைவேற்றுவதாக வே குற்றம் சாட்டியுள்ளனர்.

பாஜக 2019 இல் இந்தியக் குடியுரிமைச் சட்டங்களையே மாற்றி அமைத்திட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவங்களை சற்றும் கருத்தில் கொள்ளாமல் இந்துத்தத்துவா கொள்கைகளை நடைமுறைப்படுத்த தொடங்கியுள்ளது. நாட்டின் ஒற்றுமைக்குப் பெரியளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதைப் பற்றியோ, இந்தியத் துணைக்கண்டத்திலும் மிகப்பெரிய அளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் குடியுரிமை திருத்தச் சட்டத்தினை நிறைவேற்றியுள்ளது. இந்தியாவில் வாழும் முஸ்லீம்கள் அனைவரும் சமத்துவத்துடனான குடிமக்கள் என்கிற அந்தஸ்தை அளித்து தான் இந்திய அரசமைப்புச் சட்டம் இரு நாட்டு கொள்கையை நிராகரித்து மதச்சார்பின்மைக் கொள்கையை உயர்த்திப்பிடித்தது. இப்போது பாஜக கொண்டு வந்திருக்கும் குடியுரிமை திருத்தச் சட்ட மசோதா அதனை கேள்விக்குட்படுத்தியுள்ளது. இந்தியாவில் எழுச்சி பெறும் ஆர்.எஸ்.எஸ். இன் இந்துத்துவா முஸ்லீம் சமூகத்துடன் மட்டும் நின்றுவிடாது என்பது நிதர்சனமானது.



❝ தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு உதவியபோது சர்வதேசத்திற்கும் குறிப்பாக இந்தியாவிற்கு இலங்கை ஏற்றுக்கொண்ட நிபந்தனை புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களுக்கு நியாயமான, நிரந்தரமான, அரசியல் தீர்வைக் காண்போம் என்பதே அந்த உறுதியிலிருந்து மாறப் பார்க்கிறார்கள் என்று கூறியுள்ளார் சம்பந்தன் அதனைச் சர்வதேசம் குறிப்பாக இந்தியா பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது அவ்வாறு பார்த்திக்கொண்டிருந்தால் தமிழ் மக்கள் ஏமாற்ற ப்பட்டமைக்கான முழுப்பொறுப்பும் அவர்களுக்கே உண்டு என்றும் பேசியுள்ளார் சம்பந்தன். இவ்வாறு பேசியதன் மூலம் சம்பந்தன் ஓர் உண்மையையும் கூறியுள்ளார் இந்தியா புலிகளை அழிக்கப்போகிறது அதற்காக சில நிபந்தனைகளைச் சிறிலங்கா அரசு ஏற்றுக்கொண்டிருந்தது என்பதை முன்கூட்டியே தாங்கள் அறிந்திருந்தும் இவ்வளவு காலமும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருந்ததையும் ஒப்புக் கொண்டுள்ளார் இவரின் வல்லமை இவ்வாறுதான் இருக்கிறது. இனத்தை அழிப்பதை அறிந்தும் வாய் மூடி இவ்வளவு காலமும் இருந்து விட்டு அடுத்த தேர்தலுக்கான தயா ரிப்பில் தன்னையும் அறியாமல் இன அழிப் பில் தங்களின் பங்களிப்பையும் ஒப்புக்கொள்ள வேண்டிய பரிதாப நிலைக்குள் சென்றுள்ளார் சம்பந்தன். ❞

# சம்பந்தனின் வல்லமை அறியாயோ தமிழினமே..!

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா கடந்த 2019-12-19 இல் யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்று முடிந்துள்ளது. 1949 இல் தமிழரசுக்கட்சி தொடங்கப்பட்டபோது கட்சியின் கொள்கை மிகத் தெளிவாக இருந்தது. அதுதான் சமஷ்டி என்ற பெயர்ப்பலகை. ஆனால் எழுபது ஆண்டுகளின் பின்னர் "பெயர்ப்பலகை வேண்டாம்", என்று கூறிக் கொண்டு சிங்கள மக்கள் வைத்திருக்கும் ஒற்றை ஆட்சி என்ற "எக்கியராஜ்ஜேப்" என்ற பெயர்ப்பலகையுடன் தமிழரசுக்கட்சி பயணிக்கிறது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய சம்பந்தன் தான் தயாரித்து வைத்திருந்த உரையில், உலக நாடுகள், அதிலும் குறிப்பாக இந்தியா புலிகளை அழிக்க முழு உதவி கொடுத்தது என்றும், அவ்வாறு அழித்த பின்னர் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்க இலங்கை அரசு ஒப்புக்கொண்டிருந்தது என்றும் கூறிப் "புலிகளை அழிக்கப்போவது தங்களுக்கு முன்னரே தெரிந்திருந்தது", என்றும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அவர் தனது உரையில் தமிழரசுக்கட்சியைப் பலப்படுத்து மாறும், வல்லமையுடைய கட்சியின் பின்னால் வருமாறும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை முன்வைத்துப் பேசி முடித்துள்ளார். இவர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டதால் தமிழரசுக்கட்சியில் இவர் இல்லையா? என்ற வினா எழுகிறது. ஏனெனில் கட்சிக்காரர் சிறப்பு விருந்தினராக எவ்வாறு வந்திருக்க முடியும்? முடியாது. எனவே, இவர் வேறு கட்சியைச் சார்ந்தவரா? என்ற வினாவும் ஒருங்கே எழுகின்றது.

சம்பந்தன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் என்றபடியால் தான் அவ்வாறு அழைக்கப்பட்டாரா? என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தொடங்கப்பட்டு பதினைந்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்னமும் அது தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத அமைப்பாகவே இருக்கிறது. அது ஒரு கட்சியல்ல.. எனவே அவர் த.தே.கூவினராகவும் அழைக்கப்பட்டிருக்க முடியாது. உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தோற்றம் பெற்றபொழுது இருந்த கட்சிகளில் இரு கட்சிகள் இன்று அதில் இல்லை. அதேநேரம் அப்பொழுது இல்லாத கட்சி ஒன்று இப்பொழுது இணைக்கப்பட்டுள்ளது. தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரசு, டெலோ, ஈபிஆர்எல்எப் ஆகியனவே முன்னர் தொடங்கப்பட்டபோது இருந்த கட்சிகளாகும். இதில் காங்கிரசு 2010 இலேயே விலகிச் சென்று விட்டது.பின்னர் 2015 தேர்தலுக்குப் பின்னர் ஈபிஆர்எல்எப் உம் பிரிந்து சென்று விட்டது. எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து ஐம்பது விழுக்காடு கட்சிகள் பிரிந்து சென்று விட்டன. இந்நிலையில் புளொட் சேர்க்கப்பட்டுள்ளது. முன்னர் இந்தப் புளொட் குழுவை கூட்டமைப்பை உருவாக்கியவர்கள் இணைத்துக் கொள்ளவில்லை என்பதும் இங்கே நோக்கப்பட வேண்டியதாகும். இந்நிலையில்தான் சம்பந்தன் வல்லமை உள்ள கட்சியுடன் ஒன்றிணையுமாறு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்யாமல் வைத்திருப்பது ஏன்? என்று இதுவரை எவருக்கும் தெரியாது.

சம்பந்தன் கூறும் வல்லமை உள்ள கட்சி என்பது கூட்டமைப்பா? தமிழரசுக்கட்சியா? என்பதைத் தெளிவாக்க வேண்டும். ஏனெனில் பதிவு செய்யப்படாத ஒரு கட்சியுடன் எவ்வாறு ஒன்றிணைவது? கூட்டமைப்பு தான் வல்லமை உள்ள கட்சி என்றால், அதனை அவர் வல்லமை உள்ள கட்சிகள் என்று தான் கூறியிருக்க வேண்டும். அப்படி இல்லாமல் தமிழரசுக்கட்சி தான் வல்லமை உள்ள கட்சி என்று கருதியிருந்தால் அக்கட்சியில் இவரின் பங்கு என்ன? ஏனெனில் சிறப்பு விருந்தினராகவே அவர் எழுபதாவது விழாவில் பங்குகொண்டுள்ளார். முன்னர் மாணவர் ஒன்றியம் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களிடம் முன்வைக்கவெனத் தயாரித்த கோரிக்கைகளில் தமிழரசுக் கட்சி, புளொட், டெலோ ஆகியன கையெழுத்திட்டிருந்தன. ஆனால் அக்கோரிக்கைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளாகக் கருத முடியாது என்றும் கூறியவர் சம்பந்தனே. அப்படியானால் வல்லமை உள்ள கட்சியின் பின்னால் என்று எதனைச் சம்பந்தன் காட்டுகிறார்? என்று குழப்பமாகவே இருக்கிறது. எது வல்லமை உள்ள கட்சி என்று கூறும் வல்லமை கூடச் சம்பந்தனுக்குக் கிடையாது என்பதே இவற்றிலிருந்து தெளிவாகிறது.

இவ்வாறு வல்லமை உள்ள கட்சி என்று கூறும் சம்பந்தர் அடுத்து இன்னொன்றையும் கூறுகிறார். அதாவது இந்தியாவைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டாமாம். யார் இந்தியாவைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள்? இந்தியா ஈழத் தமிழ் மக்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறதா அல்லது தமிழ் மக்கள் இந்தியாவைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்களா? இங்கே தான் ஓர் உண்மை புதைந்துள்ளது. தற்பொழுது இந்தியாவில் நடக்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தினால் தமிழ் மக்களைத் தான் சந்தேகக் கண்கொண்டு இந்தியா பார்க்கிறது என்பது தெட்டத் தெளிவாகி உள்ளது. ஆப்கானிஸ்தான் மியான்மார், பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகிய நாடுகளில் இருந்து ஏதிலிகளாக இந்தியாவிற்குள் இசுலாமியர்களும் இந்துக்களும், பௌத்தர்களும், கிறித்தவர்களும், பெரும் தொகையில் இடம்பெயர்ந்து வந்துள்ளனர். இவர்களில் இந்துக்களுக்கு குடியுரிமை வழங்குவதற்காக ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சட்டத் திருத்தத்தை எதிர்த்து மாபெரும் போராட்டங்கள் இந்தியா முழுவதிலும் பல்கிப் பெருகி வருகிறது. இந்திய அரசு முதலில் ஏதிலிகளாக வந்த கிறித்தவர்களுக்கும் குடியுரிமை வழங்கப்பட மாட்டாதென்று கூறியது பின்னர் அவர்களுக்கு வழங்குவதற்கான திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. ஆனால் இலங்கையில் இருந்து சென்று அங்கு ஏதிலிகளாக முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக வாழும் ஈழத் தமிழர்களுக்கு அவர்கள் இந்துக்களாக இருந்தும் குடியு ரிமை வழங்க முடியாது என்று கூறி விட்டது. அதாவது இசுலாமியர்களை ஒதுக்கும் இந்திய இந்துத்துவ பாஜக அரசு தமிழ் மக்கள் இந்துக்களாகவே இருந்தும் ஈழத் தமிழ் மக்களுக்குக் குடியுரிமை வழங்க மறுப்பது தமிழ் மக்கள் மேல் உள்ள சந்தேகத்தினால் தான் என்பதைச் சம்பந்தன் புரிந்து கொள்ள மறுப்பது ஏன் என்பதுதான் விளங்கவில்லை.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நடந்த கார்கில் போரில் இந்தியாவின் படையில் பங்கு கொண்டு அரசால் புகழ்ந்து போற்றப்பட்ட இசுலாமியர் ஒருவர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவிலேயே வாழ்ந்து வருகிறார். அவருக்கே குடியுரிமை இல்லை என்றாகிவிட்டது. இந்நிலையில் தான் ஈழத்து அகதிகளையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது இந்திய அரசு. ஆனால் "இந்தியா உதவும், சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டாம்" என்று பேசுகிறார் சம்பந்தன். தனது கட்சியால் முடியாததை இந்தியா பெற்றுத் தரும் என்று கூறுவது தான் சம்ப ந்த வல்லைமையா?

தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு உதவியபோது சர்வதேசத்திற்கும் குறிப்பாக இந்தியாவிற்கு இலங்கை ஏற்றுக்கொண்ட நிபந்தனை புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களுக்கு நியாயமான, நிரந்தரமான, அரசியல் தீர்வைக் காண்போம் என்பதே அந்த உறுதியிலிருந்து மாறப் பார்க்கிறார்கள் என்று கூறியுள்ளார் சம்பந்தன் அதனைச் சர்வதேசம் குறிப்பாக இந்தியா பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது அவ்வாறு பார்த்திக்கொண்டிருந்தால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டமைக்கான முழுப்பொறுப்பும் அவர்களுக்கே உண்டு என்றும் பேசியுள்ளார் சம்பந்தன். இவ்வாறு பேசியதன் மூலம் சம்பந்தன் ஓர் உண்மையையும் கூறியுள்ளார் இந்தியா புலிகளை அழிக்கப்போகிறது." அதற்காக சில நிபந்தனைகளைச் சிறிலங்கா அரசு ஏற்றுக்கொண்டிருந்தது என்பதை முன் கூட்டியே தாங்கள் அறிந்திருந்தும், இவ்வளவு காலமும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருந்ததையும் ஒப்புக் கொண்டுள்ளார். இவரின் வல்லமை இவ்வாறுதான் இருக்கிறது. இனத்தை அழிப்பதை அறிந்தும் வாய்மூடி இவ்வளவு கால்மும் இருந்து விட்டு அடுத்த தேர்தலுக்கான தயாரிப்பில் தன்னையும் அறியாமல் இன அழிப்பில் தங்களின் பங்களிப்பையும் ஒப்புக்கொள்ள வேண்டிய பரிதாப நிலைக்குள் சென்றுள்ளார் சம்பந்தன்.

## - சிலம்பு -

தமிழரசுக் கட்சியின் எந்தப் போராட்டத்தில் பங்குகொண்டவர் இந்த வல்லமைகொண்ட சம்பந்தன் என்றால் அவர் போராட்டங்களில் பங்கு கொண்டதில்லை என்பது தான் வரலாறு. ஆனால் தாங்கள் போராட்டங்களை நடத்தியவர்கள் போல் கூறுவதும் தந்தை செல்வா தாங்கள் சிங்கள இனத்திற்கு எதிராகப் போராடவில்லை என்று தனக்குக் கூறியதாகவும், சிங்களத் தலைவர்களைப் பகைக்கக்கூடாது என்று தன்னிடம் கூறியதாகவும் கூறி மகிழ்கிறார் சம்பந்தன். யார் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடினார்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் பகிரங்கமாகவே எமது போர்ாட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிரானது என்று சர்வதேசத்திற்கே கூறியது சம்பந்தனுக்கு நினைவில் இல்லையாக்கும். தற்பொழுது சம்பந்தனின் வல்லமை என்ன அவர் எந்தக் கட்சியினர் அக்கட்சியின் வல்லமை என்ன என்பனவெல்லாம் அம்பலமாகி விட்டது. இந்தியாவின் தயவில் தமிழ் மக்களை வழிநடத்தலாம் என்ற மிக மிகப் பலவீனமான ஒருவராகவே சம்பந்தன் மக்களின் கண்களுக்குத் தெரிகிறார். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள் சம்பந்தனுக்கு எது ஆயுதம்..



- தி. உதயசூரியன் -

# ஜனாதிபதியின் அறிவிப்புக்களும் மக்களின் எதிர்பார்ப்புக்களும்

இலங்கையின் புதிய ஜனாதிபதி தெரிவாகி ஒரு மாத காலம் நிறைவடைந்துள்ளது. நாட்டின் எதிர்கால நிலவரம் எப்படியிருக்கும் என்பதை உய்த்துணர்ந்து கொள்வதற்கு இந்த ஒரு மாத காலத்தினுள் அவரது நடவடிக்கைகள், அறிக்கைகள் துணை நிற்கின்றன. தவிரவும் அயல் நாடான இந்தியாவுக்கு அவர் மேற்கொண்ட பயணத்தின் போது வெளிவந்த அறிக்கைகள் செய்திகள் என்பனவும் உதவுகின்றன.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் தேசத்தினது அபிவிருத்தி ஒன்றையே குறிக்கோளாக கொண்டுள்ளார் என்பதையே அவரது அறிக்கைகள், நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. சகல வழிகளிலும் அபிவிருத்தி கண்டுவிட்டால் நாட்டிலுள்ள சகல பிரச்சினைகளும் இல்லாது ஒழிந்துவிடும் என்பதாகவே ஜனாதிபதியின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

கலாநிதி அப்துல் கலாம் அவர்கள் இந்திய ஜனாதிபதியாக விளங்கிய சமயம் ஒரு நாள் ஹைதராபாத் நகரில் உரையாற்றினார். அந்த சொற்பொழிவுக்குப் பின்னர் தம்மிடம் வந்து கையெழுத்துக் கேட்ட பத்து வயதுச் சிறுமி ஒருத்தியிடம் "உன் எதிர்கால ஆசை என்ன?" என்று வினவினார். அதற்கு அந்தச் சிறுமி "ஒரு வளர்ச்சியைந்த இந்தியாவில் நான் வாழ வேண்டும்" என்று பதிலளித்திருந்தார். பின்னாளில் தன்னுடைய இந்திய 2020 என்ற புத்தகத்தில் அந்தச் சிறுமிக்கும், அவளது இலக்கிய வேட்கையில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு இந்தியனுக்கும் இந்த நூல் சமர்ப்பணம் என்று கூறி சமர்ப்பணம் செய்திருந்தார் டாக்டர் கலாம் அவர்கள். அந்த ஹைதாராபாத் சிறுமி போலவே இலங்கையிலுள்ள சிறுவர் சிறுமிகளுக்கும் ஏனையோருக்கும் ஒரு வளர்ச்சியடைந்த தேசத்தினைக் கையளிக்க ஜனாதிபதி விரும்புகின்றார் போலத் தெரிகிறது. ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களது பதவியேற்பு நடந்த பின்னர் விடுத்த உத்தியோகம்சார் அறிவிப்பு அரச பணிக்குழு சார்ந்ததாகவே அமைந்திருந்தது.

ஒரு நாட்டின் நிர்வாகத்தினை நிரந்தர நிர்வாகம், அரசியல் நிர்வாகம் என வகுத்து நோக்குவர் ஆய்வாளர். நிரந்தர நிர்வாகத்தினை உண்மை நிர்வாகம் என்றும் கூறுவார். காலத்துக்காலம் தேர்தல் ஒன்றின் மூலம் நாட்டின் அரசியல் நிர்வாகம் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றது. மக்கள் ஆணை என்பது அரசியல் நிர்வாகத்திற்கே வழங்கப்படுகின்றது. அரசியல் நிர்வாகமே கொள்கைத் திட்டமிடல், அபிவிருத்தி, பாதுகாப்பு போன்ற மக்கள் நலன் சார் தீர்மானங்களை மேற்கொள்கின்றது. இலங்கையில் அரசியல் நிர்வாகத்தின் தலைவராக ஜனாதிபதி விளங்குகின்றார். அவருடன் கூடவே பிரதமர் மற்றும் அமைச்சர்களும் அரசியல் நிர்வாகத்தின் பாதுகாவளர்களாக விளங்குகின்றனர். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல் மேற்பார்வை செய்தல் போன்றன நிரந்தர நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அமைச்சுக்களின் செயலாளர்கள் முதற்கொண்டு சாதாரண அலுவலகங்களின் ஊழியர்கள் வரை உண் மை நிர்வாகத்தினுள் உள்ளடங்குகின்றனர்.

உண்மை நிர்வாகிகளது அலுவலக ங்கள், வங்கிகள், வைத்தியசாலைகள், விவசாயம் சார் பணிமனைகள் மற்றும் அனைத்து அரச அலுவலகங்களி லும் அரசியல் நிர்வாகிகளது. அதாவது தேர்தல் ஒன்றின் மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதவி வகிக்கவெனத் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரமுகர்கள் வகிக்கும் பதவி நிலைகள் ககாரணமாக அவர்களது படங்களை வைப்பது நீண்டகால வழக்கமாக இருந்து வருகிறது. இதற்காகப் பெருந்தொகை பணமும் செலவிடப்பட்டு வந்தது. இந்தப்பணம் நாட்டின் பொதுப் பணமாகும்.

தேர்தல் ஒன்றின் போது ஐந்து, அல்லது ஆறு ஆண்டு காலம் பதவி வகித்த அரசியல் நிர்வாகத்தினர் மாறி புதிய நிர்வாகிகள் பதவிக்கு வருகின்றனர் எனில் பழைய நிர்வாகிகளது படங்கள் அகற்றப்பட்டு புதிய நிர்வாகிகளது படங்கள் சபையேறும்.

அது கடந்த காலம்

இனிவருங்காலத்தில் இந்த நடைமுறை இருக்கக்கூடாது என ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் கணிசமான காலம் வாழ்ந்தவர். அனுபவசாலி. அமெரிக்க ஐக்கிய நாடு வளர்ச்சியடைந்த வல்லரசு நாடாக உலக அரங்கில் தன்னை நிலை நிறுத்தியுள்ளது. அது போன்றே உலகின் பல நாடுகளும் உலக அரங்கில் தமது செல்வாக்கை நிலை நிறுத்த முயன்று வருகி ன்றன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போன்றவை கூட்டாக இணை ந்து தமது இலக்குகளை எட்ட முயல்கின்றன.

நாட்டின் ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் நிர்வாகப் பகுதியினர் மேற்கொள்ளும் மக்கள் நலன் சார் அபிவிருத்தித் திட்டங்கள் உரிய இலக்கினை எட்ட வேண்டுமானால் அரச பணிக்குழுவினர் சிறப்பாகச் செயலாற்ற வேண்டும். சாதாரண அலுவலக ஊழியர் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை அரச பணிக் குழுவினர் காணப்படுகின்றனர் இவர்களது நியமனம், பதவி உயர்வு போன்றவற்றில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமை அபிவிருத்திக்குப் பெருந்தடையாக இருந்தமை வெளிப்படையான உண்மை. படித்திருந்தும் அரச வேலைவாய்ப்பற்றிருந்த இளைஞர்களால் அரசுக்கு எதிராக கிளர்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டமை உலகின் பல நாடுகளில் இடம் பெற்றுள்ளன. கிளர்ச்சிகளின் பின்னர் அதற்கான காரணகாரியங்கள் மற்றும் சூழ்நிலை நிர்ப்பந்தங்கள் புற்றிய ஆராய்வதற்கு துறைசார் நிபுணர்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுப் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. உலக அளவில் நோத் கொத் ரவலியன் பரிந்துரைகள், புல்டன் குழு பரிந்துரைகள் அரச பணிக்குழுவினர் நியமனம், பதவியுயர்வு போன்றவை தொடர்பில் பிரசித்தமான பரிந்துரைகளாகக் கொள்ளப்ப டுகின்றன. கொழும்பில் உள்ளவர்களுக்கு "பால் (கிரி) எங்களுக்கு கெக்கிரி" என்பது இலங்கையில் கிராமப்புற இளைஞர்களது அனுபவமொழி.

பணிக்குழு ஆட்சியில் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுபவங்களிலிருந்தே பொதுச்சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு போன்ற சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. இருந்த போதிலும் அவற்றின் எல்லைகள் தாண்டியும் சிற்சில காரியங்கள் நடந்தேறியுள்ளன.

புதிய ஜனாதிபதி தமது அனுபவ இலங்கையின் யதார்த்த நிலைமைகளைச் சரிவரப் புரிந்து கொண்டவராகத் தன்னை வெளிப்படுத்த விரும்புகிறார் போல் தெரிகின்றது. மீள் குடியேற்றம், வீடமைப்பு போன்ற ஏதேனும் ஒரு தேவையின் பொருட்டு அரச அதிகாரிகளை நாடிச் செல்லும் போது அவர்களில் சிலர் தாம் பொதுமக்களின் ஊழியர் என்பதை மறந்து தம்மை சர்வ அதிகாரிகள் போல் காட்டிக் கொள்வது ண்டு. அதனால் விரக்தியும் வேதனையுமுற்ற மக்கள் ஏராளம் என்பதை ஏற்கனவே ஜனாதிபதி அறிந்திருக்கிறார். அரச பதவிக்கு வந்தவர்கள் தமது செல்வாக்கு இன்னதென்று பொதுமக்கள் மீது காட்டாதிருக்க வேண்டும். தமது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும். என்பதையே ஜனாதிபதி விரும்புகின்றார். அதன் ஓர் அம்சமாகவே முதல் அடியாகவே அரச அலுவலகங்கள் எவற்றிலும் அரசியல் நிர்வாகத்தினரின் படங்கள் காட்சிப்படுத்தக் கூடாது என்ற ஜனாதிபதியின் உத்தரவு காணப்படுகின்றது. ஜனாதிபதியின் உத்தரவினால் பல மில்லியன் ரூபாய் பொதுப்பணம் மீதப்படுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்வாறு மீதப்படுத்தப்படும் நிதி நாட்டின் அபிவிருத்திக்கே பயன்படும் என்று நம்புவோம்.

ஜனாதிபதியின் அறிவிப்புகள் யாவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளது போல் நடைமுறைக்கு வருமானால் இன்னும் சிறிது காலத்தில் ஓர் வளர்ச்சியடைந்த நாடாக இலங்கைத்தீவு மிளிரும் என நம்பலாம்.

# ஆட்சி மாற்றத்தின் பின்..
# யாழ். பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள்

- அனுசரன் -




புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு முக்கிய விடயங்கள் பேசுபொருளாகின. முதலாவது கூட்டுத்தாபனங்கள். நிலையான சபைகளுக்கான தலைவர்களை நியமித்தல் மற்றும் அரசாங்கத்தின் ஆட்சேர்ப்புக் கொள்கை தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்களாகும். இக்கருத்து பல்கலைக்கழகத்தின் உண்மையான வளர்ச்சியை விரும்பும் தரப்பினர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இரண்டாவது பேசுபொருள் நவம்பர் 27 மாவீரர் நாள் பற்றியதாகும். மாவீரர் நாளையொட்டி பல்கலைக்கழகம் களேபரத்துக்குள்ளாகியமை தொடர்பானதாகும். நடைபெற்ற அஞ்சலி நிகழ்வையொட்டி இடம்பெற்ற சம்பவங்கள் பல்கலைக்கழகத்துக்குள் ஒருவித அச்சத்தை தோற்றிவித்துள்ளது.

ஜனாதிபதி அவர்கள் இனிவரும் காலங்களில் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிலையான சபைகளுக்கான தலைவர்களை தேர்ந்தெடுக்கும் போது நியமிக்கப்பட்ட குழு ஒன்றின் பரிந்துரையின் அடிப்படையிலேயே தெரிவுகள் இடம்பெறும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதற்கென ஆறு பேர் கொண்ட குழவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. கல்வியாளர்களைக் கொண்ட இக்குழுவில் அரசியல்வாதிகள் எவரும் இடம்பெறவில்லை. நிலையான சபைகளுக்குள் பல்கலைக்கழகங்களும் உள்ளடங்கும். திறன் தகைமை அவசியமற்ற ( தொழிலாளி, வேலை உதவியாளர் போன்ற Unskilled jobs) தொழில்களுக்கு அந்தப் பிரதேசத்திலுள்ள வறுமையான நிலையிலுள்ளோரிடமிருந்தே ஆட்சேர்ப்பு இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி வளாகத்தை சூழவுள்ள கிராமங்களிலிருந்து பணிக்கமர்த்தப்பட்ட இளைஞர்கள் நாட்கூலி அடிப்படையில் அவ்வளாகத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். நிரந்தரப் பணிகளுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறத் தயாரான நிலையில் இந்த இளைஞர்கள் புறக்கணிக்கப்பட அவர்கள் உண்ணா நோன்பில் குதித்தார்கள். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடும்.

அமைச்சரவைப் பட்டியல் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும் போது குறித்த அமைச்சரின் விருப்பத்திற்கமைய இது இடம்பெறாமல் சகல பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலும் கவனத்திற் கொள்ளப்படும். மேலும் இவ்விடயங்களை இனி ஜனாதிபதி செயலகமே கையாளும் எனவும் அவர் அறிவித்துள்ளார். மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் உயர்கல்வி அமைச்சராக இருந்த எஸ்.பி. திஸநாயக்காவுடன், உள்ளுர் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா இணைந்து பல்கலைக்கழக கல்விசாரா ஆட்சேர்ப்பினை தரங்களை கருத்திற் கொள்ளாத முழுமையான அரசியல் ஆட்சேர்ப்பாக மாற்றியிருந்தார். இரண்டாவது பேசுபொருள் மாவீரர் நாளையொட்டி பல்கலைக்கழக மாணவர்களுக்கும் நிர்வாகத்திற்கம் ஏற்பட்ட பெரும்முறுகல் நிலையாகும். பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியான பேராசிரியர் கந்தசாமி அவர்களுக்கு இராணுவ மற்றும் பொலிஸ் உயர்மட்டங்களிலிருந்து அழுத்தங்கள் கிடைத்ததாக தகவல்கள் உண்டு முதலில் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் நிகழ்வுகளைத் தவிர்க்குமாறு மாணவர் ஒன்றியத்திற்கு கடிதம் மூலம் அறிவித்த அவர், பின்னர் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதை (out of bounce) தடைசெய்தார். இறுதியில் 27 ஆம் திகதி மதியம் 2 மணியுடன் பல்கலைக்கழக ஆசிரியர்களையும், ஊழியர்களையும் வெளியேறப் பணித்தார். தான் பதவி விலகப்போவதாக தனக்கு நெருங்கியவர்களுடன் உரையாடியுமுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர்தான் உயர்கல்வி அமைச்சராக பதவியேற்ற அமைச்சர் பந்துல குணவர்த்தன பல்கலைக்கழகங்களின் மாணவர்களை தான் தந்தையாக இருந்து வழிநடத்தப்போவதாக குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதி அவர்கள் நவம்பர் 27 அஞ்சலி நிகழ்வுகளை தான் தடைசெய்யப் போவதாக வெளிவந்த செய்திகளை மறுத்திருந்தார். இவ்விடயத்தில் அரச சட்டதிட்டங்கள் எல்லாவற்றிற்கும் அப்பால் பல்கலைக்கழக மாணவர்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து பேராசிரியர், கந்தசாமி போன்ற அனுபவஸ்தர்கள் தனக்கு கீழ் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்குச் சரிவரப் போதிக்க வேண்டியதன் அவசியத்தை நவம்பர் 26 மற்றும் 27 சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன. மாணவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படும் தன்மையினர். இவர்களில் பெரும்பாலானோர் கிராமங்களிலிருந்தும் வறிய மற்றும் நடுத்தர குடும்பங்களிலிருந்தும் பெரிய கனவுகளுடன் பல்கலைக்கழகங்களுக்குள் பிரவேசித்தவர்கள் கணிசமானளவு பீடாதிபதிகளும், விரவுரையாளர்களும் தம்மை பல்வேறு வழிகளிலும் ஒடுக்க முனைவதாக தமக்குள் குமுறிக்கொண்டிருப்பவர்கள்.

அண்மையில் கூட முகாமைத்துவ பீடத்தில் மாணவியொருவரின் குடும்பத்தின் துக்க நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பரீட்சையொன்றை பகிஸ்கரித்த ஒரு அணி மாணவர்கள் தண்டிக்கப்பட்டனர். அவர்கள் அப் பரீட்சையில் சித்தியடையாதவர்களாகவும், பின்னர் இடம்பெற்ற அப் பரீட்சை மீள் பரீட்சையாகவும் கருத்திற் கொள்ளப்பட்டது. பரீட்சை விதிகளின் படி இது சரியாகவிருப்பினும் மொத்த அணியுமே பகிஸ்கரிக்கும் போது வகுப்பிலுள்ள ஒரு சிலர் சுய விருப்பில் பரீட்சை எழுதுவது சாத்தியமானதா? மேலும் தமக்கு வேண்டிய மற்றும் அரசியல் செல்வாக்குள்ள மாணவர்களுக்கு மீண்டும் மீண்டும் பரீட்சை எழுத (Mercy Chance) அனுமதிக்கும் பீடச் சபைகளும், மூதவையும் எந்த விதிகளின் கீழ் இச்சலுகைகளை வழங்கினார்கள் என்று கூறமுடியுமா? மாணவர்களின் இந்த நியாயமான வினாக்களுக்கு பல்கலைக்கழக உயர்மட்டங்களிலிருந்து ஒருபோதும் தெளிவான பதில்கள் கிடைப்பதில்லை எனவே கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் மாணவர்கள் நிர்வாகத்தின் மீதான தமது அதிருப்தியை வெளிக்காட்டவே முனைவர். நாடெங்கும் உள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் கிளர்ச்சியை கையாள்வதற்கும், மாணவர்களை ஆற்றுப்படுத்துவதற்கும், மாணவர்களை சினேகபூர்வமாக கையாள்வதற்கும் புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதில் ஒன்று Proctor (புறொக்ரர்) முறையாகும். சிரேஸ்ட மாணவர் ஆலோசகருக்கு மேலதிகமாக இம்முறை விளங்கும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிகவும் காலந்தாழ்த்தி இப்போது தான் இம் முறை அமுலாகியுள்ளது. பல்கலைக்க ழகத்தில் புதிதாக Proctor ஆக நியமிக்கப்பட்டவர் எதிர் கொண்ட முதற் பிரச்சினையாகவும்,அவருக்கான பயிற்ச்சிக் களமாகவும் நவம்பர் 26 மற்றும் 27 சம்பவங்கள் விளங்கின. இங்கு வேடிக்கையென்னவென்றால் சிரேஷ்ட மாணவர் ஆலோசகருக்கு உரிய பணிகள், அதிகாரங்கள் மற்றும் Proctor க்குள்ள பணிகள்,அதிகாரங்கள் பற்றி தெளிவான பாகுபாடும் வரையறையும் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை.

மிகுந்த அனுபவஸ்தரான பேராசிரியர் கந்தசாமி அவர்கள் தனக்கு அறிவுரை கூறுபவர்கள் மற்றும் தகவல்களைக் காவி வருவோரின் தகைமைகள் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும். மிக முக்கியமாக "மாணவர்களை தடுத்து நிறுத்துவோம் இதற்காக உங்களுடன் உடன்கட்டை ஏறுவோம்" என்ற பாணியிலான "வாளி" பேச்சாளர்கள் பற்றி அவர் அதிக விழிப்புடன் இருக்க வேண்டும். எனினும் ஒரு சில விரிவுரையாளர்களும், தொழிற்சங்கமொன்றும் பேராசிரியர் கந்தசாமி அவர்களை பொறுமை காக்குமாறும் இராஜினாமா முடிவை கைவிடுமாறும் வேண்டிக் கொண்டதாகவும் தகவல்கள் உள்ளன.

நவம்பர் 27 ஆம் திகதி திடீரென பல்கலைக்கழக வெளிவாயில் கதவுகள் மூடப்பட்டவுடன், கடமையின் நிமித்தம் வெளியே சென்றிருந்த ஊழியர்களும், தமது பணிகளுக்காக பல்கலைக்கழகம் செல்ல வேண்டியிருந்த விரிவுரையாளர்களும் உள்ளே செல்ல முடியவில்லை. மாணவர்களுக்கு உள்நுழைய தடைவிதிக்கப்பட்டதால் தனியார் ஒப்பந்த சிற்றுண்டிச் சாலைகளும் நட்டமடைய விரும்பாமல் மூடப்பட்டுவிட்டன. தேனீர் அருந்த வெளியே சென்றவர்களும், வெளியே செல்ல விரும்பியவர்களும் ஆத்திரத்துடன் பாதுகாப்பு ஊழியர்களை கடிந்து கொண்டனர். வெளிவாயில் கடமையில் இருந்த பாதுகாப்பு ஊழியர்களுக்கும், பதில் பிரதம பாதுகாப்பு அதிகாரிக்கும் நிலைமையை இலாவகமாகக் கையாளத் தெரியவில்லை.

அவர்கள் மாணவர்களுடனும், தம்முடனும் முரண்பட்ட விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்களுடனும் முரண்பாட்டு போக்கையே கையாண்டனர். சில தவறான தகவல்களையும் பேராசிரியர் கந்தசாமி அவர்களுக்கு வழங்கினர். சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட ஓரிருவர் மாணவர்கள் பல்வேறு இடங்களில் பதுக்கி வைத்திருந்த விளக்கேற்றுவதற்கான எண்ணெயைத் திருடியும் சென்றனராம். மாணவர்களின் அபிலாஷையை நன்கு புரிந்து கொண்ட பல பாதுகாப்பு ஊழியர்கள் கூட தமது தலைமையுடன் முரண்பட் விரும்பாமல் ஒதுங்கிக் கொண்டனர்.

ஆக மொத்தம் நவம்பர் 26, 27 சம்பவங்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு ஒரு படிப்பினையாக அமைந்திருக்க வேண்டும். அவர்கள் அதனைப் புரிந்து கொண்டார்களோ இல்லையோ பல்கலைக்கழகத்திற்குள்ளும் அதனைச் சூழவும் நிலைமையை அவதானித்து கொண்டிருந்த புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு இது நிச்சயமாக எதிர்காலத்தில் பல்கலைக்கழக பிரச்சினைகளைக் கையாள நல்லதொரு பரீட்சைக் களமாக அமைந்திருக்கும் வேடிக்கை மட்டுமே பார்ப்பதாக காட்டிக் கொண்ட அவர்கள் சிறந்த அனுபவத்தைப் பெற்றுக் கொண்டனர்.




இன்று இலங்கையில் பல்வேறு இடங்களில் நிறுவப்படுப் காற்றாலை மின்சார உற்பத்திக்கு எதிரான போராட்டங்கள் பரவலாக காண முடிகிறது. பின்வரும் கட்டுரையானது ஒரளவு காற்றாலை மின்சார உற்பத்தியின் நன்மை, தீமைகளை எடுத்துரைக்கின்றது. இந்த கட்டுரை காற்றாலை ஆற்றலின் வெவ்வேறு நன்மைகள் மற்றும் தீமைகள் குறித்து ஆராய்கிறது. இன்று பயன்பாட்டில் உள்ள மிகவும் பிரபலமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் ஒன்றாக காற்றை உருவாக்குவதைக் கண்டறியவும். காற்று விசையாழிகளின் பயன்பாட்டைச் சுற்றியுள்ள சர்ச்சை மற்றும் இது நியாயமா என்பதைப் பற்றி அறிக.

**காற்றாலை ஆற்றலின் நன்மைகள்**

காற்றுப் பலவிதமான நன்மைகளைக் கொண்டுள்ளது மற்றும் மனிதனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக படகோட்டம் மற்றும் அரைக்கும் பணியில் பயன்படுத்தப்படுகிறது. இப்போதெல்லாம், காற்றின் முக்கிய பயன்பாடுகளில் ஒன்று சுத்தமான மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகும். வலதுபுறம் குதித்து, காற்றின் ஆற்றலின் வெவ்வேறு நன்ம்கைளைப் பார்ப்போம்.

**1. காற்றாலை புதுப்பிக்கத்தக்கது மற்றும் நிலையானது**

காற்று புதுப்பிக்கத்தக்க மற்றும் நிலையான வளமாகும். புதைபடிவ எரிபொருட்களின் இருப்புக்களைப் போலல்லாமல் (நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு போன்றவை) அது ஒருபோதும் வெளியேறாது. இது எங்கள் எதிர்கால எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்ய உதவுவதில் காற்று விசையாழிகளை ஒரு சாத்தியமான விருப்பமாக மாற்றுகிறது.

**2. இது சுற்றுச்சூழலுக்கு நல்லது**

காற்றாலை ஆற்றல் என்பது மனிதனுக்குத் தெரிந்த மிகவும் சுற்றுச்சூழல் நட்பு ஆற்றல் மூலங்களில் ஒன்றாகும். காற்றாலை விசையாழிகள் மின்சாரத்தை உருவாக்கும் போது மாசுபாட்டை உருவாக்காது என்ற எளிய உண்மையை அடிப்படையாகக் கொண்டது. புதுப்பிக்க முடியாத பெரும்பாலான எரிசக்தி ஆதாரங்கள் எரிக்கப்பட வேண்டும். இந்த செயல்முறை கார்பன் டை ஆக்சைடு (CO2) மற்றும் மீத்தேன் (CH4) போன்ற வாயுக்களை வளிமண்டலத்தில் வெளியிடுகிறது. இந்த வாயுக்கள் காலநிலை மாற்றத்திற்கு பங்களிப்பதாக அறியப்படுகிறது. இதற்கு மாறாக, மின்சாரம் உற்பத்தி செய்யும் போது காற்று விசையாழிகள் கிரீன்ஹவுஸ் வாயுக்களை உருவாக்குவதில்லை. சத்தம் மற்றும் காட்சி மாசுபாடு இரண்டும் காற்று விசையாழிகளின் இரண்டு சுற்றுச்சூழல் குறைபாடுகள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இருப்பினும், இந்த காரணிகள் பூமி, நீர் அட்டவணை அல்லது நாம் சுவாசிக்கும் காற்றின் தரம் ஆகியவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தாது.

**3. இது புதைபடிவ எரிபொருள் நுகர்வை குறைக்கிறது**

காற்றாலை ஆற்றலில் இருந்து மின்சாரம் தயாரிப்பது புதைபடிவ எரிபொருட்களை எரிக்க வேண்டிய அவசியத்தை குறைக்கிறது. இது கார்பன் உமிழ்வைக் குறைப்பது மட்டுமல்லாமல், பூமியின் இயற்கை வளங்களின் குறைந்து வரும் பொருட்களைப் பாதுகாக்கவும் உதவுகிறது. இதன் விளைவாக, நிலக்கரி, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு போன்ற புதைபடிவ எரிபொருட்களின் இருப்பு மிக நீண்ட காலம் நீடிக்கும்.

**4. காற்றாலை இலவசம்**

புதுப்பிக்க முடியாத எரிசக்தி ஆதாரங்களைப் போலல்லாமல், காற்று உடனடியாகக் கிடைக்கிறது மற்றும் அனைவருக்கும் பயன்படுத்த இலவசம். மக்கள் ஒவ்வொரு நாளும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக (படகோட்டம் மற்றும் விண்ட்சர்ஃபிங் போன்றவை) காற்றைப் பயன்படுத்துகிறார்கள். பயன்பாட்டு நிறுவனங்கள் காற்றாலை விசையாழிகளுக்கு மின்சாரம் பயன்படுத்துகின்றன. அவை பெரும்பாலும் கடல் அல்லது கடல் காற்று பண்ணைகளின் ஒரு பகுதியாக நிறுவப்படுகின்றன. காற்றாலை பண்ணைகள் நூற்றுக்கணக்கான விசையாழிகளைக் கொண்டிருக்கலாம் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை உருவாக்க முடியும். பயன்பாட்டு நிறுவனங்கள் இதை வாடிக்கையாளர்களுக்குப் போட்டி விலையில் விற்க முடிகிறது.

**5. காற்று விசையாழிகள் ஒரு சிறிய தடம் கொண்டவை**

காற்று விசையாழிகள் ஒப்பீட்டளவில் சிறிய நில தடம் கொண்டவை. அவை தரையிலிருந்து மேலே உயர முடியும் என்றாலும், அடிவாரத்தில் நிலத்தில் ஏற்படும் தாக்கம் மிகக் குறைவு. அவை பெரும்பாலும் வயல்களில், மலையடிவாரங்களில் அல்லது கடலில் காணப்படுகின்றன. இந்த இடங்களில், அவை சுற்றியுள்ள நிலத்திற்கு எந்தத் தீங்கான காரியத்தையும் ஏற்படுத்தாது. விவசாயிகள் இன்னும் தங்கள் வயல்களை விவசாயம் செய்யலாம், கால்நடைகள் மலைகளை மேய்க்கலாம், மீனவர்கள் இன்னும் கடலில் செல்லலாம்.

**6. தொழில்துறை மற்றும் உள்நாட்டு காற்று விசையாழிகள் இரண்டும் கிடைக்கின்றன**

காற்று விசையாழிகள் பெரிய காற்றாலைப் பண்ணைகளுக்கு மட்டுமல்ல. சிறிய, குறைந்த சக்திவாய்ந்த விசையாழிகளைப் பல இடங்களில் காணலாம். அவை பண்ணைகள், தொழிற்சாலைகள் மற்றும் பெரிய தனியார் குடியிருப்புகளுக்கு நல்ல பொருத்தம். போர்ட்டபிள் விண்ட் டர்பைன்களும் கிடைக்கின்றன, மேலும் பயணத்தின்போது சிறிய சாதனங்களுக்கு சக்தி அளிக்க முடியும்.
சிறிய உள்நாட்டு காற்று விசையாழிகள் ஒரு கட்டிடத்தின் மின்சார விநியோகத்தின் ஒரு பகுதியை வழங்க உதவும். இத்தகைய நிறுவல்கள் பெரும்பாலும் பிற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பங்களுடன் இணைக்கப்படுகின்றன. சோலார் பேனல்கள் மற்றும் புவிவெப்ப வெப்பமாக்கல் அமைப்புகளுடன் நிறுவப்பட்டிருப்பதை நீங்கள் அடிக்கடி காணலாம்.

**7. காற்றாலைகளால் தொலை இடங்களுக்குச் சக்தியை வழங்க முடியும்**

தொலைதூர இடங்களுக்கு சக்தியைக் கொண்டுவருவதில் காற்றாலை விசையாழிகள் முக்கிய பங்கு வகிக்கக்கூடும். இது சிறிய கிராமங்கள் முதல் தொலைநிலை ஆராய்ச்சி வசதிகள் வரை அனைத்திற்கும் பயனளிக்கும். இந்த இடங்களை ஒரு பிரதான மின்சாரம் வரை இணைப்பது சாத்தியமற்றது அல்லது மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கலாம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், காற்றாலை விசையாழிகளுக்கு பதில் இருக்கலாம்.

**8. காற்றாலை தொழில்நுட்பம் மலிவானதாகி வருகிறது**

முதன்முதலில் காற்றாலை விசையாழி 1888 இல் செயல்படத் தொடங்கியது. அப்போதிருந்து, அவை மிகவும் திறமையாகவும் மலிவு விலையிலும் மாறிவிட்டன. இதன் விளைவாக, காற்றாலை மின் தொழில் வளர்ச்சியடைந்துள்ளது. இப்போதெல்லாம், காற்றாலை பண்ணைகள் மற்றும் முழுமையான விசையாழிகள் பெரும்பாலான நாடுகளில் காணப்படுகின்றன. அரசாங்க மானியங்களும், காற்றாலை ஆற்றல் தொழில்நுட்பங்களின் விலையைக் குறைக்க உதவுகின்றன. உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் காற்றாலை விசையாழிகளை நிர்மாணிப்பதற்கான சலுகைகளை வழங்குகின்றன.

**9. காற்று விசையாழிகள் குறைந்த பராமரிப்பு**

காற்றாலை விசையாழிகள் பராமரிப்புச் சோதனைகளுக்கு இடையில் பல மாதங்கள் நீடிக்கும். நவீன விசையாழிகளுடன் ஒப்பீட்டள்வில் குறைந்த பராமரிப்பு ஆகும். பழைய விசையாழிகள் நம்பகத்தன்மை சிக்கல்களை அனுபவிக்க முடியும் என்றாலும், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இதை மேம்படுத்த உதவுகின்றன.

**10. காற்றாலை ஆற்றல் குறைந்த, இயங்கும் செலவுகளைக் கொண்டுள்ளது**

காற்றின் ஆற்றல் பயன்படுத்த இலவசம் என்பதால், அதன் இயங்கும் செலவுகள் குறைவாக உள்ளன. அனைத்து பயன்பாட்டு நிறுவனங்களும் செய்ய வேண்டியது அவற்றின் காற்று விசையாழிகளை வாங்குவது, நிறுவுவது மற்றும் பராமரிப்பது. பின்னர் அவர்கள் எரிபொருளை வாங்குவதற்குப் பதிலாக ஒரு இலவச ஆற்றல் மூலத்திலிருந்து பயனடையலாம்.

**11. இது மிகப்பெரிய ஆற்றலைக் கொண்டுள்ளது**

காற்றாலை ஆற்றல் நம்மைச் சுற்றிலும் பரவலாக அணுகக்கூடியதாக உள்ளது. காற்றாலை விசையாழிகள் குறிப்பிடத்தக்க காற்றின் வேகம் திறமையாக இருக்க வேண்டும், எனவே ஒரு விசையாழியின் இடம் முக்கியமானது. இருப்பினும், பெரும்பாலான பகுதிகளில் காற்று விசையாழிகள் மற்றும் காற்றாலைப் பண்ணைகளுக்கு ஏற்ற இடங்கள் உள்ளன. இங்குள்ள முக்கியமான அம்சம் என்னவென்றால், காற்றின் ஆற்றல் வேறு சில புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை விடக் குறைவாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, பூமியின் மேற்பரப்புக்கு அருகில் குறிப்பிடத்தக்க புவிவெப்ப செயல்பாடு இருக்கும் இடத்தில் புவிவெப்ப மின் உற்பத்தி நிலையங்கள் மிகவும் திறமையானவை. மற்றொரு உதாரணம் நீர்மின் அணைகள் ஆகும், இது ஒரு நீர்த்தேக்கத்தை உருவாக்கப் பொருத்தமான நதி மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதி தேவைப்படுகிறது.

**12. இது ஆற்றல் பாதுகாப்பை அதிகரிக்கும்**

மின்சாரத்தை உருவாக்க காற்றாலை சக்தியைப் பயன்படுத்துவதன் மூலம், புதைபடிவ எரிபொருட்களின் மீதான எங்கள் சார்புநிலையைக் குறைக்க உதவுகிறோம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நாடுகள் நிலக்கரி, எண்ணெய் மற்றும் அல்லது இயற்கை எரிவாயுவை பிற நாடுகளிலிருந்து பெறுகின்றன. போர், அரசியல் மற்றும் அத்தகைய பொருட்களுக்கான ஒட்டுமொத்த தேவை அவற்றின் விலையை ஆணையிடுகிறது. இது சில நேரங்களில் கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் அல்லது விநியோக பற்றாக்குறையை ஏற்படுத்தக்கூடும். உள்ளூர் புதுப்பிக்கத்த க்க எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம், ஒரு நாடு இயற்கை வளங்களின் வெளிப்புற விநியோகங்களில் தங்கியிருப்பதைக் குறைக்க முடியும். இதன் நேரடி விளைவாக, நாடு அதன் எரிசக்திப் பாதுகாப்பை அதிகரிக்க முடியும்.

**13. காற்றாலை ஆற்றல் தொழில் வேலைகளை உருவாக்குகிறது**


காற்றாலை விசையாழிகள் வணிக ரீதியாக சாத்தியமானதாக மாறியதிலிருந்து காற்றாலை ஆற்றல் தொழில் வளர்ச்சியடைந்துள்ளது. இதன் விளைவாக, தொழில் உலகம் முழவதும் வேலைகளை உருவாக்கியுள்ளது. காற்று விசையாழிகளின் உற்பத்தி, நிறுவல் மற்றும் பராமரிப்பிற்கான வேலைகள் இப்போது உள்ளன. காற்றாலை ஆற்றல் ஆலோசனையில் கூட நீங்கள் வேலைகளைக் காணலாம். சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை (IRENA) இன் அறிக்கையின்படி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில் 2017 ஆம் ஆண்டில் உலகளவில் 10 மில்லியனுக்கும் அதிகமான மக்களை வேலைக்கு அமர்த்தியுள்ளது. இந்த வேலைகளில், 1.15 மில்லியன் பேர் காற்றாலை மின் துறையில் இருந்தனர். இந்த வேலைகளில் 500,000 க்கும் அதிகமான வேலைகளை வழங்குவதில் சீனா முன்னணியில் உள்ளது. சுமார் 150,000 வேலைகளுடன் ஜெர்மனி இரண்டாவது இடத்தில் உள்ளது, மேலும் 100,000 காற்றாலை ஆற்றல் வேலைகளுடன் அமெரிக்கா மூன்றாவது இடத்தில் உள்ளது.

**நன்றி : வணக்கம் லண்டன்**

**தொடரும்...**




## டேவிட் லோ (David Low)



காட்டூன்களை வரைந்து அதன் மூலம் அரசியல் விடயங்களைச் சாதாரண மக்களுக்கு எளிதில் புரிந்து கொள்ளும்படி செய்து இன்று உலகில் சிறந்த காட்டூன் ஓவியர் என்ற பெயர் பெற்றவர் டேவிட் லோ. 1920களில் இவரது பிரசன்னத்தினைக் காணமுடியும். காட்டூன் வரைதலில் அதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டுவந்த இறகுப்பேனா அல்லது அதையொத்த வரைதற் கருவிகளுக்குப் பதிலாக இவர் நுட்பமாக தூரிகைகளைக் கையாண்டார். இதனால் காட்டூன் அதன் எளிமையான வடிவத்திற்கு வரலாயிற்று. இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது ஹிட்லர், முசோலினியின் கூட்டுக்கு எதிரான சர்வதேச சமூகத்தின் உணர்வலைகளைப் பிரதிபலித்தலில் டேவிட் லோவின் காட்டூன்கள் முக்கியமானவை



பிரபல காட்டூனிஸ்ட்டாகவும், ஒரு சிறந்த கரிக்கேச்சரிஸ்ட்டாகவும் காணப்படும் இவர் 07.04.1891 இல் நியூஸ்லாந்தில் பிறந்தார். 1911 இல் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகருக்குக் குடிபெயர்ந்து "த புல்லட்டின்" (The Bulletin) பத்திரிகையில் இணைந்தார். இவர் அங்கு நன்கு அறியப்பட்ட ஒரு காட்டூனிஸ்ட்டாக விளங்கினார். 1916 இல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ஏகாதிபத்திய மாநாட்டிலும் இவரது புகழ் பேசப்பட்டது. அக்காலத்து அவுஸ்திரேலியப் பிரதமர் பெல்லி ஹியூக்ஸ் (Billy Hughes) தொடர்பில் பல்வேறு காட்டூன்களை வரைந்து வெளியிட்டார். அதனை இவர் பெல்லி புக்ஸ் (Billy Book) எனும் தலைப்பில் ஒரு புத்தகமாக 1918 இல் வெளியிட்டும் இருந்தார். இி் புத்தகத்தின் மூலம் இலண்டனில் வெளியாகும் லண்டன் ஸ்ரார் (London Star) பத்திரிகையின் ஒரு பகுதி உரிமையாளராக இருந்த ஹென்றி கட்ப்யூரி (Hendry Cadbury) இன் கவனத்தை ஈர்த்தார். இதன் பிரகாரம் 1919 இல் டேவிட் லோ ஹென்றி கட்ப்யூரியுடன் இணைந்து த லண்டன் ஸ்ரார் பத்திரிகையில் 1919 முதல் 1927 வரையான காலப்பகுதியில் பணியாற்றினார். மேலும் அவுஸ்திரேலிய உள்நாட்டுப் போர் மற்றும் எத்தியோப்பியாவின் பிராந்தியப் படையெடுப்பு, 1936 இன் கோடைக்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள், ஸ்பானிய உள்நாட்டுப் போர், மற்றும் போர்க்கால பிற நிகழ்வுகள் தொடர்பிலும் எண்ணிலடங்காத பல காட்டூன்களை வரைந்த பெருமை இவரையே சாரும். தவிரவும் லண்டன் சீன் (London Scene) எனும் பத்திரிகையில் லோ அன்ட் ரெறி (Low & Terry) எனும் பெயரில் ஹொறாஸ் உடன் இணைந்து அவருடைய கட்டுரைகளுக்கான விளக்கப்படங்களையும் வரைந்தார்.





1937 இல் நாஜி பிரச்சார அமைச்சர் "ஜோசப் கோப்பெல்ஸ்" பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் "லோட் ஹலிபக்ஸ்" என்பவருக்கு டேவிட் லோவின் காட்டூன்கள் ஆங்கிலேய, ஜேர்மன் உயர்வுகளைச் சேதப்படுத்துவதாகக் குறிப்பிட்டார். இவரது படைப்புக்கள் பல பிரிட்டிஸ் வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் இடம்பெற்றன. மேலும் இவரது படைப்புக்கள் ஹிட்லர், ஜோசப் ஸ்ராலின், முசோலினி, பிரான்ஸிஸ்கோ பிரான்கோ ஆகியோருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியது. இவரது வீர்யமான காட்டூன்களால் பிரிட்டிஸ் செய்தி ஊடகங்கள் இவரை ஒரு போர் வீரர் என அடையாளப்படுத்தியது.



யுத்தத்திலேயே வரைந்த காட்டூன்கள் "ஹிட்லரின் எழுச்சியும், வீழ்ச்சியும்" (RISE and FALL of Hidler) என்ற தலைப்பின் கீழ் அடக்கமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். மேற்குலகின் ஆதிக்கம் வாய்ந்த கார்டூனிஸ்டாக வலம் வந்த டேவிட் லோவின் கார்டூன் படைப்புக்கள் தற்போதும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக "Evening Standard" எனும் பத்திரிகையில் வெளிவந்த கார்டூன்களை லண்டனிலுள்ள "Political Cartoon Gallary" யில் ஹென்ட் பல்கலைக் கழகம் பாதுகாத்து வருகிறது. தவிரவும் 57 அசல் கார்டூன்கள் மற்றும் பல்வேறு பத்திரிகைகளில் வெளியான கார்டூன்கள் அவுஸ்திரேலியாவின் தேசிய நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேற்குலகின் ஆதிக்கம் வாய்ந்த கார்டூனிஸ்டாக வலம் வந்த டேவிட் லோ 19.09. 1963ல் இலண்டனில் இறந்தார்.

(தொடரும்)



## தன்னம்பிக்கை.

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலகசரித்திரமாகும்.

உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரியபாவம். உன்னை விட உயர்ந்தவர் யாரும் இல்லை பிரம்மமே நீ என்பதை அனுபவம் மூலம் தெரிந்துகொள்

முன்வினை அது இது என்பதையெல்லாம் தூக்கி வீசி எறி. முற்பிறவியின் வினைப் பயனால் இப்போதுநீ இந்தபிறவியினைஎடுத்திருப்பதுஉண்மையானால் நல்ல செயல்களை செய்வதன் மூலம் முற்பிறவியின் தீய பலன்களை அழித்து இந்தப் பிறவியிலேயே நீ ஏன் ஜீவன் முக்தனாகக் கூடாது? விடுதலை அல்லது ஆத்மஞானம் உன் கைகளிலேயே இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்

உன்னிடம் அளவற்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள் பிறகு அந்த நம்பிக்கையை நாட்டிற்று வழங்கு

நானும் நீங்களும் நாம் ஒவ்வொருவரும் ரிஷியாவோம் என்ற தன்னம்பிக்கை நமக்கும் ஏற்பட வேண்டும் நமக்குள் எல்லா ஆற்றலும் இருப்பதால் நம்மால் உலகத்தையே இயக்கமுடியும்

இளைஞர்களே எனது நம்பிக்கை எல்லாம் உங்களிடம் தான் இருக்கிறது நமது தாய்த் திருநாட்டின் அறைகூவலுக்குச் செவிசாய்ப்பீர்களா, உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால் என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்காகக் காத்து நிற்கிறது என்பேன். எதற்கும் கலங்காத நம்பிக்கை எதற்கும் தளராத தன்னம்பிக்கை வேண்டும். சிறுவனாக இருந்த போது எனக்கு என்னிடம் அத்தகைய தன்னம்பிக்கை இருந்தது. உங்கள் ஒவ்வொருவருக்கும் உங்களிடத்தில் நம்பிக்கை இருக்கவேண்டும். அளப்பரிய ஆற்றல் உங்கள் ஒவ்வொருவருடைய ஆன்மாவிலும் அடங்கிக் கிடக்கிறது என்பதில் உங் கள் முயற்சியால் இந்தியா மறுமலர்ச்சி பெறும் புதிய இந்தியா உருவாகிவிடும் என்பதில் உங்களுக்கு அசையாத நம்பிக்கை எழ வேண்டும்

## மஹாகவி பாரதியின் 137 ஆவது ஆண்டு நினைவாக..

# பாரதியும் பாரதிதாசனும்



இலந்தை சு. இராமசாமி

சுப்புரத்தினம் ஒரு பாட்டு பாடு என்று கேட்டார் கல்யாண மாப்பிள்ளை வேணுநாயக்கர்

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் - பின்னும்
வேறொன்றும் கொள்வாரோ,

என்ற பாரதியின் பாடலைக் கணீரென்று உச்சஸ்தாயில் பாடினார் கனக சுப்புரத்தினம்
அங்கே பாரதியும் அமர்ந்து பாட்டைக் கோட்டுக் கொண்டிருந்தார்
பிறகு அங்கென்ன நடந்தது?
பாரதிதாசன் என்று பின்னாளில் தனது பெயரை மாற்றிக் கொண்ட கனகபுத்திரத்தின் வார்த்தைகளிலேயே பார்க்கலாம்
பாரதியார் பாடி வெளியிட்டிருந்த சுதேச கீதங்கள் புதுச் சேரியில் படித்தவர்களிடையே உலவியிருந்தது குவளை (குவளை கிருக்ஷ்ணமாச்சாரியார்) அந்தப் பாட்டுக்களில் சிலவற்றைக் கூவிப் பாட நான் கேட்டிருக்கிறேன். என் ஆசைக்கு ஒரு புத்தகம் கிடைத்தது. ஒரு நாள் சுதேச கீதங்களை நான் படித்து வந்தேன். ராகத்தோடு முணுமுணுத்து வந்தேன். இந்திய பத்திரிகைகயின் சித்திர விளக்கங்கள் சிறுகதைகள் ஈசுவரன் தருமராஜா கோயில் தெரு வளைவுகள் குவளையின் கூச்சல் இவை எல்லாம் சுதேச கீதங்களின் உட் பொருளை எனக்கு விளக்கின. அதன் பிறகு கொஞ்சம் விக்ஷயமான உணர்வோடும் நான் ஓர் இந்தியன் என்ற அகம் பாவத்தோடும் அப் பாடல்களை பாட முடிந்தது நாளடைவில்!
எனது கொட்டடி வாத்தியார் வேணு நாயக்கருக்கு கல்யாணம் வந்தது. மாலை 3 மணிக்கு கல்யாணபந்தலில் பாட்டுக் கச்சேரி நடந்தது பாடகரில் நானும் ஒருவன்.
கணீரென்று ஆரம்பித்தேன். வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறெதன்று கொள்வாரோ ! அப்போது என் பின் ஒரு புறமாக இதற்கு முன் நான் வீதியில் பார்த்த சில உருவங்கள் உட்கார்ந்திருந்தன அவற்றில் ஒன்று ரவிவர்மா பரமசிவம்
வேணு நாயக்கர் இன்னும் பாடு சுப்பு என்றார்
நான் தொன்று நிகழ்ந்த தனைத்தும் என்ற பாட்டைப் பாடினேன். சபையில் இருந்தவர்கள் மொத்தம் முப்பது பேர் இருக்கும். 30 பேர்வழிகளில் சுமார் 25 பேர்கள் நான் பாடும் போது அந்த ரவிவர்மா பரமசிவத்தையே பார்க்கிறார்கள் அந்த பரமசிவத்தின் பெயர் விலாசம் என்ன என்று எனக்கு தெரியாது ஆனால் அவர் ஒரு குறிப்பிடத்தக்கவராக இருக்கலாம் என்று தோன்றிற்று
என்னை மேலும் பாடச் சொன்னார் வேணுநாயக்கர் பாடினேன் அப்போது வேணு நாயக்கர் "அவுங்க யார் தெரியுமில்லே" என்று என்னைக் கேட்டார்
நான் கொஞ்சம்
படம் உணர்ந்து பாடுகிறீர்கள்
வேணு நாயக்கர் அப்போது அவுங்கதானே அந்தப் பாட்டெல்லாம் போட்டது சுப்பிரமணிய பாரதி என்று சொல்றாங்களே என்று பரமசிவம் படத்தை எனக்கு அறிமுகப்படுத்தினார்
எனக்கு நாணம் சந்தோக்ஷம் பயம் அப்போது என் மூஞ்சியை நான் கண்ணாடி எடுத்துப் பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியமேயில்லை நான் ஓர் அசல் இஞ்சி தின்ற குரங்கு.
பாரதியார் என்னென்ன என்னிடம் சொன்னார் நான் அப்போது என்ன பதில் சொன்னேன் என்பவைகளைக் கேட்டால் அப்போதே என்னால் சொல்ல முடியாது இப்போது என்னால் சொல்ல முடியுமா?
கடைசியாகப் பாரதியார் சொன்ன வாஉத்தையை மாத்திரம் நான் மறந்து போகிவில்லை அது என் ஆவலைப் பூர்த்தி செய்யும் வார்த்தை அந்த வார்த்தையை அவர் வெளியிட்டவுடன் என் நினைவில் அது தங்காமல் என்னை ஏமாற்றி விடக் கூடும் என்று அதன் முதுகின் மேல் ஏறி உட்கார்ந்து அமிழ்த்திக் கொண்டேன்
அவர் கூறிய வார்த்தைகாளவன
வேணு ஏன் இவரை நம் வீட்டுக்கு அழைத்து வரலே?
நான் வீதயில் அடிக்கடி பார்த்து இவர் ரவிவர்மா படத்தில் காணும் பரமசிவம் போல் இருக்கிறார் என்று ஒப்புக் கூட்டி நினைத்த மனிதர் பாரதியார் என்று தெரிந்து கொண்டது ஒன்று, அவஉ சுதேசி என்பது ஒன்று, அவர் எங்கள் ஊர் பிரபலஸ்தர் பொன்னு முருகேசம் பிள்ளை முதலியவர்களால் பாராட்டப் படுகிறவர் என்பது ஒன்று, அத்தனையும் என் மனதில் சேஉந்து கொண்டு என்னை சந்தோக்ஷமயமாக்கி விட்டன
மறு நாள் காலையில் நான் வேணு நாயக்கருடன் பாரதியார் வீட்டுக்குப் போகப் போகிறேன். மறுநாள் என்பது சீக்கிரம் வரவில்லையே என்பது தான் கவலையாய் கிடந்தது.
நானும் வேணு நாயக்கரும் பாரதியார் வீட்டுக்கு மாடியில் ஏறிப்போகிறோம்.
வீணையின் தொனி ஆனால் அதில் எழுத்துக்களின் உச்சரிப்பு என் காதில் கேட்கிறது. நான் மாடியின் கூடத்தில் பாரதியாரை, அவர் பக்கத்தல் பாடிக் கொண்டிருக்கும் சிவா நாயக்கரை. வாத்தியார் சுப்பிரமணிய ஐயர் தம்பி சாமிநாதஐயரை கோவிந்தராஜு நாயுடுவைப் பார்த்தேன் நாயக்கர் பாட்டுக்கு பாரதியார் ஆஹா போடும் போது நான் கும்பிட்டேன் பாரதியார் கும்பிட்டு வாங்கோ, உட்காருங்கோ வேணு உட்கார் குயில் பாடுகிறது கேளுங்கோ என்றார் சிவா நாயக்கருக்கு பாரதியார் குயில் என்று பெயர் வைத்திருந்தார்
பிறகு சிறது நேரம் சிவா நாயக்கர் பாட்டு அதன் பிறகு என்னைப் பற்றிய விவரம் நடந்தது கொஞ்ச நேரம் ஆனதும் எனக்கு உத்தரவு கொடுங்கள் என்று பாரதியார் அதே கூட்டத்தில் ஒரு புறமாக உட்கார்ந்து எழுத ஆரம்பித்தார் மீதியுள்ள நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். எனக்கு பேச்சு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அங்கு மூலையில் கிடந்த கையெழுத்துப் புத்தகத்தைப் பார்க்க வேண்டும் என்பதிலேயே என் எண்ணம் சென்று மீண்ட வண்ணமிருந்தது. மெதுவாக நகர்ந்து அந்தப் புத்தகத்தின் பக்கத்தில் உட்கார்ந்தேன் பிறகு அதைக் கையில் எடுத்தேன், விரித்தேன், வசமிழந்தேன்.
நான் அதற்கு முன் இலக்கிய இலக்கணத்திலே என் காலத்தைக் கடத்தியிருந்தவன் என் ஆசிரியரும் புதுச்சேரியில் பிரபல வித்துவானுமாகிய பங்காரு பத்தது மகாவித்துவான் பு.அ பெரியசாமிப் பிள்ளை. இவர்களால் நடத்தப்படும் கலைமகள் கழகத்தின் அங்கத்தினர் பழந் தமிழ்ச் செய்யுட்கள் போலவே யாருக்கும் புரியாதபடி எழுதும் போது கூடக் கடுமையான நடையை உபயோகிப்பது தான் கௌரவம் என்ற தப்பெண்ணைமுடையவன்.
பாரதியார் புத்தகம் என்னைப் புதியதோர் உலகில் சேர்த்தது நானும் பாரதியார்.பாடல்கள் எழுதி வைத்துள்ள கையெழுத்துப் புத்தகமும் ஒரு பக்கம் என் அறிவும் அதனுட் புகுந்து அதை விரிவு படுத்தும் விக்ஷயமும் ஒரு பக்கம் என் உள்ளமும் அதில் இனிப்பைச் சேர்க்கும் சிறு சிறு முடிவுள்ள எளிய சொற்களும் ஒரு பக்கம் லயித்துப் போய்க கிடந்தன. பாரதியாரை அங்கிருந்த மற்றவர்களை அவர்க்ள் வார்த்தைகளைக் கவனிக்க என்னிடம் மீந்திருந்த உறுப்புகளை ஒன்றுமில்லை... இப்படி வெகு நேரம்.
இதற்குள் பாரதியார் எழுதி முடிந்தது. கோவிந்த ராஜுலு நாயுடு பீடி பிடித்தாயிற்று. பாரதியாரும் சிவா நாயக்கரும் சுருட்டு பிடித்தாயிற்று. மணியும் 11 ஆயிற்று கடைசியாக சிவா நாயக்கர் என்னை பாரதியாருக்குச் சுட்டிக் காட்ட இவர் தமிழ் வாசித்தவர் சுவாமி என்றார். அதற்கு பாரதியார் இல்லாவிட்டால் என் கையெழுத்துப் புத்தகத்தில் அவருக்கு என்ன இருக்கிறது ? என்றார் அன்புடன் நல்லெண்ணத்துடன்
அதன் பிறகு போய் வருகிறேன் சுவாமி என்றேன்.
பாரதியார் சரி நேரமாகிறதா? நீங்கள் ஓய்வுள்ள நேரத்திலெல்லாம் இங்கு வரணும் என்றார்
இந்தச் சந்திப்பு எப்போது நடந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை. கொட்டடி வேணு நாயக்கரின் திருமணம் எப்பொழுது நடந்தது என்று தெரிந்தால் இது தெளிவாகி விடும் ஆனால் பாரதிதாசனைப் பற்றி பாரதியார் எங்காவது குறிப்பிட்ருக்கிறாரா?
அவர் சுதேசமித்திரனில் எழுதிய தராசு கட்டுரைத் தொடரில்ஓரிடத்தில் குறிப்பு வருகிறது அவரின் பெயர் அதில் குறிக்கப்படவில்லை ஆனால் அவர் அன்று பாரதிதாசன் சொன்ன பாடலை சுதேசமித்தினுக்கு அனுப்பி ஶ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனகசுப்புரத்தினம் எழுதியது என்று குறித்து அனுப்பியதிலிருந்து அன்று பாரதியைச் சந்தித்து பாரதிதாசன் தான் என்பது தெளிவாகிறது. அப்பொழுது தான் அந்தப் புலவரைப் பார்த்ததாக பாரதியின் கட்டுரை குறிக்கிறது
எழுக !நீ புலவன்!
பாரதி எழுதுகிறார்:
இன்று நமது கடைக்கு ஒருதமிழ் கவியரசர் வந்தார் கைக்கோளஜாதி ஒட்டகக் கூத்தப் புலவர் கூட அந்தக் குலம் தானென்று நினைக்கிறேன். இவருக்கு இங்கிலீக்ஷ் தெரியாது. தம்முடைய பெயரை வெளிப்படுத்தக் கூடாதென்று சொன்னார் ஆதலால் வெளிப்படுத்தவில்லை
தராசு முகமலர்ச்சியுடன் சிரித்தது. இப்படி ஒரு கவிராயன் வந்தால் எனக்கு சந்தோசம் எப்போதும் வீண் வம்பு போசுவாரே வந்தால் நான் என்ன செய்வேன்? என்றது
கவிராயரே என்ன விக்ஷயம் கேட்க வந்தீர் ? என்று தராசு கேட்டது
எனக்கு கவிராயர் என்பது பரம்பரையாக வந்த பட்டம். என்னுடைய தகுதியால் ஏற்படவில்லை. அந்தத் தகதி பெற முயற்சி செய்து வருகிறேன். அந்த விக்ஷயமாகச் சில வார்த்தைகள் கேட்க வந்தேன். என்று கவிராயர் சொன்னார்
இதுவரை பாடின பாட்டுண்டானால் சொல்லும் என்று தராசு கேட்டது
இது வரை நாற்பது அல்லது ஐம்பது அடிகளுக்கு மேல் பாடியது கிடையாது இப்போது தான் ஆரம்பம். அது அத்தனை ரஸமில்லை என்று சொல்லிக் கவிராயர் விழித்தார்
மாதிரி சொல்லும் என்றது தராசு.
புலவர் பாடத் தொடங்கினார். தொண்டை நல்ல தொண்டை

காளை யொருவன் கவிச்சுவையைக் - கரை
காண நினைத்த முழு நினைப்பில் - அம்மை
தோளசைத் தங்கு நடம் புரிவாள் - இவன்
தொல்லறி வாளர் திறம் பெறுவான்
ஈக்ஷ எங்கெங்கு காணிலும் சக்தியடா!- தம்பி
ஏழு கடலவள் மேனியடா!
தங்கும் வெளியினிற் கோடியண்டம் - எங்கள்
தாயின் கைப் பந்தென வோடுமடா!
கங்குலில் ஏழு முகிலினமும் வந்து
கர்ச்சனை செய்தது கேட்டதுண்டோ?
மங்கை நகைத்த ஒலியதுவாம் - அவன்
வாயிற் குறுநகை மின்னலடா

தராசு கேட்டது : புலவரே தமிழ் யாரிடம் படித்தீர்?
கவிராயர்: இன்னும் படிக்கவில்லை இப்போது தான் ஆரம்பம் செய்கிறேன்
தராசு: சரிதான் ஆரம்பம் குற்றமில்லை விடா முயற்சியும் தெய்வ பக்தியும் அறிவிலே விடுதலையும் ஏறினால் கவியிலே வலிமையேறும்.
இங்ஙனம் வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கையில் சீட்டிக் கடை சேட் வந்தார்.
கவிராயர், தராசை நோக்கி நம்முடைய சம்பாக்ஷணைக்கு நடுவிலே கொஞ்சம் இடையூறுண்டாயிற்று என்றார்.
தராசு சொல்லுகிறது: உமக்கும் அது தான் காணும் வார்த்தை. நெசவிலே நாட்டு நெசவு மேல் விலைக்கு நெய்வதைக்காட்டிலும் புகழுக்கு நெய்வதே மேல். பணம் நல்லது ஆனால் பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல் காசிப் பட்டுப் போலே பட்டு நெய்ய வேண்டும் அல்லது உறுதியான உழவனுக்கு வேண்டிய கச்சை வேக்ஷ்டி போல நெய்ய வேண்டும். மல் நெசவு கூடாது. மஸ்லின் நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையுமிருக்க வேண்டும். இதற்கு மேல் நல்ல வர்ணஞ் சேர்த்தால் குற்றமில்லை சேராமலிருந்தால் விக்ஷேசம்
அப்போது புலவர் தராரசை நோக்கி நீயே எனது குரு என்று சொல்லி நமஸ்காரம் பண்ணிணார்
தராசு: எழுக புலவன் என்றது
இங்கே பாரதியின் புலவரே தமிழ் எங்கே படித்தீர் என்ற கேள்விக்கு கவிராயர் இன்னும் படிக்கவில்லை இப்போது தான் ஆரம்பம் செய்கிறேன் என்று பதில் சொல்லியிருக்கிறார் ஆனால் பாரதி தாசன் அதற்கு முன்னேயே தக்க புலவர்களிடம் தமிழ் பயின்றிருந்ததாக அவரது வரலாற்றிலிருந்து தெரிகிறது எனவே அடக்கம் காரணமாக பாரதிதாசன் அப்படிச் சொல்லியிருக்கலாம். புலவரே. கவிராயரே என்று பாரதியே அழைத்திருப்பதால் அவர் தமிழில் தேர்ச்சி பெற்றிருந்து பாரதிக்கு முன்பே தெரியும் என்பதும் புலனாகிறது
பாரதி புதுவையில் தங்கியிருந்த போது எனக்கும் அவர்க்கும் தொடர்பு ஏற்பட்டது ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்பு கொண்டிருந்தேன் அப்போது புதுச்சேரியில் வாழ்ந்து வந்த தமிழர்கள் பாரதியாரைக் கவிஞரென ஒப்புக் கொள்ளவில்லை. இவருக்கு தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தக்க புலமை கிடையாது என்பது அவர்களுடைய முடிவாகும் அவருக்கு எழுத்து சொல் யாப்பு பற்றிய அறிவும் தேர்ச்சியும் உண்டு என்பதை நான் வற்புறுத்துவேன் அந்நாளில் அவர் புலமையில் நம்பிக்கை கொண்டவர்களுள் நானும் ஒருவன் என்கிறார் பாரதிதாசன்
இந்தத் தராசு கட்டுரை சுதேசமித்திரனில் 27.10.1916 ல் வெளியாகியிருகிகிறது அப்பொழுதெல்லாம் பாரதியார் கட்டுரை எழுதியனுப்பிய ஒரு வாரத்துக்குள் அவரது கட்டுரை வெளி வந்து விடுவது வழக்கம் எனவே அந்தச் சந்திப்பு1916 ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடந்திருக்க வாய்ப்புண்டு
பாரதிதாசன் பாரதியை எப்பொழுது சந்தித்திருந்தாலும் சரி அதை ஆராய்ச்சியாளர்களிடம் விட்டுவிடுவோம். பாரதிக்கு அவர் செய்திருக்கிற தொண்டு மிக மிகப் பெரியது அவருடைய இலக்கியப் பாதையை மாற்றி அமைத்தவர் பாரதியார் என்பதை பாரதிதாசன் மிகப் பெருமிதத்தோடு சொல்கிறார்
நானோர் பாவேந்தன் என்னும்தன்னைப் பற்றிய கவிதையில்

பாடலிற் பழமுறை
பழநடை என்பதோர் காடு முழுதும்
கண்டபின் கடைசியாய்ச் சுப்பிரமணிய
பாரதி தோன்றியென் பாட்டுக்குப்
புதுமுறை புது நடை காட்டினார்

என்று முடிக்கின்றார்
அவர் பாரதியோடு பழகிய காலத்தில் நடந்த பல நிகழ்ச்சிகளை உரை நடையிலும் கவிதையிலும் நிறையவே எழுதியிருக்கிறார் மேடைப் பேச்சுகளிலும் அவர் பாரதியைக் கௌரவப்படுத்தியது ஏராளம்

## - சிறுகதை -




அவன் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கிறான் ஏன் என்று அவனுக்கே தெரியாது! இதுபோன்ற உணர்ச்சியை அவன் அடிக்கடி அனுபவிக்க நேர்ந்திருக்கிறது. குழப்பம் என்ற அந்த உணர்ச்சியின் பின்னணியில் அவனுக்கு ஏற்பட்டிருப்பது வேதனையா? அல்லது கோபமா? இது அவனுக்கே ஒரு புதிர். ஆனால் அவனுக்கே தெரிகிறது. தனது முகம் சாதாரண நிலையில் இல்லை. கோபத்தால் சிவந்த அல்லது அழுகையால் உப்பி வெளுத்த அல்லது இது போன்ற ஏதோ ஒரு மாற்றம் தனது முகத்தில் தெரிகிறது என்பதை அவன் உணர்கிறான். உணர்ச்சிகளை அப்படியே வெளிப்படுத்தும் முகம் அவனுடையது. உள்ளத்தின் ஆழத்தில் அவற்றை அமுக்கி வைத்துவிட்டு, முகத்தை மலரவைக்கின்ற அந்த ரஸவாதம் அவனுக்குத் தெரியாது.

அவன் அந்த அரைவாசி திறந்திருந்த வாசற் கதவினூடாக வெளியே தெரிகின்ற காட்சியை உற்று நோக்குவது போன்ற பாவனையில் அமர்ந்திருக்கிறான். அவனது விழிகள் அந்த வாசலினூடாகத் தெரிகின்ற பெரிய இலுப்பை மரத்தையும், அதன் பின்னால் தூரத்தில் உயர்ந்து தோன்றும் ஒற்றைத் தென்னைமரத்தையும் தாண்டி நீலநிறத்தில் தெளிந்து தோன்றுகிற வானப் பெரு வெளியில் எதையோ ஊடறுத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அவளது கேள்வி அவனது மௌனத்தை உடைக்கிறது. "தவம்! ஏன் திடீரென்று கோபம் வந்தது?" அவன் மெல்லத் திரும்பி அவளைப் பார்க்கிறான். இதழ்கள் மெல்லப் பிரிந்து, முறுவலைப் பிறப்பிக்கின்றன. தவறு பிறப்பிக்க முயற்சிக்கின்றன. தனது முகபாவத்தை மாற்றுகின்ற அந்த முயற்சியில் தான் தோற்று விட்டதை அவன் உணர்ந்து கொண்ட அதே நேரத்தில், அவளுடைய கூர்மையான விழிகளும் அதனை அவதானித்து, அவனின் இதயத்திற்குப் படம் போட்டுக் காட்டுகின்றன. வெளியே ஒற்றைத் தென்னைமரத்தையும் தாண்டி வானத்தில் நீண்டிருந்த அவனது விழிகள், இப்போது அவள் முகத்தை நோக்கித் திரும்பியிருந்தாலும், அந்த விழிகளின் பார்வை அவளது விழிகளையும் ஊடறுத்துக்கொண்டு அப்பால் சென்றது.

"தனது விழிகளினூடு தன் இதயத்தை அவன் படிக்கிறான்" என்று அவள் நினைத்தாள். அவளது அந்தப் பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாமல் அவன் பார்வையைத் திருப்பி வேறிடத்திற்கு மாற்றினான். தனது கேள்விக்கு ஒரு மறுமொழியும் வராததிலிருந்தும், அவனது முகபாவத்திலிருந்தும் அவன் இப்போதும் உணர்ச்சிக் குவியலாக இருக்கிறான் என்பதை அவள் உணர்ந்து கொள்ளும்போதே, அதற்குக் காரணமாகத் தானும் இருந்துவிட்டேனோ என்று எண்ணி மனம் சோம்பினாள்.

அந்த மனத்தின் சோம்பிய உணர்வும், அவனது பார்வையின் தீட்சண்யமும் சேர்ந்து அவளது பிரகாசத்தைக் குறைத்தது. அந்த திடீர் மாற்றத்தை அவனும் சட்டென உணர்ந்து கொண்டபோது அவனது இதயம் துணுக்குற்றது "ஓ! அவளை மனம் நோக வைத்துவிட்டேனோ?" என்று ஒருகணம் பச்சாத்தாபங் கொண்டு தவித்தான்.
"நான் இவள் மீது கோபங்கொண்டிருந்தேனோ?" என்று அவன் தன்னை தன் இதயத்தைப் பரிசீலித்து மீளாய்வு செய்ய முற்படும்போது, அவள் திடீரென்று உள்ளே போய் வந்தாள். அவன் முன்னே தான் கொண்டு வந்திருந்த குளிர்பானத்தை வைத்தபோது அவன் தன் கன்னப்பொட்டுக்களை விரல்களால் தேய்த்துக் கொண்டு மெல்ல நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

அப்போது மாலைநேரமாக இருந்த பொழுதுங்கூட அவள் குளிர்பானத்தைக் கொண்டு வந்தது தனது உள்ளத்தின் கொதிப்பை தணிப்பதற்காக என்று நினைத்துக் கொண்டபோது அவன் முகத்தில் உண்மையாகவே ஒரு புன்னகை மலர்ந்தது. ஆனால் அந்தப் புன்னகைக்கு அவளிடமிருந்து பிரதிபலிப்பு வரவில்லை. இப்போது அவள் தனக்குள் சிந்திக்கிறாள். தான் தவறான முறையில் நடந்து கொண்டேனோ என்று நினைத்துக் கழிவிரக்கம் கொள்கிறாள். இப்போது அவள், அவன் அமர்ந்திருக்கும் அந்தச் சரிவான கதிரையின் அருகில், கீழ்த்திண்ணையில் உட்கார்ந்திருக்கிறாள். பாதங்களை ஒருங்கு சேர்த்து மார்பளவில் உயர்ந்திருக்கும் முழங்கால்களின்மேல் நாடியை முட்டுக் கொடுத்துக் கொண்டு முதலில் அவன் பார்த்துக் கொண்டிருந்த அந்த வானப் பெருவெளியைப் பார்வையால் துளைத்துக் கொண்டிருந்தாள். அவன் இவளது அந்தத் தோற்றத்தையும் தனது சிந்தனைகளுக்கு எட்டிய அளவில் அவளது மன ஓட்டங்களையும் தனக்குள் இரசித்துக் கொண்டு குளிர்பானத்தை எடுத்து உறிஞ்சினான்.

அவன், "நான் அவள்மீது கோபங் கொண்டிருந்தேனோ?" என்று தனக்குள் மீண்டும் கேட்டுக் கொண்டான். உண்மையில் அவன் கோபம், கவலை என்ற உணர்வுகள் அல்லாத ஏதோ ஒருவகை விபரீத உணர்வையே கொண்டிருப்பதாகப் புரிகிறது. ஒருவேளை ஏமாற்றத்தின் விளைவான ஒரு வெறுப்பாக இருக்க முடியுமோ என்று ஒரு சந்தேகம் எழுகிறது.
சம்பவமே இல்லாத ஒரு சிறு சம்பவம் இத்தனை தூரம் தன் மனதைச் சிதற வைக்கிறதே என்று எண்ணி அவன் வியப்படைந்தான். "எண்ணங்களால் வாழுபவர் வெகு சீக்கிரத்தில் திருப்திப்படுகின்ற அதே நேரத்தில் வெகுவேகமாக அவர்களது நினைவுச்சிகரங்கள் உடைந்து நொருங்கிவிடுகின்றன." என்று அவன் ஒரு முழுமையான வசனமாகவே தனக்குள் நினைத்துக் கொண்டான்.
அன்றிரவு "டயறி" எழுதும்போது அந்த வசனத்தை எழுத வேண்டுமென்றெண்ணி, மனதிற்குள் மறுபடியும் ஒரு முறை சொல்லிக்கொண்டான்.
அவள் இன்னமும் அதே நிலையில் அசையாமல் இருந்தாள். அவளது பார்வையைப் பின்பற்றி அவனது பார்வை, அந்த நீலவானத்தில் நிலைத்தது. தெளிந்த வானத்தில் வெண்பஞ்சுத் திரளான மேகங்கள் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. அவள் அந்தச் சம்பவத்தைப் பற்றியே நினைக்கிறாள் என்று புரிந்து கொண்டபோது, அவனும் அதனை இரைமீட்க முற்பட்டான்.

அன்று மதியம் - அவசரமாக அங்கு வந்த அவள், அவனைத் திரைப்படமொன்றுக்கு அழைத்தாள். அவன் திடீரென்று திகைப்பில் ஆழ்ந்து விட்டான். மிகவும் தரக் குறைவான மூன்றாந்தரச் சினிமா ஒன்றைப் பார்க்க அவள் விரும்புகிறாள் என்பது முதலாவது அதிர்சி, அதற்குத் தன்னையும் அழைக்கிறாள் என்பது மற்றொரு அதிர்ச்சி. அவன் தன்னை ஒரு உயர்தரமான கலைஞனாகவும், அருமையான ரசிகனாகவும் நினைத்து அப்படியே தனது சிந்தனைகளை வளர்த்து வருகிறான். அவள் அதே ஊரில் வசிக்கும் அவனது விசிறி. ஆரம்பத்தில் வெறும் ரசிகை என்று ஆரம்பித்த அந்த உறவு வளர்ந்து ஒரு நட்பாக மாறியிருந்தது. அவனது சிந்தனைகள், மன ஓட்டங்களையே அவள் அப்படியே பிரதிபலித்து வந்ததும், எல்லா விஷயங்களிலும் இருவருக்கும் ஒரே மாதிரியான ஆர்வமும் ஈடுபாடும் ரசனையும் அமைந்ததும் அந்த நட்பைப் பலப்படுத்தியது. அவள் இரசித்துப் புகழும் சங்கீதம் நிச்சயமாக இவனுக்கும் பிடித்திருக்கும். அவனுக்கு வெறுப்பையூட்டும் நாடகம் இவளுக்கும் சலிப்பேற்படுத்தும். இந்த அளவுக்கு ஒரே மனம், ஒரே சிந்தனை ஒரே விதமான ரசனைகளோடு நெருக்கமான நட்பினை வளர்த்துக்கொண்டபோது இன்றைக்கு அவள் வந்து அந்த மூன்றாந்தரக் குப்பையைப் பார்க்க வேண்டுமென்று அவனை அழைத்தபோது அவன் அவளைப் பற்றி நினைத்திருந்த நினைவுகள், அவளுக்கென்று தனது இதயத்தில் கொடுத்திருந்த கௌரவமான புனித ஸ்தானம், அவளைப் பற்றி அவன் உருவாக்கி வைத்திருந்த "இமேஜ்" பிம்பம்.. ஓ! நொடிப்பொழுதில் அந்த பிம்பம் நொறுங்கிவிழ அவன் அந்தத் திரைப்படத்தைப் பற்றி தனது அபிப்பிராயத்தை மிகவும் அருவருப்போடு கூறினான்.

அதற்கு அவள் சமாதானங்கள் சொன்னாள். "தவம்! தரக் குறைவான ரசனையிலே மூழ்கிக் கிடக்கிற ஒரு கூட்டத்தை நாம் இழிவாக நினைத்து ஒதுக்கித் தள்ளுகிறோம். அதேநேரம் அதிஉயர்வான பெரும்பாலும் புத்திஜீவிகளுக்கு மட்டுமே உரியதான - இன்னொரு விதத்தில் சொல்வதானால் புனிதக் கலைகளென்று நாம் நினைக்கிற சிலவற்றை மட்டும் ரசித்துக்கொண்டு அந்த வட்டத்துள்ளே மட்டும் சுற்றிக்கொண்டிருக்கிறோம் இதுவும் ஒரு வகையில் தவறுதானே? அவள் அந்தக் கேள்வியுடன் நிறுத்தி அவனை நிமிர்ந்து நோக்குகிறாள் - அல்லது கூறவிரும்பாமல் மௌனமாக அவளது விழிகளைத் தவிர்த்துத் தன் பார்வையை விலக்குகிறான். அவளது கேள்விக்குப் பொருத்தமாகவும், அழகாகவும் விடை சொல்ல வேண்டும் என்ற நினைவுடன் சிந்தித்துக் கொண்டு விழிகளை அவன் மேயவிடுகிறான்.

அவளது தோற்றத்தில் கூட அந்த ஒரு கணத்தில் நிறைய வேறுபாடு இருப்பதாக அவனுக்குத் தோன்றுகிறது. அவனது உடைகள், அணிகள், நிற்கும் நிலை இவற்றில் கூட இதுவரையில் அவன் கண்டிராத வகையில் அபரிதிமான ஒரு தேவையற்ற கவர்ச்சியும் - அடக்கமற்றதன்மையும் இருப்பதாக அவன் உணர்கிறான்.
ஓ! அவள் இப்போது நிறைய மாறிவிட்டாள். தன்னிடமிருந்து வெகுதூரம் போய்க்கொண்டு இருக்கிறாள். அவனுக்கு அதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவளது வேண்டுகோளுக்கிணங்க அவள் ஒருநாள் அவன் முன்னமர்ந்து அவனுக்கு மிகவும் பிடித்தமான சஹானா ராகப்பாடலொன்றை மிகவும் அருமையாகப் பாடிக்காட்டிய காட்சி அவன் மனதில் தோன்றியது.

நீல நிறத்தில் பூக்கள் போட்ட அந்த மஞ்சள் நிறச் சேலையின் முந்தானையைக் கழுத்தைச் சுற்றி வலது தோளில் கொண்டுவந்து வெண்ணிறமுத்து மாலையில் செருகிக் கொண்டு அவள் அமர்ந்து பாடிய அந்தப் பணிவும், பதவிசும்.. ஓ அந்தத் தோற்றமும், குரலும், பாணியும் கூட அந்த சஹானா ராகத்தினைப் போலவே வெகுநளினமாக நிதானமாக அமைந்திருந்ததை அவன் வெகுவாக ரசித்துப் பாராட்டியது அவனுக்கு நன்றாக நினைவுக்கு வருகின்றது. இன்றைக்கு அந்த ஒரு கேள்வியில் அவளது அந்த "இமேஜ்" அடைந்து நொறுங்க அவளது இரசனைகள், ஆர்வங்கள், ஆற்றல்கள் எல்லாமே பொய்தானோ? என்றொரு சந்தேகத்தை அவனுள் கிளர்ந்தெழச் செய்கிறது.
அந்தச் சந்தேகம் அவனுக்குப் பெருத்த ஏமாற்றத்தை உண்டாக்கியது. அவனைப் பற்றித்தான் போட்டிருந்த கணிப்புத் தவறிவிட்ட ஏமாற்றம். அவள் தன்னை விட்டு ▶

விலகிக் கொண்டிருக்கிறாளோ என்ற ஏக்கம். தான் மட்டும் அந்த உன்னதமான கலாரசனையின் உச்சியில் தனித்து விடப்பட்டு விட்டேனோ என்ற தவிப்பு எல்லாம் சேர்த்து அவனுக்கு ஒருவித வெறுப்பை ஏற்படுத்தியது. அவனுக்கு தன்மீதே ஒரு வெறுப்பு. தன் கணிப்புத் தவறிவிட்டதென்று தன்மீதே ஒரு கோபம். அந்த வெறுப்பும், கோபமும் தனது நிதானத்தை நிர்மூலமாக்கிவிட அவன் அவளோடு வழமைக்கு மாறான முறையில் சற்றுக் கோபமாகவும் வரம்பு மீறியும் பேசிவிடுகிறான். அவனது அந்தப் பேச்சு அவளை வெகுண்டெழ வைத்து விட்டது. அவளும் சிலவார்த்தைகளைப் பேசிவிட்டு உள்ளே போய் விடுகிறாள். இப்போது..?

நடந்து முடிந்துவிட்ட சம்பவத்தின் மூலகாரணத்தைப் பரிசீலித்துத் தம்மீதே குற்றங் கண்டு தங்களுக்குள்ளேயே மறுகிக்கொண்டு அவர்கள் மௌனமாக இருந்தார்கள். அவளின் கண்களில் நீர்ப்படலம் திரையிடப்பட்டிருந்ததைத் துல்லியமான அவன் பார்வை கண்டுபிடித்த போது அவனது மென்மையான இதயத்தில் முள்ளொன்று தைத்து விட்டாற்போல் உணர்கிறான்.

சட்டென்று எழுந்து உள்ளே போகின்றான். அவன் வெளியே புறப்படத்தயாராக வந்து "எழும்பு சந்திரா அந்தப் படத்தை பாத்திட்டு வருவம்" என்று கூறிக் கொண்டு, அவள் விழிகளை நேரே பார்க்கக் கூசி, அதைத் தவிர்ப்பதற்காகக் கீழே சிலிப்பர்களைத் தேடிக் காலில் கொழுவிக் கொள்கிறான்.


அவள் எழுந்து..தானும் சிலிப்பர்களை அணிந்து கொண்டு வெளியே வருகிறாள். நிர்மலமான அவனது முகத்தைப் பார்த்துக்கொண்டு, "இப்ப அந்தப் படம் வேண்டாம். பூங்காவரை போய் உலாவிவிட்டு வருவோம்", என்று சொல்லிவிட்டு நேரே பாதையை நோக்குகிறாள். அவன் வினாக்குறியுடன் அவளைக் குறிப்பாக நோக்கிக் கொண்டு நின்றான். அவள் அதற்குமுன்னே இரண்டு அடிகள் எடுத்து வைத்தவள் நின்று திரும்பி "நான் என்னுடைய இரசனைகளையோ, ஆர்வத்தையோ மாற்றிக்கொண்டு விடவில்லை. எமது சிந்தனைகள் மேலும் விரிவுபடுத்துவதற்கு இப்படியான சில மீறல்கள் உதவும் என்று நினைத்துத்தான் அதைப்பார்க்க விரும்பினேன். அதுவும், அதனை உங்களோடு நன்கு பண்பட்ட ரசனையுள்ளவர்கள் மேலும் தமது கலாரசனையை உயர்த்துவதற்கு இவைகள் வழிவகுக்குமெயானால் அவர்களை இவை கெடுத்துவிட முடியாது." அவன் அவளையே பார்த்துக் கொண்டு கைகளை முன்னாலும் பின்னாலும் தட்டிக்கொண்டு மௌனமாக நின்றான். அவள் தொடர்ந்தாள்.

"ஆனால் இப்போது நாம் அந்தப் படத்தைப் பார்த்துத்தான் ஆகவேணுமென்று ஒன்றுமில்லை. எங்கள் மன அமைதியை மறுபடி பெறுவதற்காகப் பூங்காவரை போய் இருட்டும்போது திரும்பலாம் என்று நினைக்கிறேன்." அவள் கூறிவிட்டு மெல்ல முன்னே திரும்பி நடந்தாள். அவன் மறுமொழி எதுவும் கூறவில்லை. கனத்த மௌனத்துடன் அவளது கால்விரல் மெட்டிகளைப் பார்த்தபடி அவள் பின்னே நடந்துகொண்டிருந்தான்.

**நன்றி : சிரித்திரன்**




## - வீட்டு மருத்துவம் -



# சிறுநீரக கல்லடைப்பு நோயும் நிவாரணமும்

- **வாழைத் தண்டு கூட்டு குழம்பு நல்லது**
- **வாழைத்தண்டை பச்சையாகவோ சாறு பிழிந்தோ அல்லது தயிரில் பச்சடியாகவோ செய்து சாப்பிட்டு வந்தால் உடலில் உள்ள விஷப் பூச்சிகள் நீங்குவதுடன் சிறுநீரகப் பை கற்கள் நீங்கும்**
- **நெருஞ்சிக் கல் குடிநீர் அல்லது நீர் முள்ளிக் குடிநீர் இவை கிட்னியில் கல்லடைப்பை நீக்கும்**
- **அறுகம்புல்லை ஒரு கைப்பிடி அளவு எடுத்து நீர் விட்டு காய்ச்சி வடிகட்டி அதனுடன் பால் சர்க்கரை சேர்த்து குடித்து வர சிறுநீர் சம்பந்தமான கல்லடைப்பு நீங்கும்.**
- **திராட்சைப் பழத்துடன் மிளகை அரைத்து சாப்பிட்டு வர கல்லடைப்பு நீங்கும்**
- **சோளம் இடித்து மாவாக்கி களியாகக் கிண்டி சாப்பிட்டு வர சிறுநீர் கல்லடைப்பு, நீர்ச் சுருக்கல், இருமல் கக்குவான் போன்ற நோய்கள் குணமாகும்**
- **மல்லிகைப் பூக்களை நிழலில் உலர்த்தி காயவைத்து பொடி செய்து தேநீர் போல் அருந்திவந்தால் சிறுநீரகக் கற்கள் நீங்கும்**
- **கற்பூரவள்ளி இலையுடன் செடியைக் கசாயமிட்டுத் தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வர சிறுநீரக் கற்களை கரைத்து வெளியேற்றலாம்**
- **கோவைக் காயை அரைத்து நீரில் கலந்து கொதிக்க வைத்து அதன் சாற்றை காலை மாலை பருகி வந்தால் சிறுநீர் கல்லடைப்பு சிறுநீரகக் கோளாறுகள் நீங்கும்**
- **சுரைக் கொடி, நீர்முள்ளி, வெள்ளரி விதை இவை மூன்றையும் சம அளவு எடுத்து நீரிலிட்டு நன்கு காய்ச்சி பாதியாக வற்றியதும் வடிகட்டி குடித்து வர நீர் எரிச்சல் கல் அடைப்பு நீங்கும்**
- **அசோக மரத்து விதையை உலர்த்தி பொடியாக்கி தண்ணீரில் கலந்து குடித்து வர சிறுநீரகத்தில் ஏற்படும் கல் கரையும்**
- **கேரட் திராட்சை மற்றும் ஆரஞ்சு ஜஸ் என்று ஏதாவது ஒன்று குடித்தாலே கிட்னி கற்கள் கரையும்**
- **நிறைய காய்கறிகள் சாப்பிடுபவர்களுக்கு கிட்னியில் கல் பயமே தேவையில்லை**
- **சிற்றாமணக்கு விதையின் ஓட்டை நீக்கி பருப்பை ஒன்று இரண்டாகப் பொடித்து சட்டியிலிட்டு வதக்கி துணியில் முடிந்து ஒற்றடமிட நீரடைப்பு கல்லடைப்பு பக்கவலி போன்றவை குணமாகும்**



# அழகும் கலைத்துவமும் மிக்க போன்சாய் தொழில்நுட்பம்

போன்சாய் என்றால் பெரிதாக வளரும் மரங்களை சிறிதாக சின்னதட்டில் (சாடி) மண் போட்டு வளர்ப்பது. உதாரணமாக நம்மூரில் ஆல், அரசு, வேம்பு, மருது போன்ற பெரிய மரங்களையும் இவ்வாறு வளர்க்க முடியும். இது தோட்டக்கலை மட்டுமல்ல, ஒரு அழகுக் கலையும் கூட.. மிகவும் ரசித்து பொறுமையாக செய்ய வேண்டிய ஓர் கலை. போன்சாய் என்ற ஜப்பானியச் சொல் புன்சாய் என்ற சீன மொழியிலிருந்து வந்தது. அதன் அர்த்தம் தொட்டி மரம் என்பதாகும். அதாவது சிறு தொட்டியில் வளர்க்கப்படும் மரம் என்று பொருள். நிறையப் பேர் நினைப்பது போல் போன்சாய் என்பது இயற்கையிலேயே சிறிதாக வளரும் மரம் அல்ல. அதுவும் சாதாரண மரம் தான். ஆனால், சிறிதாக இருக்கும்படி பழக்கப்படுத்தப்படுகிறது. அதற்காக அதைக் கொடுமைப்படுத்துவதாக பொருள் அல்ல. வழக்கம் போல போன்சாய்க்கும் நீர், காற்று, மண் சூரிய ஒளி, கனிமப்பொருட்கள் எல்லாம் கொடுக்கிறோம். அவ்வப் போது செதுக்கி விடுகிறோம். அதுதான் இதன் சூட்சுமம். போன்சாய் மரத்தை விதை, தண்டுத்துண்டம் மூலமாக வளர்க்கலாம். அவ்வப்போது வேர், இலை, கிளை போன்றவற்றை கிள்ளி வளர்க்க வேண்டும். சிறு கம்பி வயர் போன்றவற்றால் நாம் விரும்பிய வடிவில் கொண்டுவர வேண்டும். கொஞ்சம் தவறினால் மரம் இறந்துவிடும். வாழ் நாள் முழுவதும் நம் கவனம் அதன் மேல் தேவை. சில மரங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு வாழும், பூக்கும், காய்க்கவும் செய்யும். தொட்டியை மாற்றுவதால் நம் போன்சாய் மரம் சிறிதாக மாறாது. அதற்கு மாறாக புதுச்சத்துக்கள் கிடைக்க உதவுகிறது. தொட்டி மாற்றும் போது வேர்களில் இருக்கும் மண்ணை லேசாக வெட்டி நீக்க வேண்டும். மண்மாற்றிய சிறிது காலம் நிழற்பாங்கான இடத்தில் வைக்க வேண்டும். பின் படிப்படியாக வெயிலுக்கு மாற்றலாம்.



போன்சாய் முறையில் கொய்யா, யம்பு, மாதுளை போன்ற பழப்பயிர்களும் ஆல், அரசு, வேம்பு, மருது போன்ற காட்டுமரங்களும் பூஞ்செடிகளும் வளர்க்க முடியும். வளர்ந்து வரும் நகரமயமாக்கலில் விவசாய நிலங்கள் குறைந்து வருகின்றன. மரவளர்ப்பில் ஆர்வ முள்ளவர்களுக்கு போன்சாய் ஓர்சிறந்த தெரிவாகும். மாடிகளில் ஓர் சிறிய இடத்தில் கூட தொட்டியில் வளர்க்க முடியும். அது மட்டுமன்றி வீட்டினையும் அழகுபடுத்த முடியும்.போன்சாய் வளர்ப்பிற்கு பெரிதாக செலவுகள் ஒன்றுமில்லை. ஆனால் அதிகளவில் பொறுமையும், விடாமுயற்சியும் நேரமும் தேவை. இதை ஒரு பொழுதுபோக்கு கலையாக செய்தால் அனைவராலும் முடியும். போன்சாயின் வருடங்கள் அதிகரிக்க அதிகரிக்க அதன் சந்தைப் பெறுமதியும், வடிவம், அழகு எனடபதனையும் அதிகரித்துக் கொண்டே செல்லும்.



# விக்கினாக்கா

**சுதா வெற்றிச்செல்வி**

வாழ்க்கையில் நாம் பட்ட துயர்கள் எப்போதும் நம் மனதில் இருந்து இலகுவில் அழிந்துவிடுவதில்லை. இறுதி யுத்தத்தின் பின் ஓராயிரம் வலிகள் சுமந்தோம். அந்த வலி சுமந்த நினைவுகளில் ஒன்றே இப்பதிவு.

மணிகிண்டி மலைத் தாக்குதலில் நெஞ்சில் காயம் அடைந்து, வலதுகை பாதிப்படைந்த நிலையில் முகாமில் நின்றேன். ரதியக்கா அந்த முகாமின் பொறுப்பாளராக இருந்தார். நிர்வாக ரீதியான வேலைகளுக்காக அடிக்கடி வந்துபோகும் விக்கினாக்கா என்னைப் பார்க்கும் போதெல்லாம் புன்னகையை பரிசளிப்பாள். அவரது சிரிப்பே முதலில் என்னைக் கவர்ந்தது. பின்பு அவரது தோற்றம். கட்டையாகக் கத்தரிக்கப்பட்ட தலைமுடி அவளின் தோற்றத்திற்கு மிக எடுப்பாக அமைந்திருந்தது. மிகச் சாதாரணமாக உலாவரும் ஒரு சுற்றுலாப் பயணியைப்போல எப்போதும் இலகுவான நடை, உடை, பாவனை, அவளை வரிச் சீருடையில் காண் பது அரிது. சாதாரண சேர்ட்டும் நீளக் காற்சட்டையும் அணி ந்த மிடுக்கான ஒரு நடை நடந்து வரும் அவர் மகளிர் அமைப்பி ன் 3வது பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்றவர்.

"குட்டிய என்னோட விடு. குட்டிய என்னோட விடு" என்று என்னைக் காணும் போதெல்லாம் ரதியக்காவிடம் கேட்பாள்.

"உனக்கென்னத்துக்கு அவள். அவள் சின்னப்புள்ள, பேசாமல் பேசில நிக்கட்டுக்கும் விடு" என்று ரதியக்கா சொல்லிச் சொல்லிச் சொல்லிக் களைத்துப் போனாள். மகளிர் படையணியின் நிர்வாக முகாம்களில் தொட்டாட்டு வேலைகளுக்கு நிற்பதைவிட விக்கினாக்காவுடன் செல்வதில் எனக்கும் விருப்பம்தான். அவவுடன் போனால் சுற்றித் திரியலாம் அல்லவா?

மகளிர் படையணியின் களமுனைச் சாரதிகளில் பெயர் சொல்லத்தக்க தனித்திறனும் தைரியமும் மிக்க அவள், சாரதிகள் அனைவருக்கும் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தாள். சாரதிகளை அதிகம் வளர்த்தெடுப்பதில் அக்கறை காட்டினாள். அதன் விளைவுதான் துடினமும், துடுக்குமாகத் திரியும் என்னைக் கண்டதும் கேட்கத் தோன்றியிருக்கலாம்.

சாரதி என்றால் வாகனம் ஓட்டுவது மட்டுமல்ல அவர்களது வேலை. ஒரு பொறுப்பாளரைப் போன்று பன்முகப்பட்ட வேலைகளையும் மிகக் கவனத்துடன் செயற்படுத்த வேண்டும். முகாமில் இருந்து களமுனைப் போராளிகளுக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் தேவைக்கு ஏற்ப ஏற்றிச் சென்று விநியோகிப்பது தொடக்கம், வெளித்தளங்களுக்கும் களமுனைக்குமான, களமுனைக்கும் களமுனைக்குமான போராளிகளை நகர்த்துவதற்கு உதவுவது. சண்டை நேரங்களில் காயப்பட்ட போராளிகளை ஏற்றிச் சென்று மருத்துவ முகாம்களில் சேர்ப்பது, காயக்காரரை ஏற்றி முடித்தவுடன் போராளிகளின் வித்துடல்களை ஏற்றிச் சென்று மாவீரர் பணிமனை நிர்வாகத்தின் உரிய பகுதியில் கையளிப்பது வரையான பெரிய சிறிய அத்தனை பொறுப்புக்களையும் செய்வதாகும். அத்தனை கடின பணிகளையும் சாதாரணமாகச் செய்து கொண்டு செல்லும் அவளைப் பார்த்து வியப்பேன். வேலைகள் குறைவான நாட்களில் ஓயவாக இருக்கும் போது போராட்டப் பாடல்களை பாடிக்கொண்டு பொழுது போக்குவாள். "அக்கா நல்லாப் பாடுறிங்க அக்கா" என்று சொன்னால் "போடி" என்று தலையை சிலுப்பிக் கொண்டு செல்லுவாள்.

விக்கினாக்கா கவலைப்பட்டு நான் பார்த்ததே இல்லை. மணிக்கட்டில் கட்டியிருக்கும் கறுத்த கைக்கடிகாரத்தில் அடிக்கடி நேரம் பார்த்துக் கொள்வார். கையை ஒரு பக்கமாகச் சரித்துக்கொண்டு நேரம் பார்ப்பார். "நேரம் போகுது நேரம் போகுது" என்ற பரபரப்பு எப்போதும் அவரிடம் இருக்கும். அவருடைய கால்கள் நிலத்தில் ஆறுதலாகத் தரித்து நிற்பதில்லை. ஏனையவர்களோடு கதைக்கும் போதும் நடந்து நடந்தே கதையைச் சொல்லி முடித்து விடுவார். அவரிடம் ஓடி ஓடித்தான் கதை கேட்க வேண்டும். மிக இலாவகமாகவும் வேகமாகவும் வாகனத்தைச் செலுத்துவார். அவரது செயல்களில் எல்லாம் ஒரு நேர்த்தி எப்போதும் இருக்கும். அதிகம் அலட்டிக் கொள்ளாத அவரது நடைமுறைதான் அந்த நேர்த்தியான செயற்பாடுகளுக்குக் காரணமாக இருக்கலாம். தேவையான விடயங்களை மட்டும்தான் கதைப்பார். தன்னுடைய கடமைகளுக்கு அப்பாற்பட்ட விடயங்களைக் குறித்து தலைப்பட்டுள் கொள்ள மாட்டார். தனது கடமைகளில் குறைகளையும் விடமாட்டார்.

திடீரென்று ஒரு நாள் ரதியக்காவிற்கும், விக்கினாக்காவிற்கும் வாய்த்தர்க்கம் நடந்தது. ஓடிப்போய்ப் பார்த்தேன். அந்தத் தர்க்கம் என்னைக் குறித்தே நடந்து கொண்டிருந்தது.

"நான் எத்தின முறை சொல்லியும் கேட்காமல் கடிதத்தோட வந்து நிக்கிறாய் என்ன விக்கினா" என்று ரதியக்கா சத்தமிட்டாள்.

"அதான் ஜெனி அனுமதி தந்திட்டாவே. நீங்கள் குட்டிய விடுங்க" என்றாள் சிரித்துக்கொண்டே.

தளபதி அனுமதி வழங்கிய கடிதம் ரதியக்காவின் கையில் இருந்ததைக் கண்டேன். வேறுவழியின்றி ரதியக்கா என்னைப் பார்த்தாள்.

"இங்க வா, விக்கினா உன்னைக் கேட்டுக்கொண்டு நிற்கிறாள். போ?" என்றார். அன்றே, அப்போதே விக்கினாக்கா என்னை அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

விக்கினாக்காவுடன் நிற்கப்போகிறேன், வாகனங்களில் பறக்கப் போகிறேன். ஊரெல்லாம் சுற்றப் போகிறேன் என்ற கிளுகிளுப்புடன் பறந்தடித்துக் கொண்டு சென்றேன். ஆனால் நடந்ததோ வேறு.

"குட்டி, உனக்கு வாகனம் ஓட விருப்பமா?"

"ஓமக்கா"

"அப்ப சரி வாகனம் பழகுற இடத்தில தான் உன்னை விடப்போறன். நிண்டு வடிவாய் பழகிட்டு வா" என்றாள்.

வேறு வழியின்றி "ம்" என்று தலையை ஆட்டிவைத்தேன். இயக்க அண்ணாமார்தான் வாகனம் ஓட்டுநர் பயிற்சி ஆசிரியர்களாக இருந்தார்கள். நானோ வாகனம் ஓடுவது பற்றி எதுவுமே தெரியாதவளாக அவர்கள் முன் நின்றேன். சென்றவுடன் சிறிய "மோட்டார் சைக்கிள்" களை ஓடினேன். அதன் பின்பு தான் வாகனத்தில் ஏற முடிந்தது.

வாகனத்தின் எல்லா விதமான பாகங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் நினைவில் வைத்திருப்பதற்காக அரும்பாடுபடவேண்டி இருந்தது. அண்ணாமார் கேட்கும் கேள்விகளுக்கு படபடவென்று பதில் சொல்லவேண்டும் என்ற அவசரத்தில் தட்டுத் தடுமாறித் திக்கித்திணறி தப்பும் தவறுமாக குளறி விடுவேன். போகப் போக எனக்கு வாகனத்தின் தொழிநுட்பம் ஓரளவு புரியத் தொடங்கியது. அதன்பின்பு எது எப்படி? இயங்குகிறது என்பதை புரிந்து கொண்டேன். ஓரளவு புரியத் தொடங்கும் போது வாகனம் ஓடத் தெரிந்தவள் என்ற நினைப்பும் வந்து விட்டது.

இதற்குள் விக்கினாக்கா நேரில் வந்து என்னைப் பார்த்துச் சொல்வார். விக்கினா அக்காவிற்கு அங்கே இயக்க அண்ணன்மார் மத்தியில் நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தது. விக்கினாக்கா கொண்டு வந்து விட்டவள் என்பதால் குட்டிச் சிறுமி போல இருந்த எனது வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டினார்கள்.

"குட்டி யாரும் பேசுறாங்களா?" என்று ஒவ்வொரு தடவையும் காணும்போது கேட்பாள்.

"இல்லையக்கா. இல்லையக்கா" என்று மறுத்துவிடுவேன். உண்மையில் அந்த அண்ணாமார் என்னை ஏசியதும் உண்டுதான். ஆனால் அது நான் நன்றாக வாகனம் செலுத்தாத போதும், படிக்காத போதும் மட்டும் தான். அத்துடன் அவர்கள் என்னை ஏசுகிறார்கள் என்றால், இடையிலேயே அழைத்துச் சென்று விடுவாவோ என்று பயந்தேன். அப்படிச் சென்றுவிட்டால் வாகனம் ஓட்ட முடியாதே. அப்படி இடையில் சென்றால் சுத்தித் திரிய முடியாமல் போய்விடுமே. அதனால் எத்தனை கடினம் என்றாலும் அதை தாங்குவேன் என்று பிடிவாதமாக நின்றேன். கனவும் நினைவும் அதுவாகவே இருந்தாலும் வாகனத்தில் ஏறும்போது பதற்றம் தான் மிஞ்சும்.

வாகனத்தை ஓடப் பழகினாலும் நிறுத்தத் தெரியாமல் அவசரத்தில் "சுவிட்ச் ஓவ்" செய்து தொலைத்து நன்றாக ஏச்சு வாங்குவேன்.

பின்பு சில நாட்களிலேயே எல்லாம் வேகமாகக் கற்றுக் கொள்ள முடிந்தது. திருப்பம், "ரிவேஸ்", வேகம் என்று எல்லா விதமான நுட்பங்களையும் தெரிந்து கொண்டேன். அதன் பின்பு விக்கினாக்கா அழைத்துச் சென்றார். அவர் தான் மிகுதி அனைத்தும் சொல்லித் தந்தார். பகலும், இரவும், காடு, கரம்பை எல்லாம் ஓடித்திரியும் விக்கினாக்கா, தான் களைத்துப் போயிருக்கும் நேரங்களில் அல்லது அவசர பயணம் இல்லாத நேரங்களில் என்னிடம் தருவார். அவ்வாறு ஒருநாள் இரவுப் பயணத்தின் போது மிகவும் களைத்திருந்தார்.

"கொஞ்சத் தூரம் நீ ஓடன் என்ன?" என்றார்.

"ஓமக்கா. தாங்க" என்றேன்.

இறங்கி மறுபக்கம் அவர் வர, நான் சாரதி இருக்கையில் அமர்ந்து வாகனத்தைச் செலுத்தினேன். மாலை மங்கத் தொடங்கிய முன்னிரவு நேரம். கிரவல் வீதி இருமருங்கும் காடு. முழங்காவிலில் இருந்து பூநகரியை நோக்கி "கண்டர்" வாகனம் உருண்டு கொண்டிருந்தது. விக்கினாக்கா ஓடினால் வாகனம் பறக்கும். அக்கா ஏசாது விட்டாலும் ஏசுவாவோ என்ற நினைப்பில் வாகனத்தை உருட்டிக் கொண்டிருந்தேன். அருகில் இருந்த விக்கினாக்கா சற்று நேரத்தில் உறங்கிவிட்டாள். ஓடிக் கொண்டிருந்த நான், திடீரென்று வீதியில் நரியோ முயலோ குறுக்கால பாய்ந்த போது சடக்கென்று நிறுத்திவிட்டேன். திடுக்கிட்டு விழித்த அவள் என்னைப் பார்த்துக் கேட்டாள்.

"நொப் அடிச்சு நிண்டுட்டுதா?" என்று.

"ஓமக்கா" என்றேன் அப்பாவியாய்.

"இறங்கு" என்றபடி கதவைத் திறந்து அக்கா இறங்க நானும் இறங்கினேன். வேகமாக வந்த அவள், நான் ஏறமுன்பே வாகனத்தை ஓட்டிக்கொண்டு சென்று விட்டாள்.

என்னை ஏற்றாமல் இப்படி இந்த இரவில், தன்னந் தனியாக விட்டுவிட்டுச் செல்வாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. வாகனம் என் பார்வையில் இருந்து மறைந்து விட்டது. எனக்கோ மனம் விறைத்து விட்டது. சற்றும் எதிர்பாராமல் நடந்த அந்த நிகழ்வினால் என் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டியது. கண்களைத் துடைத்து விட்டு வீறாப்புடன் நடந்து சென்றேன். சற்று நேரத்தில் அந்த வீதியால் சீலன் அண்ணாவும் ஞானம் அண்ணாவும் தங்களுடைய வாகனத்தில் வந்தார்கள். என்னைக் கண்டதும் வாகனத்தை நிறுத்தி விபரம் கேட்டார்கள்.

"அக்கா இறக்கி விட்டிட்டுப் போயிட்டா" என்று கூறினேன்.

"ஏறு ஏறு கொண்டேய் விடுறம்" என்றார்கள்.

"நான் நடந்து வாறன். பிறகு அக்கா பனிஸ்மென்ற் தருவா" என்று தயங்கினேன்.

"சீச்சீ அவ பனிஸ்மென்ற தரமாட்டா. ஏறு அவாட்ட நான் சொல்றன்" என்றார் ஞானம் அண்ணா. அவர்களின் வாகனத்தில் சென்றதால் வேகமாகச் சென்றுவிட்டேன். விக்கினாக்கா வாசலில் நிக்கிறா. என்னைக் கண்டவுடன் வந்து என் தோளில் தன் கையைப் போட்டுக் கொண்டு நடக்கிறா.

"வாவா சாப்பிடுவம்" என்று அழைப்பு வேறு. எனக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்துவிட்டது. நான் அழுதது அவவுக்கு ஒரே சிரிப்பு. ஆனால் ஏன் அப்பிடிச் செய்தாய் என்றோ, இனிமேல் அப்பிடிச் செய்யாதே என்றோ எந்தவிதமான அறிவுறுத்தலும் இல்லை. அதன்பின் நானும் "நொப்" அடிக்குமாறு வாகனத்தை நிறுத்தியதும் இல்லை.

தவறுகள் செய்தால் கடுமையாகத் தண்டிக்கவோ, அடிக்கவோ, கடும் வார்த்தைகளால் ஏசவோ மாட்டார் விக்கினாக்கா. அவரது சிறு சிறு தண்டனைகள் அதன்பிறகு செய்த தவறை வாழ்நாளிலும் செய்யாமல் இருக்குமாறு திருத்தி விடும்.

"உனக்கு எத்தின தரம் சொன்னாலும் புரிஞ்சு கொள்ள மாட்டியா?" என்று மனதைக் குறுகச் செய்யுமாறு கேட்கமாட்டார். அவருக்குப் பிறரிடம் சினக்கத் தெரியாது. கோபமான முகத்தை அவரிடம் நான் கண்டதில்லை. அவவிற்கும் மேலுள்ள பொறுப்பாளர்மார் அவருக்குப் பேசினால்கூட, அவர்கள் முன், அமைதியாக நின்றுவிட்டு, வேறுபக்கம் ஓடிவந்து நின்று சிரிப்பார்.

அவர் யாருக்கும் பேசினாலும், யாரும் இவரைப் பேசினாலும் அடுத்த நிமிடமே கதைத்து விடுவார். கோபம் பாராட்டத் தெரியாது. சில நேரங்களில் ஏதாவது சொல்லிவிட்டால், நான் கோபத்தில் சாப்பிடாமல் இருப்பேன். "சாப்பிடு, சாப்பிடு. அப்பதான் நல்லா இருக்கலாம். நல்லா சண்டை பிடிக்கலாம்" என்று சொல்லி இழுத்துச் சென்று சாப்பிட வைத்து விடுவார். எவ்வளவு ஆளுமையான மனுசியாக இருந்தார் என்பதை அப்போது நான் புரிந்து கொள்ளவில்லை. இப்போது அவரின் அர்த்தமுள்ள வார்த்தைகளையும் செயற்பாடுகளையும் எண்ணிப்பார்க்கிறேன். உண்மையில் விக்கினாக்காவிடம் இருந்து இன்றும் கற்றுக் கொள்ள எவ்வளவோ இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன்.

நன்றி வானம்பாடி




சுழித்தோடும் வெள்ளத்தில் ஒருவன் சிக்கிக் கொண்டான். "என்னைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! என்று கூவினான். அந்தப் பக்கமா வந்த ஒருவன், தண்ணீரில் தத்தளிப்பவனைக் காப்பாற்ற நினைத்தான். ஆனால் இவனுக்கும் நீச்சல் தெரியாது. என்ன செய்வது? நீரில் கிடப்பவனோ நிலை கொள்ளாமல் தவித்தான். அவன்மேல் பரிதாபப்பட்டு இவன் வெள்ளத்தில் பாய்ந்தால், பிரவாகம் இவனையும் இழுத்துக் கொண்டு போய்விடும். ஆனாலும் இவனது கருணை மனம் அவனுக்கு எந்தவிதத்திலாவது உதவ நினைத்தது.

அப்போது வெள்ளத்தில் கறுப்பாகக் கட்டை மாதிரி எதுவோ மிதந்து வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த இவன் கத்தினான்: "அந்தக் கட்டையைப் பிடித்துக் கொள். நீரில் மூழ்காமலிருக்கலாம்!" அதன்படியே அவன் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அதனோடு சேர்ந்து கரைப்பக்கமாக ஒதுங்கினான்.

கரையைச் சமீபித்த பின்னும் அவன் கட்டையை விடாமலிருப்பதைக் கண்ட இவன், "இன்னும் ஏன் தாமதிக்கிறாய்? கரைக்கு அருகே வந்துவிட்டாயே! கால் ஊன்றியே வெளியே ஓடி வந்து விடலாமே! கட்டையை விட்டு விட்டு ஓடி வா" என்று கூக்குரலிட்டான். அப்போது அவன் பரிதாபமாகச் சொன்னான்: "கட்டையை நான் விட்டு விட்டேன். இப்போது அது என்னை விடமாட்டேனென்கிறது." பாவம், அவன் கட்டை என்று கருதியது கட்டை அல்ல: கரடி.

இப்படித்தான் வாழ்க்கையிலும் நிகழ்கிறது. மனிதன், முதலில் வாழ்க்கையைப் பிடிக்கிறான். பின்னர் வாழ்க்கை அவனைப் பிடித்துக் கொள்கிறது. அதன்பின் அவன் தன் பிடிப்பை விட்டாலும் அது அவனை விடுவதில்லை. அதற்குள் அழுந்தி விடுகிறான். சம்சார சாகரத்துள் ஆழ்ந்துபோகிறான்.

வாழ்க்கை இறைவனால் வழங்கப்பட்டது. இதைத் துறக்க வேண்டிய தேவையில்லை. ஐம்புல நுகர்வுகளைத் தடையின்றித் துய்க்கலாம். எல்லாவற்றையும் துய்ப்பதற்கே அனுபவிப்பதற்கே அவை படைக்கப்பட்டிருக்கின்றன. துய்த்தல் என்பது இடையறாத ஆனந்தத்துக்கு வழி வகுப்பதாக இருக்க வேண்டும். ஆனால் அதுவே துக்க காரணமாக மாறிவிட்டது. அது ஒரு சுகானுபவமாகப் பொய்த்தோற்றம் காட்டுவதா்கவே ஆகிவிட்டது. காரணம், மனிதர்கள் அதில் மிதப்பதற்குப் பதிலாக அமிழ்ந்தி விடுகிறார்கள். புலனின்ப அனுபவங்களில் தங்கள் இயல்பு நிலையை மறந்தவர்களாகப் புதைந்து போகிறார்கள்.

"சமுத்திரத்தில் படகு இருக்கலாம் ஆனால், படகுக்கள் சமுத்திரம் வந்துவிடக் கூடாது" என்பது வாழ்வில் எத்தகைய நிலையில் மனிதன் இருக்க வேண்டும் எனக் காட்டும் சரியான வாசகம்.

தாமரை இலையில் தண்ணீர் போலவும்,
சேற்றில் பிள்ளைப் பூச்சி வாழ்வது போலவும்,
புளியம் பழமும் அதன் ஓடும் போலவும்,
கொப்பரைத் தேங்காயும் மேல் மூடியும் போலவும் ஒருவன் வாழப் பழகிவிட்டால் அவன் ஒருபோதும் தன்னிலை தவறுவதில்லை. தன்னிலையை விட்டு விலகாததால் அவனை ஒருபோதும் துக்கம் பீடிப்பதில்லை. ஏனெனில் மனிதன் இயல்பு நிலையில் முற்றிலும் சுகமயமானவனாக இருக்கி றான். அந்த இயல்புநிலை கெடும்போதே அவன் துக்ககரமானவனாகிறான். தன் இயல்பு நிலையாகிய சச்சிதானந்த சொரூபம், மனிதன் உலகியல் வாழ்க்கையில் விழிப்புணர்வு அற்று மூழ்கும்போதே கெடுகிறது. "கெடுகிறது" என்று நான் சொல்லும் போது, மறைக்கப்படுகிற என்னும் அர்த்தத்திலேயே கூறுகிறேன். ஏனெனில் மனிதனின் இருப்பு நிலையாகிய - இயல்பு நிலையாகிய சச்சிதானந்தம் அழிவற்றது. அது என்றும் இருப்பது அதை உலகியல் விவகாரங்கள் என்னும் மாயைத் திரை மூடும் போது தான் மனிதன் துன்பத்தை உணருகிறான். தன் இருப்பைப் பற்றிய விழிப்புணர்வுடன் ஒருவன் உலக வாழ்க்கையில் ஈடுபடுவானேயானால் அவனுடைய இயல்பாகிய ஆனந்தம் மறைக்கப்படுவதில்லை அதனால் அவன் துயருறுவதில்லை. இதை உணராத மனிதர்கள் வாழ்க்கைக்குள் சிக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் நிலை ஆப்பசைத்த குரங்கின் கதையாகிறது.

ஒரு பெரிய மரத்தை இரண்டாகப் பிளக்கும் முயற்சியில் தச்சன் ஒருவன் ஈடுபட்டான். கோடரியால் வெட்டிச் சற்றுப் பிளவு ஏற்பட்டதும், வேறு ஏதோ ஒரு வேலையின் நிமித்தமாக அப்பிளவில் ஆப்பு ஒன்றை அடித்து வைத்துவிட்டுச் சென்றுவிட்டான். குரங்கு ஒன்று இதைப் பார்த்துக் கொண்டேயிருந்தது. தச்சன் சென்றவுடன் அவ்விடத்திற்கு வந்து அம்மரத்தின் மீது ஏறிக் குதித்து விளையாடியது. அதனால் சும்மா இருக்க முடியவில்லை. மரத்தின் பிளவுக்குள் பின்னாங்கால் ஒன்றை நுழைத்தது. அதோடு விட்டிருக்கலாம். அடுத்து அதன் கண்ணில், அடிக்கப்பட்டிருந்த ஆப்புப்பட்டது. அதை முன்னங்கால்களாகிய கைகளால் பிடுங்கியது. அவ்வளவுதான்! பிளவுண்ட மரம் சேர்ந்து கொண்டது. குரங்கின் கால் என்ன ஆகியிருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அதிலிருந்து மீளவும் முடியாமல், ஒரேயடியாக மாளவும் முடியாமல் குரங்கு பெரிய அவஸ்தைக்கு ஆளாகி விட்டது.

இப்படித்தான் மனிதர்கள் வாழ்க்கை இருக்கிறது. இதைப் பட்டினத்தார் கூறுகிறார்:
"நாப்பிளக்க பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலமொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையுள் கால்நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர், கிடந்துழல அகப்பட்டீர் நீரே."

பட்டினத்தார் அன்றைக்குப் படம்பிடித்துக் காட்டியது இன்றைக்கும் பொருந்துவதாகவே உள்ளது. "காப்பதற்கும் வகையறியீர" என்று பட்டினத்தார் கூறுவது அடிப்படைத் தேவைகளும் நிறைவேறப் பெறாதவர்களைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. வாழ்வதற்கு அடிப்படையானவற்றை, அவசியமானவற்றை ஒருவன் பெறவில்லை எனில் அவன் அல்லலுறுவது காரண காரியத்துக்கு ஒத்து வருவதே என்று கூறலாம். ஆனால் "காப்பதற்கு வகை" இருந்தும், அதற்கும் மேல் ஆயிரம் ஆயிரம் வசதிகள் இருந்தும் ஆப்பசைத்த குரங்கின் நிலையில் அல்லல்படுபவர்களே அதிகம் பேர் இருக்கிறார்கள். இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. வாழ்வின் இன்ப துன்பத்திற்கும் பெற்றிருக்கும் வசதி வாய்ப்புகளுக்கும், சம்பந்தமில்லை என்பதே அது. நீங்கள் செல்வங்கள் பலவற்றைப் பெற்றிருக்கலாம், அல்லது பெறாமல் இருக்கலாம். அவற்றுக்கும் உங்கள் ஆனந்தத்துக்கும் தொடர்பு இல்லை. ஆனந்தம் உங்கள் இயல்பு நிலையாக இருக்கிறது. அதை உணர விடாமல் அந்தச் செல்வங்களே கூட உங்களுக்கு இடையூறாக இருக்கலாம். அதற்காக நீங்கள் அவற்றையெல்லாம் துறக்க வேண்டுமென்று அவசியமில்லை. அவற்றின்மேல் இருக்கும் பிடிப்பை, அவை இல்லாமல் நீங்கள் இருக்க முடியாது என்ற நிலையை மாற்றிக் கொண்டால் போதும்.

என்னென்ன வசதிகள் உண்டோ, புதிது புதிதாக எந்தெந்தச் சௌகரியங்கள் வாய்க்கின்றனவோ அவற்றையெல்லாம் நீங்கள் துய்க்கலாம். ஆனால் அது வெறும் உபயோகிப்பாக மட்டும் இருக்க வேண்டுமே தவிர, உங்கள் உள்ளிருப்பை மூடி மறைத்து விடுவதாக அமைந்து விடக் கூடாது. அதாவது நீங்கள் அந்த அனுபவித்தலில் உங்களை இழந்து விடக் கூடாது. நீங்கள் அவற்றுக்கு ஆட்பட்டு விடாதவாறு அடிமையாகி விடாதவாறு விழிப்புணர்வுடன் அவற்றையெல்லாம் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

மொத்தத்தில் உலகப் பொருள்களைப் பொறுத்த அளவில் உங்கள் மனநிலை, "வந்தால் வரட்டும். போனால் போகட்டும்" என்பதாகவே அமைந்திருக்க வேண்டும். இந்த மனப்பாங்கு வந்துவிட்டால் உங்களிடம் ஒருவித மிதப்பு நிலை வந்துவிடும். அதன்பின் எந்தச் சோகச் சுமைகளும் உங்களை அழுத்திவிட முடியாது. உலகப் பொருள்களில் பிடிப்புத் தளர வேண்டுமானால், முதலில் அப்பொருள்களெல்லாம் உங்கள் கூட வரப்போவதில்லை என்னும் உண்மை எப்போதும் நெஞ்சை விட்டு நீங்காமல் இருக்க வேண்டும். பிறக்கும் போது எதையும் கொண்டு வந்ததில்லை இறக்கும் போது எதையும் கொண்டு போகப் போவதில்லை. இதை நினைவில் நிறுத்துங்கள்.

வாழ்க்கை ஒரு வழிப்பயணம். ஜென்ன மரணங்களை எல்லைகளாக உடையது. இடையே உங்களுக்குக் கிட்டும் வசதிகளையெல்லாம் இந்த வழிப்பயணத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிரப் பற்று வைத்துவிடக் கூடாது. அவ்வாறு பற்று வைப்பது மடியில் கனம் ஏற்றிக் கொள்வது மாதிரி. மடியில் கனமிருந்தால் வழியில் பயம் என்று சொல்வார்கள். வாழ்க்கையென்னும் வழிப்பயணத்தில் உலகப் பொருள்களின் மீது வைக்கும் பற்றுத்தான் மடியிலுள்ள கனம். பற்று என்னும் கனமில்லாவிட்டால் வாழ்க்கை என்னும் வழிப்பயணம் இனிமையானதாக இன்ப யாத்திரையாக அமையும்.

ஔவையின் பாடல் ஒன்று:
பாடுபட்டும் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டு
ஆவிதான் போனபின் ஆரே அனுபவிப்பார்
பாவிகாள்! அந்தப் பணம்.

இந்த வெண்பாவைக் கவனத்தில் கொள்ளுங்கள். கூடுவிட்டு ஆவிபோனபின் கூட வருவதில்லை, உங்கள் செல்வங்கள் ஆவி இருக்கும் போதே அவற்றை நீங்கள் அனுபவிக்க வேண்டும். அவற்றின் மீது பிடிப்பு இருந்தால், பற்று இருந்தால் அந்த அனுபவம் இல்லாமல் போய்விடும். ஏனெனில், ஒரு பொருளின் மீது பற்று இருக்கும் வரை, இது நம்மை விட்டுப் போய்விடுமோ என்ற பயம் இருக்கும். அப்படி ஒருவேளை அது உங்கள் வசத்திலிருந்து நீங்கிப்போகும் நிலைமை உண்டாகிவிட்டால் அதன்பின் உங்களால் நிம்மதியாக இருக்க முடியாது. ஆனால், பற்று இல்லையென்றால் அந்தப் பொருளின் போக்கு, வரவுகளைப் பற்றி நீங்கள் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை.

ஒரு ஞானி வசித்து வந்த குடில் பற்றி எரிந்தது. அப்போது அவர் அங்கு இல்லை. சீடர்களெல்லாம் பரபரப்போடு தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்கள் நெருப்பை அணைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் தூரத்தில் தங்கள் குரு வந்து கொண்டிருப்பதைக் கண்டனர். சில சீடர்கள் வேக வேகமாக குருவிடம் மூச்சிரைக்க ஓடிச் சென்று "ஐயா, நமது பர்ணசாலை பற்றி எரிகிறது" என்று கூறினர். அதைக் கூறியதும் தங்கள் குரு பதற்றமாகிவிடுவார். படபடப்பாகிவிடுவார் என்று சீடர்கள் நினைத்தனர்.

ஆனால் அவரோ அப்படி எந்த உணர்ச்சிக்கும் ஆளாகாமல் அப்படியா? என்று கேட்டுக் கொண்டே மாணவர்களுடன் சேர்ந்து சென்று தீயணைக்கும் பணியில் தாமும் ஈடுபட்டார். அவரது செயலில் வேகம் இருந்தது. ஆனால் அதில் பதற்றமோ தவிப்போ எதுவும் தென்படவில்லை. அவர்கள் முயற்சி வெற்றி பெறும் முன் தீ, ஆசிரமத்தை முற்றிலும் இரையாக்கிக் கொண்டது. சீடர்களுக்கெல்லாம் வருத்தம். பல வருடங்க ளாக வசித்து வரும் பர்ணசாலை எரிந்துவிட்டதே என்று தங்கள் குரு வருந்துவாரே என்னும் வருத்தம். ஆனால் ►

அந்த ஞானியின் முகத்தில் கவலையின் குறி எதுவும் காணப்படவில்லை. அன்றிரவு - குரு உட்பட எல்லோரும் ஆகாயக் கூரையின் கீழ் கட்டாந் தரையில் படுத்திருந்தனர். சீடர்களெல்லாம் இப்படியாகிவிட்டதே என்று சிந்தை நொந்தவர்களாய்த் தங்களுக்குள் வருத்தமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது குரு கூறினார்: "அடடா! வானில் நட்சத்திரப் பூக்களைப் பாருங்கள்! இத்தனை நாள் நமக்கும் அவற்றுக்கும் இடையே இருந்த கூரையாகிய தடுப்பு நீங்கிவிட்டது! ஆஹா இன்றைக்கே அந்த அற்புதம் நடந்தது! நெருப்புக்கு நன்றி கூறுங்கள்!"

பற்றற்றவர்கள் எந்த இழப்பிலும் இந்த ஞானியைப் போலவே இருப்பார்கள். தீயை அணைப்பதாகிய செயலில் அவரும் ஈடுபட்டார். ஆனால் அச்செயலில் அவர் மற்றவர்களைப் போல் பதற்றத்தோடு இறங்கவில்லை. அந்தக் கணத்தில் தமக்கு ஏற்பட்ட பொறுப்பு அதுவென்று கருதி வெகு இயல்பாகச் செயல்பட்டார். தீயணைக்கும் முயற்சி வெற்றிபெறவில்லை. ஆஸ்ரமம் அஸ்தியாகிவிட்டது. அதற்காக அவர் வருத்தப்படவில்லை. தம் ஆனந்த இயல்பிலிருந்து நீங்கிவிடவில்லை. நடந்த நிகழ்வை நன்மையாகவே அவர் நோக்குகிறார். இப்படி எந்த நிலையிலும் நீங்கள் உங்கள் இயல்புநிலை தவறாமல் வாழ வேண்டுமானால் அதற்குப் பிடிப்பற்ற மனமே, பற்றற்ற எண்ணமே அடித்தளம். பற்றற்ற தன்மையே பெரும் பேரானந்தம். அதுவே உண்மையான விடுதலை. "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பது ஆழ்வார் வாக்கு. இது மிகப்பெரிய உண்மை. இதுவே மெய்ஞ்ஞானம்.

குரங்குகளைப் பிடிப்போர் ஒரு தந்திர உபாயத்தைக் கையாள்வர். குரங்குகளின் கை நுழையும்படி குறுகிய வாயுள்ள கன த்த குடுவைகளுக்குள் கடலையைப் போட்டு வைப்பார். குரங்குகள் அந்தக் கடலையை எடுப்பதற்காகக் குடுவைகளுக்குள் கையை விட்டுக் குத்தாக அள்ளும். இப்போது கைவெளியே வராது. கடலையைப் போட்டு விட்டால் கையை வெளியே எடுத்துவிடலாம். ஆனால் கடலை மீதுள்ள ஆசையால் குரங்குகள் அவ்விதம் செய்யாமல், கனத்த குடவைகளைத் தூக்கிக் கொண்டு ஓடவும் முடியாமல் திகைத்து நிற்கும். அப்போது அவற்றைப் பிடித்துக் கொள்வர்.


இப்படித்தான் நீங்கள் பற்றுள்ளவராக இருக்கும் வரை வாழ்க்கையில் சிக்கிக் கொண்டவராக அவஸ்தைப்பட நேரும். அந்தப் பிடிப்பு தளர்ந்து விடுமானால் அதற்குப் பின் பரமானந்தம் உங்களுக்காகக் காத்திருக்கிறது. லௌகீக வாழ்வில் பற்றற்ற நிலையில் இருப்பது சாத்தியமா? என்ற சந்தேகம் எழலாம். இருந்திருக்கிறார்கள் இருக்கிறார்கள். ஜனகன், பீஷ்மன் போன்றவர்கள் உலக விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டே பற்றற்ற நிலையிலிருந்த ஞானிகள் என்று இதிகாசங்கள் காட்டுகின்றன. மகாபாரதத்தின் முக்கிய அரசியல் திருப்பங்கள் பலவற்றில் வியாச மகரிஷி வந்து கலந்து கொண்டு செல்கிறார்.

இன்றைக்கும் உலகியலில் பற்றற்ற ஞானத்தன்மையுடன் ஈடுபட்டிருப்போர் உள்ளனர். அவர்களை உற்றுநோக்கினால் அவர்களைச் சுற்றியுள்ள ஞான ஒளியினை நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும் அவர்கள் செயலில் இறங்குவதில் தயக்கம் கொள்ள மாட்டார்கள். எத்தகைய சிக்கலான சூழ்நிலையிலும் அவர்களை இறுக்கம் வாய்ந்தவர்களாக, அழுத்தம் மிகுந்தவர்களாக, பதற்றம் கொண்டவர்களாகக் காணமுடியாது. எப்போதும் தங்கள் இயல்பான அமைதி நிலை கெடாமலேதான் அவர்கள் காட்சியளிப்பர்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்: எத்தனையோ ஞானிகளை உருவாக்கிய பகவத் கீதையை அருளிய கண்ணன் உலகியல் வாழ்வைக் கைவிட்டவன் அல்ல அதை வெறுத்து ஒதுக்கியவன் அல்ல. அவன் லௌகீகத்தின் சகல சந்து பொந்துகளிலும் நுழைந்து பார்த்தவன். ஒரு சாதாரண மனிதனைப் போலவே அவனும் இன்னல்கள் பலவற்றை எதிர்கொள்கிறான். எதிரியிடமிருந்து தப்பிப்பதற்காக புறமுதுகிட்டும் ஓடியிருக்கிறான். கடவுள் அவதாரம் என்று அவன் கருதப்பட்டாலும் ஒரு சராசரி மனித வாழ்வாகவே அவனது வாழ்வு அமைந்திருக்கிறது. ஆனால், அவனது வாழ்வு நெடுகிலும் நீங்கள் அவனை ஒருபோதும் சோக மயமானவனாகக் காண முடியாது. வதனம் ஒருகாலும் சுருக்கம் கொண்டது கிடையாது. அவனது ஒட்டுமொத்த வாழ்வும் ஓர் ஆனந்த நர்த்தனமாகவும், இன்பக் கீர்த்தனமாகவுமே தெரிகிறது. அதில் சுக ராகங்களைத் தவிரப் புலம்பல்களோ விசும்பல்களோ இல்லவே இல்லை.

நினைத்தால் நீங்களும் கண்ணனாக மாறலாம். அப்படி மாறிவிட்டால் வாழ்வில் ஒருவித மிதப்புத் தன்மையுடன் சுகானுபவத்தில் இலயித்திருக்கலாம்.
ஆழ்ந்திருப்பதே அல்லல் மிதந்திருப்பதே ஆனந்தம். மிதந்திருங்கள்.

# நான் வாக்காளன் சொல்லுறன், கேளுங்கோ...!



"உவனை நின்மதியா நித்திரை கொள்ள விடக்குடாது. அடியுங்கோடா அவனை" எண்டு ஒராள் நேற்றுக் காலமை கையிலை பேப்பரோடை றோட்டாலை கத்திக்கொண்டு ஓடிக் கொண்டிருந்தார். என்ன ஏது எண்டு விசாரிச்சால் "அண்ணை இருந்தவரைக்கும் ஒண்டையும் செய்யாமல் இப்ப வாற எலக்சனிலையும் தங்களுக்கத்தான் போடட்டாம். நல்ல கதையாக் கிடக்கு. செருப்புப் பிய்யும்" எண்டு என்னைப் பாத்துக் கத்தத் தொடங்கிவிட்டார். எனக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போச்சுது. அங்காலையும். இஞ் சாலையும் திரும்பிப் பாத்தன். ஆரேன் என்னைப் பாக்கினமோ எண்டு. நல்ல காலம் றோட்டிலை ஒருத்தரும் இல்லை.

பிறகு கொஞ்சத்தாலை றோட்டடித் தேத்தண்ணிக் கடையிலை அவரைக் கண்டன். அண்ணை காலமை ஆரைப் பேசின்னியள் எண்டு மெதுவாக் கேட்டன். அப்ப அவர் கோபமா இல்லை. அமைதியாச் சொன்னார். நான் கூட்டமைப்புச் சம்பந்தனைத்தான் பேசினனான் எண்டார்.

ஏன் அவரோடை உங்களுக்கு என்ன குடுக்கல் வாங்கல் எண்டு கேட்டன். அவருக்கும் தனக்கும் கனக்கக் குடுக்கல் இருக்கு வாங்கல் இல்லை எண்டு சொல்லிப் போட்டு அவர் என்னை மட்டுமில்லை உங்களையும்தான் ஏமாத்திப் போட்டார் எண்டு பேப்பரைக் காட்டினார். அதிலை தமிழரசுக் கட்சியின்ரை 70வது வருஷக் கூட்டத்திலை அவர் தங்களைத்தான் ஏற்றுக் கொள்ள வேணும் எண்டு பேசினவராம். அதிலைதான் தனக்குச் சரியான கோபம் ஏண்டார். அவர் அதைக் கேக்கலாம். ஆனால் அவரும் அவற்றை கட்சியும் ஏதாவது தமிழ் மக்களுக்கு உருப்படியாச் செய்து போட்டுக் கேக்கிறதைக் கேக்கலாம். அது பிழை இல்லை. இது ஒண்டையும் செய்யாமலும், எங்களைக் கொண்டு போய் நடு ஆத்திலை விட்ட மாதிரிக் கைவிட்டிட்டுப் பிறகும் வெக்கம், மானம், ரோசம் இல்லாமாதிரி எங்களுக்குத்தான் கட்டாயம் போட வேணும் எண்டு கேட்டால் ஆருக்குத்தான் கோபம் வராது?

இல்லைச் சம்பந்தரைப் பாத்து ஒரு கேள்வி கேக்கிறன். உவருக்கு வயதென்ன? எண்பத்தைஞ்சு இருக்குமெல்லே? சரி உங்கடை வயதொத்த ஆக்கள்தானே கைதடியிலை இருக்கினம். எத்தினை தரம் கைதடி வயோதிப மடத்தைத் தாண்டிப் போட்டு வந்தனியள்.ஒரு நாளாவது பாத்து ஜீப்பை அதுக்கை விடு தம்பி எண்டு றைவரிட்டைச் சொல்லி அங்கை உள்ள ஆக்களையும் பாத்துப் பேசி அவையளையும் ஆசுவாசப்படுத்தியிருக்கலாம் தானே? ஏன் இதை உங்களுக்குச் சொல்லுறன் எண்டால் அவையின்ரை வயதொத்த ஆள் நீங்கள். அவையின்ரை சோதனையும். வேதனையும் உங்களுக்கத்தான் நல்லாத் தெரியும். இப்ப அவையளைப் பற்றிக் கரிசனையோடை நீங்கள்தான் கதைக்கலாம் எண்ட வகையிலைதான் நான் அதை உங்களிட்டைக் கேக்கிறன்.

சரி எனக்குத் தெரியும். வடிவாய், வாய்க்கு ருசியாத் திண்டு குடிக்க வேணும் எண்ட ஆசை இன்னும் உங்களுக்கு இருக்கெல்லே? அப்ப தமிழ் மக்களுக்குத் தலைவர் எண்டு சொல்லுற நீங்கள் தமிழ் சனத்திலை தங்கடை பிள்ளையள், தங்களோடை பிறந்த சொந்த பந்தங்களைக் காணேல்லை எண்டு வருசக் கணக்கா நடு றோட்டிலை கொட்டிலைப் போட்டுக் கொண்டு தண்ணி வெந்நி இல்லாமல் காயுதுகள் எல்லே? ஒரு நாளாவது அவையளைப் போய் பாத்து சாப்பிட்டனியளோ, தண்ணி வெந்நி குடிச்சியளோ, பயப்பிடாதையங்கோ உங்களை பிரச்சினைகளை எல்லாம் நான் அறிவன். அதுக்கு ஞாயம் கேக்கிறதுக்காக நான் அதைச் செய்யிறன், இதைச் செய்யிறன் எண்டதொரு ஆறதல் வார்த்தை ஊஹூம் ஒண்டையும் கேக்கேல்லை. அது எல்லாத்தையும் செய்யாமல் "எங்களுக்கு மட்டும் போடுங்கோ" எண்ட கதை சரியோ? 2009 க்குப் பிறகு பார்லிமெண்டுக்குப் போற தியானத்திலைதான் இருந்தனியளே ஒழிய சனம் என்ன சங்கடப் படுகுதுகள் எண்டதைப் பாக்கேல்லை. சனம் எக்கேடு கெட்டாலும் பறவாயில்லை. அடுத்த எலக்சன் வரேக்கை பாப்பம் எண்ட மாதிரி இருந்திட்டு இப்ப எலச்சன் வரப் போகுதெண்டு கண்ட உடனை புத்துக்கை இருந்து பாம்பு வெளிக்கிட்ட மாதிரி வெளிக்கிட்டிட்டினம். அதுக்கை வாய் திறந்தால் பச்சைப் பொய். அந்தப் பொய்யை மெய்யாக்கப் பக்க வாட்டுக்கு ஒரு பக்கம் மாவை. மற்றப் பக்கம் சுமந்திரன். அவருக்கு இத்தினை வயசாச்சு இன்னும் அனுபவமில்லாத ஆளைப்போலைதான் கட்சியை நடத்தியிருக்கிறார். ஏல்லாத்தையும் அனுபவிச்சு ஓய்ஞ்சாப் பிறகு இப்ப பக்கப்பாட்டுப் பாடத் துவங்கி இனி நான் எலச்சன் கேக்கமாட்டன். ஆறுதல் எடுக்கப் போறன். இளம் ஆக்கள் கனக்கக் கட்சியிலை இருக்கினம்.அவைக்கு வழியை விட்டிட்டு ஒதுங்கப் போறன். எண்டு சொல்ல வெளிக்கிட்டிட்டார்.

சரி தலைமைப் பதவியிலை இருந்து ஒதுங்கப் போறன் எண்டு வாய் கூசாமல் சொல்லியாச்சு. தனக்குப் பிறகு ஆர் கட்சியைத் தன்னைப்போலை கொண்டு போகப்போகினம் எண்டதை இன்னும் ஆள் சொல்லேல்லை.அது தான் உவையின்ரை களவு எண்டு நான் நினைக்கிறன்.

நல்ல காலம் கோத்தாபய ஆட்சிக்கு வந்தது எண்டு நான் நினைக்கிறன். சஜித் வந்திருந்தால் உவை ரணிலோடை சேந்து இன்னும் தமிழ் சனத்துக்கு ஆப்பு வைச்சிருப்பினம். உவை இருக்கேக்கை கண்விண் தெரியாமல் செலவழிச்ச கம்ரெலியாவிலையும் இப்ப களவெண்டுதான் சனம் கதைக்கினம். கம்ரெலியாவிலை குளிர் காஞ்ச கனபேர் இப்ப மாட்டுப்படப் போகினம். யாழ்ப்பாணத்திலை அக்காவும் அள்ளித் தெளிச்சவ.அவவும் இப்ப அவுஸ்திரேலியாவுக்கு ஓடிவிட்டதாக் கதை.

இப்ப காலமை பேப்பரைத் திறந்தால் ஆக்கள் மாட்டுற செய்தியளைத்தான் பாக்கிறம்.முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் எண்ட மாதிரி இதுவரைக்கும் சனத்தின்ரை துயரிலை குளிர் காஞ்சவை ஒவ்வொருத்தரா மாட்டினம்.அதிலை சம்பிக்க ரணவாக்கவும் ஓராள். அவர் முந்தி சிகள உறுமயவை வைச்சுத் தமிழ் சனத்தை வெருட்டினவர். புத்த குருமாரையும் ஏவிவிட்டவர். இண்டைக்கு அவரையும் பிடிச்சுப் போட்டிட்டாங்கள்.

கோத்தா வந்தும் இன்னும் ஆள் சரியா வடம் பிடிக்கேல்லையோ தெரியாது. அவர் வந்தால் அதைச் செய்வர். இதைச் செய்வர் எண்டு கூட்டமைப்பு வெருட்டின மாதிரி கடும் பிடியா ஒண்டையுங் காணேல்லை. சுனத்திட்டையும் பயத்தைக்காணேல்லை. வடக்கிலை இன்னும் கஞ்சா கடத்திறாங்கள். வாள் வெட்டு நடக்கிது. அரச நிர்வாகம் சரியா நடக்கக் காணேல்லை.என்ன கறுமமோ தெரியேல்லை. பொறுத்துத்தான் பாக்க வேணும்.

சும்பந்தற்றை பிரச்சினையளிலை இருந்து நான் எங்கையோ போட்டன். ஆள் அரசியலை விட்டிட்டு ஒதுங்கப் போறன் எண்டு சொன்னதும் தான் அவரைப் பற்றின பழசெல்லாம் ஞாபகத்துக்கு வருகிது. ஒரு மனுசனுக்கு வயசு போகப் போகத்தான் நல்ல அறிவும், ஞானமும் வரும் எண்டு சொல்லு றவை. அது உந்த ஆளிலை இல்லை. இப்ப வரைக்கும் தான் செய்த பிழையளை ஒத்துக் கொள்ளுறதாக இல்லை. இன்னும் தமிழருக்கான தீர்வு மாசியிலை வரும், பங்குனியிலை வரும். ஏண்டு பச்சைப் பொய்யைச் சொன்னபடி.

தனக்குப் பிறகு வாற ஆக்களைத் தன்னும் ஒழுங்கான முறையிலை அரசியலைச் செய்யத் தன்னும் படிப்பிச்சிருக்கலாம். இது அதை விட்டிட்டு மாவைக்கு மைக்கைப் பிடிச்சா விடத் தெரியாது. சுமந்திரன் யாப்பு இன்னும் பாலிமெண்டிலை உயிரோடை இருக்கு. துடிச்சுக் கொண்டு கிடக்கு எண்டு சொன்னபடி. என்னெண்டுதான் வாய் கூசாமல் சனத்தைப் பேக்கா ட்டுறாங்களோ தெரியாது? எல்லாத்துக்கும் ஒரு "தில்" வேணும். அதை உவங்களிட்டைத்தான் கேட்டுப் படிக்கவும் வேணும்.

# கிரக நிலையும் இராசி பலனும் இந்த வாரம்

## டிசம்பர் 22 முதல் 28 வரை (மார்கழி 06 முதல் 12 வரை)



கணித்தவர்
ஜோதிட மாமணி,
முனைவர் முருகு பாலமுருகன்
Dip in astro, B.L, M.A.astro. PhD in Astrology.
No: 19/33 வடபழனி ஆண்டவர் கோயில் தெரு,
தபால் பெட்டி எண் - 2255. வடபழனி,
சென்னை - 600 026 தமிழ்நாடு. இந்தியா.
cell: 0091 7200163001. 9383763001.

**கிரக மாற்றம்**
**25-12-2019 தனுசில் புதன் மாலை 03.46 மணிக்கு**
**25-12-2019 விருச்சிகத்தில் செவ்வாய் இரவு 09.29 மணிக்கு**

**இவ்வார சந்திரன் சஞ்சரிக்கும் ராசிகள்**

- **துலாம் 21-12-2019 காலை 08.25 மணி முதல் 23-12-2019 பகல் 11.50 மணி வரை.**
- **விருச்சிகம் 23-12-2019 பகல் 11.50 மணி முதல் 25-12-2019 மாலை 04.40 மணி வரை.**
- **தனுசு 25-12-2019 மாலை 04.40 மணி முதல் 27-12-2019 இரவு 11.45 மணி வரை.12-2019 அதிகாலை 05.40 மணி வரை.12-2019 மாலை**

**இவ்வார சுப முகூர்த்த நாட்கள் இல்லை.**

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | திருக்கணித கிரக நிலை | | |
| சுக்கிரன் | | | |
| சனி கேது குரு சூரிய | புதன் | செவ்வாய் சந்திரன் | |



மேஷம்

**மேஷம், அசுவனி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம்.**

சிரிக்க சிரிக்க பேசி எல்லோரையும் வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் ஆற்றல் கொண்ட மேஷ ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு பாக்கிய ஸ்தானமான 9ல் குரு, கேது சஞ்சரிப்பதும், 10ல் சுக்கிரன் சஞ்சரிப்பதும் பொருளாதார ரீதியாக ஏற்றத்தை தரும் அமைப்பாகும். உங்களுடைய செயல்களுக்கு பரிபூரண வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சிகள் நடைபெறும். சுபகாரிய முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். உங்கள் ராசிக்கு செவ்வாய் 7, 8ல் சஞ்சரிப்பதால் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்வது, பொருளாதார நிலை சிறப்பாக இருப்பதால் குடும்பத்தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். தொழில் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். வெளியூர் வெளிநாட்டுத் தொடர்புகளால் அனுகூலம் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகளை பெற முடியும்.

**வெற்றி தரும் நாட்கள் - 22, 28.**



கடகம்

**கடகம் புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.**

எந்த ஒரு காரியத்திலும் தீர ஆலோசித்து செயல்படும் பண்பு கொண்ட கடகராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு ருண ரோக ஸ்தானமான 6ல் சூரியன், சனி, கேது சஞ்சரிப்பதும் 7ல் சுக்கிரன் சஞ்சரிப்பதும் சகல விதத்திலும் ஏற்றத்தை தரும் அமைப்பாகும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் தேடி வரும். மறைமுக எதிர்ப்புகள் விலகி லாபம் பெருகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு சிறப்பாக இருக்கும். தடைபட்ட பதவி உயர்வுகளும், ஊதிய உயர்வுகளும் கிடைக்கும். புத்திர வழியில் பூரிப்பு உண்டாகும். உடல் ஆரோக்கியம் ஓரளவு சிறப்பாக இருக்கும். அன்றாட பணிகளை தடையின்றி செய்து முடிப்பீர்கள். சுப காரியங்களுக்கான முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தாது இருப்பது உத்தமம்.

**வெற்றி தரும் நாட்கள் - 26, 27, 28.**



துலாம்

**துலாம் சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதங்கள்.**

பேச்சிலும் செயலிலும் முடிந்த வரை பிறர் மனதை புண்படுத்தாமல் செயல்படும் துலாராசி நேயர்களே, உங்கள் ராசியதிபதி சுக்கிரன் 4ல் சஞ்சரிப்பதும் முயற்சி ஸ்தானமான 3ல் சூரியன், சனி, கேது சஞ்சரிப்பதும் எல்லா வகையிலும் ஏற்றத்தை தரக்கூடிய சிறப்பான அமைப்பாகும். நீங்கள் நினைத்தெல்லாம் நிறைவேறும். எடுக்கும் முயற்சியில் வெற்றி, நவீனகரமான பொருட்களை வாங்கும் யோகம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் சிறப்படையும் உற்றார் உறவினர்களின் வருகை மகிழ்ச்சியினை உண்டாக்கும். கூட்டாளிகள் மற்றும் தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் செயல்படுவார்கள். பணம் கொடுக்கல்-வாங்கலில் இருந்த தடைகள் விலகும். கொடுத்த கடன் தடையின்றி வசூலாகும். உத்தியோகஸ்தர்கள் பணியில் திறம்பட செயல்பட்டு அனைவரின் பாராட்டுதல்களை பெறுவார்கள்.

**வெற்றி தரும் நாட்கள் - 22, 25, 26, 27**



ரிஷபம்

**ரிஷபம், கிருத்திகை 2,3,4 ஆம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ஆம் பாதங்கள்.**

பிறருக்கு உதவி செய்வதில் தன்னலம் கருதாது செயலாற்றும் பண்பு கொண்ட ரிஷப ராசி நேயர்களே, உங்கள் ராசியதிபதி சுக்கிரன் பாக்கிய ஸ்தானமான 9ல் சஞ்சரிப்பதால் பொருளாதார நிலை சற்று சாதகமாக இருந்தாலும் ஆறு கிரக சேர்க்கை இவ்வாரத்தில் 8ல் ஏற்பட இருப்பதால் தேவையற்ற நெருக்கடிகள், குடும்பத்தில் நிம்மதி குறைவு, நெருங்கியவர்களிடம் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். முடிந்த வரை மற்றவர்களை அனுசரித்து செல்வது, பிறர் விஷயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. சிலருக்கு அசையும் அசையா சொத்துக்களால் வீண் செலவுகள் ஏற்படும். ஆடம்பர செலவுகளை குறைத்துக் கொள்வதன் மூலம் கடன்கள் ஏற்படாமல் தவிர்க்கலாம். தொழில் வியாபாரம் செய்பவர்கள் அடைய வேண்டிய லாபத்தை அடைவார்கள். எதிர்பார்க்கும் உயர்வுகளில் தாமதம் ஏற்பட்டாலும் வேலை பளு சற்று குறையும்.

**வெற்றி தரும் நாட்கள் - 22, 23, 24**



சிம்மம்

**சிம்மம் மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்.**

இருந்த இடத்திலிருந்தே அனைவரையும் ஆட்டி வைக்கும் அஞ்சா நெஞ்சம் கொண்ட சிம்ம ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 5ல் குரு, 11ல் ராகு சஞ்சரிப்பதால் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் கைகூடும். பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன்களை அடைவீர்கள். தாராள தனவரவுகள் ஏற்பட்டு தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். கடன்கள் யாவும் படிப்படியாக குறையும். உடல் ஆரோக்கியத்தில் சற்று அக்கறை எடுத்து கொள்வது உத்தமம். கணவன்-மனைவியிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை சிறப்பாக இருக்கும். திருமண சுப காரியங்கள் தடபுடலாக கைகூடும். உற்றார் உறவினர்களின் ஆதரவுகள் மகிழ்ச்சியளிக்கும். வெளி வட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உத்தியோகத்தில் கௌரவமான உயர்வுகள் உண்டாகும். பயணங்களால் அனுகூலம் கிடைக்கும்.

**வெற்றி தரும் நாட்கள் - 22, 28.**



விருச்சிகம்

**விருச்சிகம் விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை.**

வசீகர தோற்றமும், உறுதியான பேச்சாற்றலும் கொண்ட விருச்சிக ராசி நேயர்களே, தன ஸ்தானமான 2ல் குரு சஞ்சரிப்பதால் சகல விதத்திலும் மேன்மையான பலன்களை அடைவீர்கள். பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பணவரவுகளும் கிடைத்து உங்களுடைய நெருக்கடிகள் குறையும். எந்த சிக்கலையும் சமாளித்து ஏற்றங்களை அடைவீர்கள். அசையும் அசையா சொத்துக்கள் விஷயத்தில் சற்று கவனமுடன் செயல்பட்டால் ஏற்படும் சிறு சிறு விரயங்களை தவிர்க்கலாம். உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்பட்டாலும் பெரிய மருத்துவ செலவுகள் உண்டாகாது. கொடுக்கல்-வாங்கலில் சரளமான நிலை இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு முன்னேற்றமான நிலை உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் சில தடைகளுக்குப் பின்பே கிடைக்கும். சிவ வழிபாடும், சனி பகவான் வழிபாடும் செய்வது உத்தமம்.

**வெற்றி தரும் நாட்கள் - 23, 24, 25, 28**



மிதுனம்

**மிதுனம் மிருகசீரிஷம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்.**

நிதானமான அறிவாற்றல் இருந்தாலும் சமயத்திற்கேற்றார் போல குணத்தை மாற்றிக் கொள்ளும் குணம் கொண்ட மிதுன ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 7ல் குரு சஞ்சரிப்பதால் பொருளாதாரநிலை மிகச் சிறப்பாக இருக்கும் என்றாலும் சூரியன், சனி, கேது 7ல் சஞ்சரிப்பதால் கணவன் மனைவி இடையே விட்டு கொடுத்து செல்வது நல்லது. திருமண வயதை அடைந்தவர்களுக்கு சுப காரியங்கள் கை கூடாம தநிலை உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணி களை செய்து முடிப்பதில் சற்று இடையூறுகளை சந்திக்க நேர்ந்தாலும் உயரதிகாரிகளின் ஆதரவுகளால் எதையும் சாதிக்க முடியும். தொழில் வியாபாரத்தில் போட்டி பொறாமைகள் அதி கரித்தாலும் வரும் 25ஆம் தேதி முதல் செவ்வாய் 6ல் சஞ்சரிக்க இருப்பதால் மறைமுக பிரச்சினைகள் விலகி அனுகூலங்களை அடைவீர்கள். எதிர்பார்த்த லாபத்தை பெற்று விடுவீர்கள்.

**வெற்றி தரும் நாட்கள் - 24, 25, 26, 27.**



கன்னி

**கன்னி உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்.**

மிருதுவான வார்த்தைகளால் நயமாக பேசக் கூடிய கன்னி ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு சுக ஸ்தானமான 4ல் சூரியன், சனி கேது சஞ்சரிப்பதால் தேவையற்ற அலைச்சல், இருப்பதை அனுபவிக்க இடையூறுகள் உண்டாகும். நீங்கள் முன்கோபத்தை குறைத்துக் கொண்டு எதிலும் நிதானமாக செயல்படுவது, தேவையற்ற பயணங்களை தவிர்ப்பது நல்லது. சுக்கிரன் 5ல் சஞ்சரிப்பதால் நெருங்கியவர்களின் உதவியால் எதையும் எதிர் கொள்ளக்கூடிய பலம் உண்டாகும். எதிர்பா ராத பணவரவுகள் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகளில் எதிர் நீச்சல் போட்டாவது வெற்றியினைப் பெறுவீர்கள். குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். கூட்டாளிகள் மற்றும் தொழிலாளர்களை அனுசரித்து செல்வதன் மூலம் அபிவிருத்தியை பெருக்கி கொள்ள முடியும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் சற்று கவனமுடன் செயல்படுவது நல்லது.

**வெற்றி தரும் நாட்கள் - 23, 24, 25.**



தனுசு

**தனுசு மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்.**

எந்த முயற்சியில் ஈடுபட்டாலும் தளராது, அயராது முயன்று பாடுபடும் குணம் கொண்ட தனுசு ராசி நேயர்களே, உங்களுக்கு ஜென்ம ராசியில் சனி, கேது, குரு, சூரியன் சஞ்சரிப்பதும் இவ்வாரத்தில் ஆறு கிரகங்கள் ஜென்ம ராசியில் சஞ்சரிக்க இருப்பதும் தேவையற்ற பிரச்சினைகளை உண்டாக்கும் அமைப்பாகும். எதிலும் பொறுமையுடன் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள், உடனிருப்பவர்களால் நிம்மதி குறைவு ஏற்படலாம். விட்டு கொடுத்து செல்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஓரளவுக்கு முன்னேற்றங்கள் உண்டாகும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் அதன் மூலம் லாபம் கிட்டும். கொடுக்கல்-வாங்கலில் பெரிய தொகைகளை ஈடுபடுத்தும் போது சற்று கவனத்துடன் செயல்பட்டால் எதிர்பார்த்த லாபத்தை அடையலாம். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்க்கும் உயர்வுகள் தாமதப்படும். வேலை பளுவும் சற்று அதிகரிக்கும்.

**வெற்றி தரும் நாட்கள் - 22, 26, 27.**



**மகரம்**

**மகரம் உத்திராடம் 2,3,4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்.**

எல்லோருக்குமே மரியாதை கொடுக்கும் பண்பும், கள்ளம் கபடமின்றி ஆத்மார்த்தமாக பழகும் குணமும் கொண்ட மகர ராசி நேயர்களே, உங்களுக்கு ஜென்ம ராசியில் சுக்கிரன், 6-ல் ராகு சஞ்சரிப்பதால் நல்ல வாய்ப்புகள் உங்களை தேடி வந்து வலமான பலன்களை அடைவீர்கள். நெருங்கியவர்களின் உதவி சிறப்பாக கிடைக்கும். பண வரவுகள் ஏற்ற இறக்கமாக இருந்தாலும் தேவைகள் பூர்த்தியாகும். சூரியன், சனி, குரு, கேது 12-ல் சஞ்சரிப்பதால் வரவுக்கு மீறிய வீண் செலவுகள் ஏற்படும் என்பதால் எதிலும் சிக்கனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் கணவன்-மனைவியிடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திறமைகளுக்கேற்ற பாராட்டுதல்கள் கிடைக்கப் பெறுவதால் மன மகிழ்ச்சி உண்டாகும். குருப்ரீதியாக தட்சிணாமூர்த்தியை வழிபட்டால் நல்லது பல நடக்கும்.

**வெற்றி தரும் நாட்கள் - 22, 23, 24, 28.**



**கும்பம்**

**கும்பம் அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்.**

எதையும் எளிதில் கிரகித்துக் கொள்ளும் ஆற்றலும் வாழ்க்கையில் எத்தனை துன்பங்கள் ஏற்பட்டாலும் அதை பொருட்படுத்தாத குணமும் கொண்ட கும்ப ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு லாப ஸ்தானமான 11ல் சூரியன், சனி, கேது, குரு சஞ்சரிப்பதால் பொருளாதார ரீதியாக மேன்மை, சிறப்பான பணவரவு, இருக்கும் இடத்தில் உங்களுடைய மதிப்பும் மரியாதையும் மேலோங்கும் நிலை உண்டாகும். பணவரவுகள் சிறப்பாக இருப்பதால் குடும்பத் தேவைகள் யாவும் பூர்த்தியாகும். சிலருக்கு சொந்த வீடு, வாகனம் போன்றவற்றை வாங்கும் யோகம் அமையும். பிரிந்த உறவுகளும் தேடி வந்து நட்பு கரம் நீட்டும். தொழில் வியாபாரம் செய்பவர்கள் கூட்டாளிகளின் ஒத்துழைப்பால் நல்ல லாபத்தினை அடைவார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு தடைபட்ட பதவி உயர்வுகள் கிடைப்பதோடு எதிர்பார்க்கும் இடமாற்றங்களும் கிடைக்கும்.

**வெற்றி தரும் நாட்கள் - 24, 25, 26, 27**




**மீனம்**

**மீனம் பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.**

அன்பும் சாந்தமும் அமைதியான தோற்றமும் கொண்டிருந்தாலும் நியாய அநியாயங்களை பயமின்றி எடுத்துரைக்கும் ஆற்றல் கொண்ட மீன ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 10ல் சூரியன், 11ல் சுக்கிரன் சஞ்சரிப்பதால் இருக்கும் நெருக்கடிகள் ஓரளவுக்கு விலகி அனுகூலங்களை அடைவீர்கள். உங்கள் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். குடும்பத்தில் சுபிட்சமான நிலை உண்டாகும். வரும் 25ஆம் தேதி முதல் செவ்வாய் 9ல் சஞ்சரிக்க இருப்பதால் தற்போது இருக்கக்கூடிய ஆரோக்கிய பிரச்சினைகள் விலகும். பெரிய தொகைகளை கடனாக கொடுப்பதை தவிர்க்கவும். தொழில் வியாபார ரீதியாக மேற்கொள்ளும் எந்தவொரு காரியத்திலும் சிந்தித்து செயல்பட்டால் லாபம் கிட்டும். அரசு வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் பணியில் திறம்பட செயல்பட்டு கைநழுவிய பதவி உயர்வுகளை தடையின்றி பெறுவார்கள்.

**வெற்றி தரும் நாட்கள் - 26, 27, 28.**



# கொஞ்சம் சிரிக்கலாமே..!

துருவன்



“நாட்டில இப்பவும் நல்லாட்சிதான் நடக்கிறதா?”

“இல்லை குடும்ப ஆட்சி”



“அவன் ஒரு இசைப் பைத்தியம் என ஏன் சொல்கிறாய்”

“பின்னையென்ன நுளம்பின் ரீங்கார இசையை ரசியுங்கள். அது கடிக்கும். வலி தெரியாது என்று சொல்கிறானே”



“ என்ன அந்த புது ஹோட்டலிலை இவ்வளவு சனம் நிக்குது”

“இரண்டு வடை வாங்கினால் ஒரு வடை இலவசமாக கிடைக்குதாம்”



“சீனி வியாபாரத்தில நிறைய சம்பாதிச்சியே என்ன ஆச்சு?”

“அப்படியே கரைஞ்சு போச்சு...’



“ அவர் ஒரு படப் பைத்தியம்”

“ ஏன் அப்படி சொல்லுகிறாய்?”

“ ஆரம்பத்தில் கலப்பட வியாபாரம் செய்தார், பிறகு பப்பட வியாபாரம் செய்தார், இப்ப தமிழ்ப்படம் எடுக்கிறார்.”



“ஏன் டொக்டர் சொர்க்கத்துக்கு போகப் பயப்படுகிறார்?”

“அங்கதான் இவர் ஒப்பரேசன் செய்த பல நோயாளிகள் இருக்கிறார்களாம்.”

# எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் – 24

## குடும்பப் பெண்கள்

## கு.ப. சேது அம்மாளின் குலவதி

அ. இராமசாமி

"குலபதியாட்டமா நாட்டுப் பெண் வந்தா பெண்களும் பிள்ளைகளும் நாட்டுப் பெண்களும். பெரிய சுமங்கலியா மாமியாருமாக் குடித்தனம் கோகுலம் ஆட்டமாயிருக்கு! கொட்டில் நிறைஞ்ச மாடுகளும், தொட்டில் நிறைஞ்ச குழந்தைகளுமாகக் கிளி கொஞ்சுறது பார்த்தால்" இதே பேச்சு. இதே ஓர் உபமானமாகக் கூடப் பிரசித்தி பெற்றது. சிவராம் ஐயர் குடும்பம். போவோரும் வருவோரும் வாழ்த்துவது பொருத்தம்தான். ஆமாம் குலவதி தான் சுந்தா. ஊருக்கு உயர்ந்த குடியாக அது பிரபலம் அடைந்தது அவளால் தானே?

நகரத்தில் பிறந்து, படித்து வளர்ந்த பெண்களைக் குடும்ப அமைப்பு எவ்வாறு குலவதியாக ஆக்குகிறது என்பதைச் சொல்வதே கதையின் நோக்கம். இந்தியக் குடும்ப அமைப்பும் அதன் அதிகாரத்துவப் படிநிலைகளை உருவாக்கும் உறுப்பினர்களும் புதிதாக நுழையும் ஒரு பெண்ணை நாட்டுப்பெண்ணைத் தங்களின் கீழ் வாழும் ஓர் உயிரியாக கட்டளைகளை ஏற்று வாழும் ஓர் அடிமையாக மாற்றுகிறார்கள் என்பதைப் படிப்படியாகச் சொல்லி நகர்த்துகிறது சேது அம்மாளின் கதை.

அது கிடக்கு, உன் புக்க நிலை உன் தன்மைக்கு ஒத்திருக்கிறதா? பொய் சொல்லாமல் சொல்லு".

"ஒவ்வாமை என்ன? ஆனால் பயந்துகொண்டேதான் போனேன். அங்கே போனதும் ஒன்றும் சிரமமாக இல்லை. நீ கவலைப்பட்டாயோ" என்று சுந்தா அருமையாகக் கேட்டாள்.

"சந்தேகமில்லாமல்! புத்தகப் புழுவாக சதா படித்துக்கொண்டு கிடப்பாயே என்ன செய்கிறாயோ என்று ஓயாத நினைப்பு உன் வழக்கத்திற்கு முழுதும் அனுமதியும் கிடைக்கின்றனவோ?" "கமலா சொல்லுகிறேன் கேள். ஆணோ பெண்ணோ ஒரே ரீதியாக மாறுதல் இல்லாமல் வாழ நினைப்பது நடக்காத காரியம். மாறுதல் தான்



நியதி. என் மாறுதல் இப்போது சத்தியமாக எனக்குத் திருப்திதான்.." தன்னை இணையாக நடத்துவான் என நம்பி வரும் மனைவியாகிய பெண்ணை, கணவன் என்னும் ஆண் நேரடியாக ஈடுபடாமல் தனது அதிகாரத்தை நிலைநாட்டும் படலம் தான் குடும்பம் நடத்துதல் என்னும் வினையாக இருக்கிறது என்னும் விமரிசனத்தைத் தூக்கலான சொற்களால் அல்லாமல், நிகழ்வுகளாலேயே நடத்திச் செல்கிறார் ஆசிரியர். குடும்பத்தின் அதிகாரப்படியில் மேலே இருப்பவர்கள் மாமனார், கணவன் என்ற ஆண்களாக இருந்தபோதிலும் அவர்களின் தளபதிகளாகச் செயல்படுபவர்கள் பெண்களே.

இது என்ன கேள்வி கமலா? ஆமாம். வேலை செய்யாமல் முடியுமா? தவிர மாமியாரும் நாத்தனார்கள் இருவரும் பாய்ந்து பாய்ந்து காரியம் செய்யும்போது நானென்ன ஜடமா? எனக்கு வெட்கமாயிராதா? இல்லை படித்துக்கொண்டு உட்காருவதா? நாத்தனார்கள் இருவரும் காரியத்திலும், கிராமிய விளையாட்டிலும் கெட்டிக்காரிகள். அவர்களோடு சேர்ந்து நானும் செய்வேன் படிப்பெல்லாம் ராத்திரியில் தான்." கமலா! அப்புறம் சமையல். மாமியார் கிட்ட இருந்து சொல்லிக் கொடுப்பாள். சாதம் மட்டும் என்னை வடிக்கச் சொல்ல மாட்டார்கள். வழக்கம் இல்லை என்று அவர்களில் யாராவது வடிப்பார்கள். அதிலும் என் சின்ன நாத்தனார் ரொம்ப வேடிக்கை மனுஷி. சதா கேலிதான். சமையலில் ஏதும் தெரியா விட்டால் அவளைத் தான் கேட்பேன். எனக்கு ஒத்தாசையாக பரிமாறுவாள் பிற்பாடு நாங்கள் இருவரும் சாப்பாடு"

"சாப்பாடு இரண்டு மணிக்கா?" "இல்லை. பன்னெண்டு மணிக்கு ஆகிவிடும்.

அம்மா, சகோதரிகள் என்ற பெண்களின் வழியாகவும் தந்தை என்னும் அதிகாரம் மிக்க நபரின் மரியாதையை குடும்பத்தின் பெருமையைக் காப்பாற்றுதல் என்னும் கருத்தியல் வழியாகவும் மருமகளைக் குலவதியாக ஆக்குகிறது குடும்பம் என்னும் பாடசாலை.

"காலையில் எழுந்ததும் ஆற்றுநீரில் ஸ்நானம் செய்துவிட்டு அடுப்பை மூட்டுவேன். காபி, பலகாரம் செய்து கொண்டே சுவாமி பூஜைக்கு கோலம் போட்டு, விளக்கேற்றி வைத்து சந்தனம் அரைத்து வைத்தால், மாமனார் ஸ்நானம் செய்து விட்டு பூஜைக்கு வருவார். பூஜையான பிறகு ஆகாரம். இதெல்லாம் என் மனசுக்கு ரொம்ப ரம்மியமாயிருக்கிறது.

எல்லாவற்றையும் ஏற்கும் மனநிலைக்கு மாறும் மாட்டுப் பெண் அந்தக் குடும்பத்தின் குலவதியாக மாறிப்போவதோடு அந்தக் குடும்பத்தை உருவாக்குபவளாகவும் மாறிப்போகிறாள். அந்த மாற்றம் அவளைப் போலவே இன்னொரு பெண்ணை மாட்டுப்பெண்ணாக குலவதியாக ஆக்குவதாகவே இருக்கிறது. கமலா எழுப்பும் பின்வரும் வினாவுக்கு "எல்லாருக்கும் உன் போலவே புக்ககத்தார்கள் வாய்ப்பார்களா? கிராம வாசம் நரகமாக தோன்றக்கூடிய கோட்டான்களாக இருந்தால் என்ன செய்வது மாற்றக் கூடிய காரியமா இது?..

சுந்தாவிடம் பதில் இல்லை. என்றாலும் தன்னைப் போலவே கமலாவும் அந்தக் கிராமத்திற்கு வாழ்க்கைப் பட்டு வரவேண்டும். அந்தக் குடும்பத்தின் உறுப்பினராக இன்னொரு வேலைக்காரியாக ஆகவேண்டும் என்றே நினைக்கிறாள். தன்னைப் போல ஆகாமல் வேறொரு வாழ்க்கையை முயற்சி செய்து பார்க்கும்படி ஆலோசனை கூறாமல் குடும்பப் பெண்ணாக, குலவதியாக இருப்பதின் பெருமைகளையே முன்வைக்கிறாள்.

சுந்தா, இப்போது தனது சிநேகிதியைத் தன் உறவுக்காரப் பெண்ணாக்கி கொழுந்தனுக்கு மனைவியாக்கிவிடும் அதிகாரத்தைக் கையில் எடுப்பவளாக மாறும் வேதிவினையை அதிகாரத்தைக் குடும்பம் அவளுக்குத் தருகிறது. அந்தப் பொறுப்பைப் பெருமையுடன் செய்கிறாள் சுந்தா.

"சந்தேகமே இல்லை. பட்டிக்காட்டானுக்கு வாழ்க்கை படமாட்டேன் என்ற புத்திசாலி இந்தப் பெண் தான் சரி அவளை உட்கார வைத்துவிட்டு வந்திருக்கிறாயே போ" என்றான். கமலாவுக்கு தனக்குமாக இரண்டு டம்ளர் காபி எடுத்துக் கொண்டே, "கமலா அடுத்த மாசத்துக்குள் உனக்கு கல்யாணம்" என்றாள்.

"அப்பாடா பார்யம்மா!" இந்தியக் குடும்ப அமைப்பு என்னும் பாடசாலை, பெண்களுக்கு வேறுவிதமான வாழ்க்கை முறைகளும் இருக்கிறது என்ற சிந்தனையைத் தராமல் மாட்டுப்பெண், நாத்தனார், மாமியார் என்ற கதாபாத்திரங்களையே வழங்கிப் பெருமைப்படுத்துகிறது. அதன் வழியாக ஆண்களின் அதிகாரத்தைத் திணிக்கிறது. அந்தத் திணிப்புக்குத் தரும் பட்டமே குலவதி என்பது என்கிற விமரிசனத்தைக் கவனமாக வைத்துள்ளார் கு.ப.சேது அம்மாள்.

தொடரும்..

---

# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்



ஒருவர் கதிரையில் இருக்கும்போது ஒரு மாதிரிப் பேசுவதும், அந்தக் கதிரையில் இருந்து இறங்கியபின் வேறுமாதிரியும் பேசுவது அதிகாரிகளுக்கு ஒரு பழக்கமாகப் போயிற்று. முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சராக இருந்த சத்தியலிங்கம் தற்போது எந்தவித பதவியிலும் இல்லை. அவர் தற்போது இயற்கை வளங்கள் சூறையாடலைத் தடுக்க அரச கூட்டுத்தாபனம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் என்றதைப் பற்றிப் பேசி இருக்கிறார். உரிய முறையில் இயற்கை வளங்களை மக்கள் பயனுற வழியேற்படுத்த அதுவே சிறந்த முறை என்றும் பரிந்துரைக்கிறார். நல்ல விடயம்.


ஆனால், இதே நபர் தான் ஒரு அதிகாரியாக இருந்தபோது எத்தனை விதமான மக்கள் பயனுறக் கூடிய பல விதமான திட்டங்களை அமுல்படுத்தக் கூடியதாக இருந்தும் ஒன்றையும் உருப்படியாகச் செய்யாது போனவர் என எனது அதிருப்தியை குற்றச்சாட்டாக முன்வைக்கிறேன். நாட்டில் சூறையாடப்படும் கனிம வளங்களைப் பற்றிப் பேசுகின்ற இவர் தான் சுகாதார அமைச்சராக இருந்தபோது நெகிழிப் பாவனைக்கு எதிராக எத்தனை விழிப்புணர்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருக்கலாம். பாடசாலைகள் தோறும் பல விழிப்புணர்வுப் பட்டறைகளை அப்போது நடத்தி இருந்தால் தற்போது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் என்று அழைக்கப்படும் நெகிழிப் பாவனைகள் மிகவும் குறைந்திருக்கும்.

அப்போது அதிகாரத்தில் இருந்தபோது தனது திணைக்களம் சாராத விடயங்கள் பலவற்றிலுள்ள பிரச்சினைகள் பற்றியே கவனம் செலுத்தி வந்த அவர் வட மாகாண மட்டத்தில் சுகாதாரம் பற்றிய பல விடயங்களில் கவனம் செலுத்தி மக்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கும் மேம்பாட்டுக்கும் வழிகோலி இருக்கலாம்.

இவர் பதவியிலுள்ளபோது மக்கள் பேசிக் கொண்ட ஒரு விடயத்தை ஞாபகப்படுத்தலாம் என்று நினைக்கிறேன். 2009 க்குப் பின்னர் வன்னியில் பெருகிக் கிடந்த மாடுகளை இறைச்சிக்காக பிற மாகாணங்களுக்கு ஏற்றிச் சென்றுவிட்டதால் வன்னியில் கால்நடைகளின் பெருக்கம் குறைந்து விட்டதாகக் குறை கூறப்பட்டது. அப்படி இறைச்சிக் கடைக்காரர்கள் மாடுகளை ஏற்றிச் செல்ல சுகாதார அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டுமாம். அப்போ இவரை அறியாமல் மாடுகளை ஏற்றிச் சென்றிருக்க முடியாதெனவும், இப்போது இயற்கை வளங்களைப் பற்றிப் பேசுகின்ற சத்தியலிங்கத்துக்கு அப்போது பல்கிப் பெருக்கிக் கிடந்த மாடுகளும் இயற்கை வளமாகத் தெரியவில்லையா? என்றும் நாகிழியக் கேள்விகள் கேட்க வேண்டும்போல் இருக்கிறது.

அதிகாரத்தில் இருக்கும்போது செய்ய வேண்டியவைகளையும், கவனம் கொள்ள வேண்டியவைகளையும் செய்யாமல் விட்டு விட்டுத் தற்போது இது போன்ற விடயங்களுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பது எந்த விதத்தில் நியாயம். அட சுகாதார அமைச்சென்றால் எத்தனை ஜீவகாருண்யம் மிக்க திணைக்களம். பிறர் நலன்களைப் பேணுவதற்கு எத்தனை விடயங்களைச் செய்திருக்கலாம். செய்யாது விட்டதற்குத் தகுந்த காரணத்தை இவர் சொல்லுவாரா? என்று வைரமுத்து கேட்க விரும்புகிறேன்.

## ந. கேசவராஜன்







# பார்த்திபனின் "ஒத்த செருப்பு" சொல்வதென்ன?

இது "ஒத்த செருப்பு" திரைப்படம் பற்றிய விமர்சனமோ மதிப்பீடோ அல்ல. தற்போதைய ஈழச் சூழலில் திரைப்பட முயற்சிகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இத் திரைபடத்திலிருந்து திரைத்துறை முயற்சியாளர்கள் கற்றுக் கொள்ளக் கூடியவை எவை என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ்ச் சூழலில் முற்றிலும் புதிய முயற்சி "ஒத்த செருப்பு" ஒரே லொக்கேசன் ஒரேயொரு கண்ணுக்குப் புலப்படும் நடிகர். சில படிமங்கள் இவற்றை மட்டுமே பார்வைக்கு விட்டுவிட்டு ஒன்றே முக்கால் மணி நேரத் திரைப்படமொன்றைத் தந்திருக்கிறார்கள். அதுவும் சிறிதும் சலிப்பேற்படுத்தாமல். இதில் பாடல் காட்சிகள் இல்லை. சண்டைக் காட்சிகள் இல்லை. "பஞ்ச் டயலொக்" இல்லை. தனிமனித சாகசம் இல்லை.

ஆனால் விறுவிறுப்பாகத் திரைப்படம் இருக்கிறது. திரையில் மையப் பாத்திரத்துடன் சில பொருட்கள் ஏனைய பாத்திரங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. அவற்றில் சில மையப்படிமங்களாகவும் மற்றையவை உப மையப் படிமங்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மிகவும் கவனமாக கடும் உழைப்பில் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது தெரிகிறது. பொருட்களும் நடிக்கும் என்பதை இத் திரைப்படம் உணர்த்தியுள்ளது.

மையப் படிமங்களாகப் பட்டம், சுவரில் கழன்று தொங்கிக் கொண்டிருக்கும் மின்சார ஆழி, கமரா என்பன இருக்க உப மையப் படிமங்களாக பிளாஸ்டிக் தண்ணீர்ப் போத்தல், பொலிஸ் அதிகாரியின் கைத்தடி, பொலிஸ் அதிகாரிகளின் தொப்பிகள், வோக்கி ரோக்கி, பெண்களின் கைப்பை, அசையும் பொம்மை பணத்தாள், என்பன "நடிக்கின்றன".
வழமையான பழிவாங்கல் கதை தான். பாதிக்கப்பட்ட ஒருவன் பழிவாங்குவதற்காக அடுத்தடுத்து கொலை செய்வது தான் விடயம். ஆனால் அதைச் சொன்ன விதம் தான் புதிது. சவாலானது. வழமையான கதை சொல்லும் உத்தியிலிருந்து தலை கீழானது.

வழமையாகக் கொலை நடந்த பின் குற்றவாளியைப் பிடிப்பதற்காகவும் மேலும் கொலைகள் நடப்பதைத் தடுப்பதற்காகவும் பொலிஸ் செயற்படுவதும் தான் கதையமைப்பாக இருக்கும். இதில் குற்றவாளியைச் சந்தேகநபராகச் ஆரம்பத்திலேயே கொண்டு வந்து அதன் பின் கொலைகளை விபரிப்பது இந்தத் திரைக்கதையின் இன்னொரு புதுமை.

இந்தத் திரைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது எனக்கு "Buried" எனும் திரைப்படம் நினைவுக்கு வந்தது. ஒரு சவப் பெட்டிக்குள் அடைக்கப்பட்டு குழிக்குள் உயிருடன் புதைக்கப்பட்ட ஒரு ட்ரக் சாரதியின் உயிர் தப்பும் போராட்டமே படத்தின் கதை. முற்றுமுழுதாக காட்சிகள் பிரேதப் பெட்டிக்குள்ளேயே நடக்கின்றன. ஒரேயொரு பாத்திரத்தை மட்டுமே நம்மால் பார்க்க முடிகிறது. மையப் படிமங்களாக கைத்தொலைபேசி, டோர்ச். என்பன இருக்கின்றன. மற்றைய பாத்திரங்களைத் தொலைபேசியூடான குரல்கள் மூலமே உணரக் கூடியதாக உள்ளது. இதில் ஏனையவர்கள் யாரும் இருந்திருக்க முடியாத பிரேதப் பெட்டி இயல்பான லொக்கேசனாக இருக்க ஒற்றைச் செருப்புத் திரைப்படத்தில் வலிந்து மற்றைய பாத்திரங்களைத் தவிர்த்திருக்கிறார்கள்.

இதில் எனக்கு மாறுபட்ட கருத்து உண்டு எனினும் அதை ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு மற்றவற்றைப் பார்க்கலாம். "விதியை மீறுவதானால் அதைத் தெரிந்துகொண்டு மீறு" என்பர். இதில் அதை செம்மையாகக் கையாண்டு மீறியுள்ளார்கள்.

"திரைப்படத்தில் காட்சி மொழியூடாகவே கதை சொல்ல வேண்டும் என்றும் உரையாடல் அந்தக் காட்சிப்புலத்திற்குத் துணையாகவே இருக்க வேண்டும்" என்றும் விதிமுறை உண்டு. அதன் அர்த்தம் காட்சியைப் பின் தள்ளி உரையாடல் "முன்னிலை கதை சொல்லும் மூலமாக" இருக்கக் கூடாது என்பதாகும். ஆனால் இப்படம் அந்த விதிமுறையை புதுமையாக மீறி. உரையாடல் மற்றும் சத்தம் மூலமாகக் கதையை நகர்த்திச் சென்றிருக்கிறது. அதுவும் அதீத உரையாடல் தரும் சலிப்பை ஏற்படுத்துவதற்கு மாறாக ஆர்வத்தைத் தூண்டும் விதமாகத் திரைக்கதை அமைந்திருப்பதைக் கவனிக்க வேண்டும்.

உண்மையைச் சொல்வதானால் இந்தப்படத்தின் கதாநாயகன் என்றால் அது ஒலிவடிவமைப்புத் தான். கண்ணிலே தென்படாத இடங்களையும் இதர பாத்திரங்களையும் ஒலியைக் கொண்டே தெளிவாக உணரும்படியான ஒலிப்பதிவும் பாத்திரங்களின் குரல் தேர்வும் சிறப்பாக உள்ளது. திரைக் கதையில் பாத்திரப் படைப்பும் தனித்துவமாக இருக்கிறது. ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஒவ்வொரு குணாம்சத்தைக் கொடுத்து அந்தக் குணாம்சங்களுக்கு ஏற்றது போல உரையாடல்களையும் அமைத்திருக்கிறார்கள். இதனால் யார்யார் பேசுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளச் சிரமமேதும் ஏற்படவில்லை.

சாதாரணமாகத் திரைப்படங்களில் வரும் பிளாஸ்-பக் உத்தி கூட இதில் மையப்பாத்திரத்தினூடாக உரையாடலையும் சத்தங்களையும் மூலங்களாகக் கொண்டே நகர்த்தப்படுகிறது. இங்கு எழுத்திலக்கியங்களான சிறுகதை, புதினம் என்பவற்றை வாசிப்பதினூடாக தன் மனத்திரையில் வாசகன் எப்படி உள்வாங்கிக் கொள்வானோ அதே உத்தியை இந்த ஒலி மூலங்கள் மூலம் இத்திரைப்படத்தில் பார்வையாளருக்குக் கடத்திச் செல்லப்படுகிறது.

தொழில்நுட்பம் சார்ந்து நோக்கினால் ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, ஒலியமைப்பு, அரங்கமைப்பு, ஒளி வெளிப்பாடு. நிறத் தேர்வு என்பன ஒவ்வொன்றோடு ஒவ்வொன்று இணைந்து பயணிப்பது பெரும் பலமாக அமைந்துள்ளது. எதுவும் திரைப்படதிலிருந்து வெளியே துருத்திக்கொண்டு நிற்கவில்லை.
பின்னணி இசை இருக்கிறது. ஆனால் நம்மால் அதை பிரத்தியேகமாக உணர முடியவில்லை. அவ்வப்போது வந்து தன்வேலையைச் செவ்வனே செய்து விட்டு அடங்கிவிடுகிறது.. படத்தின் போக்கில் கண்டபடி குறுக்கிட்டு இரைச்சலை அது கிளப்பவில்லை. இது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய இன்னொரு அம்சமாகும்.

ஆக இத்திரைப்படம் நானும் மற்றையத் திரைப்பட முயற்சியாளர்களும் கற்றுக் கொள்ள வேண்டிய பல பாடங்களைக் கொண்டிருக்கின்றது. அதற்காக விதிகளை மீறிப் படம் உருவாக்கும்படி இந்தக் கட்டுரை சொல்ல வரவில்லை. திரைப்படத்திற்கான வளங்களை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைக் இதில் கற்றுக் கொள்ளலாம் என்பதையே இது வலியுறுத்துகிறது. இந்தக் கட்டுரையை வாசிப்பதால் மட்டும் எதையும் கற்றுக்கொள்ள முடியாது. ஒத்த செருப்பு திரைப்படத்தைப் பல முறை பார்த்து நுட்பங்களை அறிந்து கொள்ள இக்கட்டுரை பரிந்துரைக்கிறது.

திரைப்படம் சொல்ல வரும் செய்தியைப் அதைப்பார்த்து அறிந்து கொள்ளலாம். அதைப்பற்றி நான் எதையும் சொல்லப் போவதில்லை. ஆனால் ஏழ்மையால் நசியுண்டு மூச்சுத் திணறும் சமூக விளிம்பு நிலை மனிதன் பணத்தின் மீது கோபம் கொள்வதும் அந்தக் கோபம் பணத்தாளில் படமாக அச்சிடப்பட்டிருக்கும் காந்தி மீது வெறுப்பாகப் பாய்வதும் எனக்குள் ஆழமான தாக்கத்தை உண்டாக்கவே செய்தது என்பதை மட்டும் தற்போதைக்கு குறிப்பிடலாம். ஆக மொத்தத்தில் ஒரு தரமான திரைக்கதையிருந்தால் மற்றையு வளங்களைச் செம்மையாகப் பயன்படுதத் தேவையான வெளி கிடைக்கும். வெறும் தொழிநுட்பங்களின் "படாடோப" அணிவகுப்பு மட்டுமே ஒரு திரைப்படமாக முடியாது.

இறுதியில் எனது மனக்குறையொன்றை இங்கு சொல்லத் தான் வேண்டும். ஒத்த செருப்பு திரைப்படம் இலங்கைத் தீவில் எந்த இடத்திலும் திரையிடப்படவில்லை. ஏன்? இதைப் போன்ற தரமான படங்களை நமது திரையரங்குகளில் காண முடியாததற்கு என்ன காரணம்? இதற்கு நாம் ஒரு ஆரோக்கியமான மாற்றுப் பொறிமுறை ஒன்றைக் காண வேண்டும்.



# பந்தயம் அல்ல பயணம்

- பத்மதேவன் -

வாழ்வில் எத்தகைய சூழ்நிலையிலும் இறுக்கமடையாமல் நெகிழ்வுத்தன்மையுடன், விளையாட்டுத்தனத்துடன் திகழ வேண்டுமானால் முதலில், வாழ்க்கை என்பது ஒரு பந்தயமல்ல. அது ஓர் இனிய பயணம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பந்தயத்தில் கலந்து கொண்டவன் பரபரப்போடும், வேகத்தோடும், வெறியோடும் செயல்படுகிறான். அவன் அவ்விதமே செயல்பட முடியும். ஆனால், இனிய பயணம் மேற்கொள்பவன், புனித யாத்திரை செல்பவன் அமைதியோடும், ஆனந்தத்தோடும் மேலும் மேலும் பொங்குகின்ற புத்துணர்வோடும் தன் இயல்பு கெடாமலிருக்கிறான்.

இப்படித்தான் வாழ்க்கையும் அமைந்திருக்கிறது. வாழ்க்கையைப் பந்தயமாகக் கருதுபவன் போராட்டம் மிகுந்தவனாகிறான். மற்றவர்களை முந்துவதே அவனுடைய இலட்சியமாகிறது. அடுத்தவர்களைவிட ஒரு படி மேலாக நிற்பதே அவனுடைய குறிக்கோளாகிறது. அப்படிப் போராடுபவன், எதிர்நீச்சல் போடுபவன் ஒருவேளை தன் இலக்கை அடைந்துவிடலாம் தான் எண்ணியதைப் பெற்றுவிடலாம். ஆனால் வாழ்க்கையனுபவம் என்னும் பரவசத்தை, ஆனந்தத்தை அவன் தவறவிட்டு விடுகிறான்.

மாறாக, வாழ்க்கையைப் பந்தயமாகக் கருதாமல் அதை ஓர் இன்பப் பயணமாக, இனிய யாத்திரையாகக் கருதுபவன், அதை முழுமையாக அனுபவிக்கிறான். ஆனந்த பரவசத்தில் திளைக்கிறான். அவனது உள்ளத்தில் எப்போதும் உற்சாகம் குமிழியிட்டுக் கொண்டிருக்கிறது. உவகை ஊற்றெடுக்கிறது.

சுயமுன்னேற்ற நூல்கள் என்ற பெயரில் எக்கச்சக்கப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. கிட்டத்தட்ட எல்லா நூல்களும் வாழ்வை ஒரு பந்தயக் களமாகச் சித்தரித்து அக்களத்தில் உங்களை இறக்கிவிடும் வேலையையே செய்கின்றன, "முடியும்! முடியும்! ஊங்களால் முடியும்! முட்டுங்கள், மோதுங்கள்! போராடுங்கள்!" என்று அப்புத்தகங்கள் உங்களை உசுப்பி விடுகின்றன.

அந்த நூல்களை எழுதுவோரும் சரி, அவற்றை வாசிப்போரும் சரி ஒன்றை மறந்து விடுகிறார்கள். எல்லோரும் முதல் இடத்திற்கு வந்துவிட முடியாது. அப்படி வந்துவிட்டால், வர முடிந்தால் "முதல் இடம்" என்பதற்கே மதிப்பு இல்லாமல் ஆகிவிடும். இயற்கை, தன் மாயத்தன்மையால் "முதலிடம்" என்பதற்கு ஏற்படுத்தி வைத்திருக்கும் கவர்ச்சி காணாமல் போய்விடும். இன்னொன்று, முதலிடத்துக்கு வந்தவர்களெல்லாம் அந்த இடத்தைப் பெறவேண்டும் என்று முயன்றவர்களுமல்ல அதற்காக முயன்றவர்களெல்லாம் அந்த இடத்தைப் பெறவுமில்லை.

வாழ்க்கை மிகவும் சிக்கல் நிறைந்தது. நீங்கள் ஒரு பாதையை வகுத்தால் அதில் ஆயிரம் பேரின் பாதைகள் வந்து குறுக்கிடும். எவனே, இப்படியொரு பாதை வகுத்தால் அப்படியொரு இலக்கை அடைந்து விடலாம் என்று வரையறை ஏதும் செய் துவிட முடியாது. உங்களைத் திருப்பிவிடுவதற்கும் திசை மாற்றுவதற்கும் பல நிகழ்வுகள் அவ்வப்போது நடக்கலாம். அவற்றை யெல்லாம் எதிர்த்து நீங்கள் போராடத் தொடங்கி னால் அதன்பின் வாழ்வே நரகமாக மாறிவிடும்.

வாழ்வைப் புரிந்து கொள்ளுங்கள். ஒரு போதும் அதன் போக்கை எதிர்த்துப் போராடாதீர்கள். முன்னோக்கிச் செல்வது தான், முன்னேறுவதுதான் வாழ்க்கையில் நீங்கள் செய்ய வேண்டியது. பிறரை முந்துவது அல்ல. நீங்கள் இயல்பாக உங்கள் பயணத்தைத் தொடர்ந்தால் போதும், அப்படிப் போகும் போதே பலர் உங்களுக்குப் பின்னாகி விடலாம். நீங் கள் முதல் நபராகக்கூட ஆகிவிடலாம்.

வாழ்வைப் பந்தயமாகக் கருதியும் நீங்கள் செயல்படலாம்

சுயமுன்னேற்ற நூல்கள் என்ற பெயரில் எக்கச்சக்கப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. கிட்டத்தட்ட எல்லா நூல்களும் வாழ்வை ஒரு பந்தயக் களமாகச் சித்தரித்து அக்களத்தில் உங்களை இறக்கிவிடும் வேலையையே செய்கின்றன, "முடியும்! முடியும்! ஊங்களால் முடியும்! முட்டுங்கள், மோதுங்கள்! போராடுங்கள்!" என்று அப்புத்தகங்கள் உங்களை உசுப்பி விடுகின்றன. அந்த நூல்களை எழுதுவோரும் சரி, அவற்றை வாசிப்போ ரும் சரி ஒன்றை மறந்து விடுகிறார்கள். எல்லோரும் முதல் இடத்திற்கு வந்துவிட முடியாது. அப்படி வந்துவிட்டால், வர முடிந்தால் "முதல் இடம" என்பதற்கே மதிப்பு இல்லாமல் ஆகி விடும். இயற்கை, தன் மாயத்தன்மையால் "முதலிடம்" என்பதற்கு ஏற்படுத்தி வைத்திருக்கும் கவர்ச்சி காணாமல் போய் விடும். இன்னொன்று, முதலிடத்துக்கு வந்தவர்களெல்லாம் அந்த இடத்தைப் பெறவேண்டும் என்று முயன்றவர்களுமல்ல அதற்காக முயன்றவர்களெல்லாம் அந்த இடத்தைப் பெறவுமி ல்லை.

இனிய பயணமாகக் கருதியும் செயல்படலாம். இரண்டு நிலைகளிலும் ஒன்றை நீங்கள் அடைவது என்பது உறுதியாகச் சொல்லக் கூடியதல்ல. வாழ்வில் ஒன்றை நீங்கள் அடையக்கூடிய சாத்தியக்கூறுகள் எவ்வளவு இருக்குமோ, அதே போல் அதை அடைய முடியாத சாத்தியக் கூறுகளும் இருக்கலாம்.

வாழ்வைப் பந்தயமாகக் கருதுபவனும், பயணமாகக் கருதுபவனும் முன்னேறுகிறார்கள் என்பதில் வேறுபாடு இல்லை. இரண்டுபேரும் ஏதாவது ஒன்றை அடையலாம், அல்லது அடையாமலுமிருக்கலாம் என்பதிலும் வேறுபாடு இல்லை. ஆனால், பந்தயமாக நினைப்பவன் வாழ்வைத் தவறவிட்டு மறைகிறான். பயணமாக எண்ணுபவனோ வாழ்வாங்கு வாழ்ந்து நிறைகிறான். போட்டியும் பொறாமையும் ஒருவனது நெஞ்சத்தில் குடிகொண்டிருக்கும் வரை அவன் ஒருபோதும் வாழ்வது அறியாதவனாகவே இருப்பான். வாழ்வைப் பயணமாகப் பார்ப்பவனிடம் போட்டி பொறாமைகள் இருப்பதில்லை என்பது நிதர்சனம். உலகில் எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியான தன்மையுடன் பிறப்பதில்லை. ஒவ்வொருவரும் தனித்தனிப் பண்புகளுடனேயே பிறக்கிறார்கள். இதைப் புரிந்து கொண்டால், "எல்லோருக்கும் எல்லாம் முடியும்" என்பது தவறான கூற்று என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இதைப் புரிந்து கொண்டால் உங்கள் இயல்பு எதுவோ அதில் நிறைவு கொண்டவராக நீங்கள் மாறுவீர்கள். உங்களால் அடைய முடிந்தது எதுவோ அதனால் திருப்தி கொண்டவராகத் திகழ்வீர்கள். மற்றவரை முந்த வேண்டும் என்னும் வேகம் இருக்காது, வெறி இருக்காது.

உங்கள் மனத்தின் வேகம் தணியும்போதுதான் உங்களுக்குள் உவகையின் முதல் ஊற்றுக்கண் திறக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஆன்மிக வழியில் பேரின்பத்தை அடைவதற்காகச் செய்யப்படும் சகல முயற்சிகளும் உள்ளுக்குள் இருக்கும் வேகத்தை வெளியேற்றுவதற்குத் தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

"வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" என்று பாடுகிறார் மாணிக்கவாசகர்.

வேகம் தணிய வேண்டுமென்றால் வேறொருவரை முந்த வேண்டும் என்னும் நினைப்பு மறைய வேண்டும்.

ஔவையின் பாடல் ஒன்று.

"வான்குருவி யின்கூடு வல்லர்க்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் - யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல்ல வேண்டாம்காண்
எல்லோருக்கும் ஒவ்வொன்(று) எளிது.

"தூக்கணாங் குருவியின் கூட்டைப் போல மற்றொரு பறவையால் செய்ய இயலாது. அரக்குப் பூச்சி செய்வது போல் செய்ய வேறொரு பூச்சியால் முடியாது. கறையான் புற்றெடுப்பது போல் இன்னொரு உயிரியால் புற்றெடுக்க ஒண்ணாது. தேனீக்கள் கூடமைப்பது போலவும் சிலந்திப் பூச்சிகள் வலை பின்னுவது போலவும் செய்வது என்பது எவ்வுயிருக்கும் அரிதான காரியம். இவையெல்லாம் அவ்வவற்றிற்குரிய தனிப்பண்புகள் தனித்திறமைகள். இவ்வாறே மனிதர்களும் தனித்தனி இயல்புகளுடன் பிறக்கிறார்கள். எல்லோருக்கும் ஏதாவது ஒரு காரியம் எளிதாகவே இருக்கும். ஆதலால், யாரும் தன்னை ஒரு குறிப்பிட்ட காரியத்தில் வல்லவன் என்று உயர்த்திப் பேச வேண்டியதில்லை." ஔவையின் இந்தக் கூற்று நெஞ்சில் நிறுத்தப்பட வேண் டியது.

வெவ்வேறு இயல்புகளுடன்தான், வெவ்வேறு ஆற்றல்க ளுடன்தான் மனிதர்கள் விளங்குவார்கள். இதுதான் இயற்கையின் கூத்து. சிலருடைய தன்மையும் திறமையும் குறிப்பிடத் தகுந்தவையாய், சமூகத்தால் மெச்சப்படத் தகுந்தவாய் உள்ளன. பலருடைய தன்மையும், திறமையும் வெகு சாதாரணமானவையாய் உள்ளன.

இங்கு ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். வேறுபாடு என்பதுதான் இயற்கையின் சிருஷ்டி, இறைவனின் படைப்பு. அவற்றுள் உயர்ந்தது, தாழ்ந்தது என்று எதுவும் இல்லை. உயர்வு தாழ்வு கற்பிப்பது என்பது முற்றிலும் மனிதர்களின் மனம் சார்ந்தது.

உயர்வு தாழ்வென்று எதுவும் இல்லை என்பதை ஒருவன் உணர்ந்து கொண்டால், தன் தன்மையை, திறமையை, இருப்பு நிலையை ஏற்றுக்கொண்டு அமைதி காண முடியும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடலை எல்லோரும் கேள்விபட்டிருப்பீர்கள். பலரும் அதன் இரண்டு மூன்று வரிகளைக் கூறுவதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். அப்பாடலின் அடுத்தடுத்த வரிகளில் வாழ்வின் மிகப்பெரிய உண்மையைப் புடம் போட்ட பொன்னாக மிளிரச் செய்கிறார். அப்பாடலில் இறுதி ஐந்து வரிகள் இங்கு எண்ணத்தக்கவை.

நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆதலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

"மனப்போக்குகள் பலவாறாக இருக்கலாம். ஆனால், இயற்கையின் போக்கு என்று ஒன்று இருக்கிறது. உயிர்களெல்லாம் அந்த இயற்கையின் போக்கிலேயே இழுத்துச் செல்லப்படுகின்றன. ஓடும் நீரின் போக்கில் செல்லும் ஓடம் போல இயற்கையின் போக்கில் எல்லா உயிர்களும் செல்லுகின்றன. அந்த இயற்கையே அவரவரை அவ்வவ்விடங்களில் அமர்த்துகிறது. ஆதலால் திறமை, செல்வம் போன்றவற்றில் பெரியோராக விளங்குபவரை வியந்துரைப்பதும் எம்மிடம் இல்லை. சிறியோராக இருப்போரை இகழ்ந்துரைப்பதும் எம்மிடம் இல்லை"

கணியன் பூங்குன்றனாரின் வாக்கில் பொருந்திருயிருக்கும் சத்தியத்தை, வாழ்வையே சாட்டி பாவத்துடன் பார்ப்போரால் நிச்சயம் உணர்ந்து கொள்ள முடியும்.

மேற்சொல்லியவற்றால், "எல்லாம் விதியே, மனிதனின் கைவசம் எதுவுமில்லை" என்னும் சித்தாந்தத்தை நான் கூறுவதாக நீங்கள் நினைக்கலாம். நான் சொல்ல வருவதும் சொல்ல நினைப்பதும் அதுவன்று. விதி, மதி என்பதைப் பற்றி பின்னொரு அத்தியாயத்தில் தனியாக விளக்கியுள்ளேன். இங்கே நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது, இயற்கையின் போக்கு என்றும் நியதி என்றும் ஒன்றிருக்கிறது என்பதைத்தான்.

இதை நீங்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்துவிட்டால் வாழ்க்கை உங்களுக்கு வசப்படத் தொடங்கிவிட்டதென்று பொருள்.

**நன்றி : இந்தக் கணத்தில் வாழுங்கள்**



# அங்கதன் பதில்கள்

❓ தமிழ் கட்சிகளின் கூட்டும் சேர்க்கையும் பிரிவும் பற்றி உங்கள் கருத்து என்ன?

வி.கரிகரன், வவுனியா

✍ பொருந்தா திருமணமும் விரும்பா விவாகரத்தும் போன்றது தான்

❓ அடுத்த தேர்தலில் தமிழர்கள் தமது வாக்குகளை என்ன செய்ய வேண்டும்?

பா.வர்மன், கைதடி

✍ வழமை போல் வெறுமனே வாக்களிக்கும் வேட்பாளருக்குத் தமது வாக்குகளை அளிக்க வேண்டும்

❓ மானசீகமாக இல்லாது மக்கள் பிரச்சினைகள் பற்றிப் பேசும் தமிழ் அரசியல் வாதிகளை என்ன செய்யலாம்?

கு.நாகேஸ்வரன், வேலணை

✍ மானசீகமாக முற்றாக மனதில் இருந்து தூக்கியெறிந்து விடவேண்டும்

❓ இன்னும் தமிழர்கள் சிந்தனையாளர்கள் அல்ல என்பது போல அறிக்கை விடும் அரசியல்வாதியின் நோக்கம் என்ன?

கை.தேவநாயகம், சாவகச்சேரி

✍ தாங்கள் முட்டாள்களுக்கு தலைமை தாங்குகிறார்கள் என்பதில் முழுமையாக நம்பிக்கை உள்ளவர்கள்

❓ காணாமல் ஆக்கப்பட்டோர் இறந்திருப்பர் என்ற ஜனாதிபதியின் கூற்று..?

து.பொன்மணிதேவி, பரந்தன்.

✍ காணாமல் போவது என்பது வேறு காணாமல் ஆக்கப்படுவது என்பது வேறு ஆக்கியவர்களுக்கு ஆக்கப்பட்ட விதம் தெரியாதா? என்ன?

❓ தற்போதைய சூழலை வைத்துச் சொல்லுங்கள்.. இலங்கையின் எதிர்காலம் என்னவாகும்?

ஆ.வாமதேவன், தும்பளை

✍ எந்தச் சூழலைச் சொல்கிறீர்கள்? சுற்றுச் சூழலையா? அரசியல் சூழலையா? இரண்டுமே முற்றிலும் மாசடைந்திருக்கிறது. எனவே எதிர்காலம் என்பது கேள்விக்குறியே

❓ அரசியல் பற்றி யாராவது பேசவந்தால் இனிமேல் மௌனமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன்!

ர.மாணிக்க வாசகர், நீராவியடி

✍ உங்களுக்கு அரசியல் தெரியாவிட்டால் பேசாமல் இருக்கலாம் தெரிந்தால் பேசாமல் இருக்க முடியாது. முன்னது. அறியாமையின் வெளிப்பாடு பின்னது.

❓ இனியும் பொறுத்திருக்கலாமோ? என்று மனம் நோகிறதே!

பா. மோகனதாஸ், காரைநகர்

✍ சிறுமை கண்டு பொங்குவாய் என்றல்லவா பாரதி பாடியிருக்கிறார் இனியும் பொறுப்பதற்கில்லை என்பதே மனித இயல்பு

❓ தோழர்கள் என விழித்தபடி கழுத்தறுக்கின்ற கம்யூனிஸ்ட் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

நா.அமரன், கீரிமலை

✍ தோளில் கை போட அனுமதித்ததால், கழுத்தில் கை வைக்கத் துணிந்தவர்கள்

❓ ஜனாதிபதியின் அதிரடி அறிவிப்புகள் மற்றும் அதிரடி விசிட் என்பன என்னத்தைக் காட்டுகிறது?

வி.கலைஅரசி, வவுனியா

✍ முன்பு அதிரடிப் படைகளை வழி நடத்திய இராணுவ அதிகாரி மற்றும் பாதுகாப்புச் செயலர் என்பதைக் காட்டுகிறது

❓ இன்னும் தீர்வைத் தருமாம் இந்தியா! சம்பந்தர் கனவு எப்படி?

பொ.அமரதேவன், நெடுங்கேணி

✍ தமிழரை முழுமையாகத் தீர்த்துக் கட்டும் தீர்வுக்கு உதவக் கூடும். சம்பந்தனின் கனவு தமிழருக்கு சம்பந்தமில்லாதது

❓ மிகவும் இனவாதக் கருத்துக்களைப் பரப்பும் சிங்கள் அரச அதிகாரிகள் எப்படிப்பட்ட இலங்கையை விரும்புகிறார்கள்?

ரா.ஹரிஹரன், பங்குடுதீவு

✍ பாரிச வாதத்தால் பீடிக்கப்பட்ட இலங்கையை உருவாக்க விரும்புகிறார்கள்

❓ விரைவில் தீர்வு வரும் எனச் சொல்லும் சுமந்திரன் பேச்சை நம்பலாமா?

க.மதியழகன், முல்லைத்தீவு

✍ "என்னத்தக் கன்னையா" வின் பேச்சு மாதிரித்தான் சுமந்திரனின் பேச்சும். "வரும்..... ஆனா.... வராது..""

❓ மண் கொள்ளை ஒரு புறம். அதனை எதிர்த்துப் போராட்டம் மறுபுறம். இது அரசியல் என்று எண்ணுகிறேன்?

பொ. யதார்த்தன், மட்டுவில்

✍ அரசியல் வாதிகள் கொள்ளை அடிப்பதும் உண்டு. போராட்டம் நடத்துவதும் உண்டு. எல்லமே அரசியலில் சகஜம்தான்

❓ நடந்து முடிந்த தமிழரசுக் கட்சியின் 70 ஆண்டு நிறைவில் தமிழர்களாகிய நாம் கண்டதென்ன?

பி.மூர்த்தி, பண்டந்தரிப்பு

✍ சம்பந்தன் ஐயா தமிழ் மக்களின் எதிர்காலத்தை இந்தியாவிடமும் சர்வதேசத்திடமும் தாரை வார்த்துக் கொடுத்ததை

❓ தமிழருக்கெனப் புதிய தலைமை ஒன்று ஏற்படுமா? ஏற்பட விடுவார்களா?

செ.ஹஜன், பருத்தித்துறை

✍ புதிய தலைமைகள் ஏற்படும். ஏற்படுத்தியே தீருவார்கள். அது தமிழனின் தனிக் குணம் அல்லவா!

❓ குற்றவாளிக்குப் பரிந்து பேசும் ஒரு சட்டத்தரணி, ஒரு சமூகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்பதென்பது?

த.தெய்வ நாயகி, பூநகரி

✍ ஆபத்து. அவன் சமூக விரோதிகளுக்கு வக்காளத்து வாங்குபவனாக இருப்பான்

❓ பட்டும் பட்டும் அறிவில்லாது எமக்கான தீர்வுக்கு இன்னுமொரு நாட்டை எதிர்பார்த்து நிற்கின்ற தமிழ் தலைமைகள் பற்றி..?

சி. மாணிக்கதாசன், புன்னாலைக்கட்டுவன்

✍ ஒரு நாட்டையே உருவாக்க மக்களின் ஆணையைப் பெற்றவர்கள் வெறும் தீர்வுக்கு அந்நிய நாட்டிற்கு காவடி எடுப்பது வெட்கக்கேடு

❓ இனிமேலும் கட்சிகளை நம்ப வேண்டாம் என்று நண்பன் சொல்லுகிறான். அதனால் வாக்கை என்ன செய்யலாம் என்று யோசிக்கிறேன். நல்லதொரு வழியைக் காட்டுவீரா?

இ.மாரிமுத்து, வவுனியா

✍ வாக்கை அளிக்காதீர்கள் வாக்கை அழித்து விடுங்கள் (செல்லாதாக்கி விடுங்கள்)

❓ எனக்கும் தலைமை தாங்க வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. எப்படி அதனை நிறைவேற்றுவது?

✍ திருமணம் செய்து கொண்டு குடும்பத் தலைவராகி விடுங்கள்

❓ வட பகுதியிலுள்ள தொன்மங்களைப் பற்றி யாரும் கவலைப்படுவதாக இல்லையே. ஏன்?

வெ.சுதாகரன், மட்டுவில்

✍ சுய இருப்பே பாதுகாப்பற்றதாக இருக்கும் போது தொன்மை இருப்பைப் பாதுகாக்கும் சிந்தனை எப்படி வரும்?

❓ வலியைச் சுமந்தால்தான் தெரியும் என்கிறார்கள்?

த. வாகீசன், நெடுங்கேணி

✍ ஆமாம் வலியை சுமக்கும் போதுதான் வலிமையாய் இருக்கவேண்டியதன் அவசியம் விளங்கும்!

❓ தற்போது முப்படைகளையும் வைத்துச் சூழலைச் சுத்தம் செய்தாலும் நோய் பெருகுகிறதே! ஏன்?

ப.சோதிமலர், சங்குவேலி

✍ படைகளும் நோய்வாய் படக் கூடியவையே

❓ இயற்கை வைத்தியத்தை மக்கள் மறப்பதாகச் சொல்லப்படுகிறது.

சு.இராமன், தையிட்டி

✍ வாழ்க்கையை எல்லாவகையிலும் செயற்கையாக்கி வரும் மனிதன் இயற்கையை மறப்பதும் இயற்கையே

❓ நீர் இல்லை என்று கரித்துக் கொட்டும் மக்களுக்குத் தற்போது பெய்யும் அடைமழையைச் சேமிக்கத் தெரியவில்லையே?

ம.தணிகாசலம், மாங்குளம்

✍ பணமில்லாதபோது அதற்காகப் புலம்பும் மனிதன் உழைக்கும் காலத்தில் சேமித்து வைக்கும் வழிகளைத் தேடுவதில்லையே அதுபோல் தான் இதுவும்



அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கு அல்லது இல.151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப்பரிசில் வழங்கப்படும்.

பெயர் : ..................................

முகவரி : ..................................

தொ.இல : ..................................



# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

இலங்கையில் தமிழர்களுக்கு அதிகார பகிர்வு வழங்கும் நடைமுறை சாத்தியமற்றது என ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ ஊடகத் துறைசார்ந்த ஆசிரியர்களுடன் நடத்திய சந்திப்பொன்றின் போது தெட்டத் தெளிவாக தெரிவித்தமையானது எங்கடை தமிழ் தலைவர்களுக்கு மீண்டும் ஒருமுறை இனப்பிரச்சினை தீர்வு குறித்து இலங்கை அரசின் நிலைப்பாட்டை இறுக்கமாக உணர்த்தியுள்ள போதிலும் இன்னமும் அவர்கள் புதிய அரசியலமைப்பு உருவாக்கம், அதிகாரபகிர்வு, சமஷ்டி தீர்வு என அர்த்தமற்ற 'சுமைகளை தொடர்ந்தும் பேசி வருவது கோமாளித்தனமாக உள்ளது

13 வதுதிருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இயலாது பெரும்பான்மை இன மக்கள் ஏற்றுக் கொள்ள விரும்பாத எந்தத் தீர்வையும் அரசு கவனத்தில் எடுக்காது என இதற்கு முன்னர் இந்தியாவில் வைத்துக் கூறிய ஜனாதிபதி இப்போது சமஷ்டி குறித்தும் கைவிரிப்பு செய்துவிட்டார்.

அதன் மூலம் அவர்தான் இந்தநாட்டின் சிறுபான்மையினரின் அரசியல் அபிலாஷைகள் மீதான தனது அக்கறையின்னைமயை வெளிப்படையாக சொன்னதன் பின்னரும் தமிழ் தலைவர்கள் தமிழ் மக்களின் அரசியல் இருப்பின் எதிர்கால இருப்புக்கு இந்தியாவையும் சர்வதேச சமூகத்தையும் நம்புங்கள் எனக் கூறுகின்றமைதான் சர்வதேச கோமாளித் தனமாகும். இந்தநிலையில் தமிழரசு கட்சிக்கு வயது 70 ஆகிவிட்டதாம் ஆண்டு விழா வேறு நடத்துகிறார்களாம் தந்தை வழியில் தமிழரசு போராடுகிறதாம்.

எத்தனை காலத்துக்குத் தான் இந்த அறிக்கை போராட்ம் நடத்தப் போகிறார்களோ? சம்பந்த புராணமும், சுமத்திர உச்சாடனமும் இன்னும் எத்தனை காலத்திற்கு தமிழினத்தை பேய்க் காட்டப் போகிறதோ? இது எங்கேயோ இடிக்கிறதே! ஒரு வேளை அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பதை வாசு விரும்பவில்லையோ?

★ ★ ★

அட அறிக்கை மன்னர் ஆனந்தசங்கரியார் தானும் இருக்கிறேன் என மீண்டும் ஒரு அறிக்கை விட்டு நிரூபித்திருக்கிறார் எல்லா கட்சிகளும் அவரது தமிழர்விடுதலைக் கூட்டணியோடு இணைந்து செயற்பட வேண்டுமாம் அதுதானாய்யா தமிழரின் ஆரம்பகால கூட்டணி ஐயாவும் இருக்காத கட்சியில்லை விடாத அறிக்கையுமில்லை எழுதாத கடிதங்களுமில்லை யாருமே அவற்றை கவனத்தில் கொண்டதாகவும் இல்லை. ஆனால் ஐயா ஒரு விக்கிரமாதித்தன் தான் அம்புலிமாமா பத்திரிகையில் வெளிவரும் வேதாளம் சொன்ன கதைகளில் தனது முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி அங்கு தொங்கிக் கொண்டிருந்த வேதாளத்தை கீழே இறக்கி மீண்டும் தோளில் சுமந்தபடி செல்லலானான் என கதை ஆரம்பமாவது போல் இந்த அறிக்கையுடன் அடுத்த தேர்தலுக்கான பயணத்திற்கு தயாராகி விட்டதை வெளிப்படுத்திவிட்டார். எது என்னவானாலும் வேதாளம் கேட்கும் கேள்விக்கு மௌனம் காக்காது பதில் சொல்லி அதனை மீண்டும் முருங்கை மரத்தில் ஐயா ஏறவிடத்தான் போகிறார். மீண்டும் மீண்டும் அரசியல் வேதாளத்தை சுமப்பது என்பது அவருக்கு சுகமானது அந்தக் கட்சி மக்களுக்கு வேடிக்கையானது.

★ ★ ★

றெலோவின் முதுபெரும் தலைவர்கள் ஸ்ரீகாந்தாவும் சிவாஜிலிங்கமும் அடைக்கலநாதரை கைவிட்டு விட்டு புதிய கட்சி ஒன்றை உருவாக்கிவிட்டார்கள் விக்கி ஐயா தலைமையில் புதிய கூட்டணியை உருவாக்கப் போகிறார்களாம் ஏனய்யா தமிழருக்கு கட்சிகள் போதாது என்றா புதியகட்சி ஆரம்பித்தீர்கள்? விக்கி ஐயாவின் தலைமையைஏற்கத் தயார் என்றால் பிறகேனய்யா புதுக் கட்சி? விக்கி ஐயாவின் கட்சியுடன் இணைந்திருக்கலாமே? கூட்டாக இயங்கவும் முடியாது தனியாக இயங்கவும் வக்கில்லை! பாவம் தமிழ் மக்கள் பரிதாபம் தமிழ் தலைவர்கள் நாற்காலிக் கனவுக்கு கூட்டணிவேண்டும் தலைமைப் பதவிக்கு கட்சியும் வேண்டும். போங்கடா போங்கடா நீங்களும் உங்கள் கட்சிகளும்..


"தூய்மையானதும் நீண்ட காலம்
பாவிக்க கூடியதுமான
இல்லத்தரசிகளின்
ஒரே தெரிவு"
LITRO GAS
அனைவருக்கும்
இனிய நத்தார் தின
வாழ்த்துக்கள்
S.V
முருகேசு
தேசிய எரிவாயு ஏக விநியோகஸ்தர்
No.154, Hospital Road, Jaffna.
T.P : 021 222 8899 | 021 492 5831
No.106, Hospital Road, Jaffna.
T.P : 021 492 5830 | 021 222 4341
Fax : 021 222 4341
No.288, A9 Road, Karadippokku, Kilinochchi.
T.P : 021 492 5827




தீபம் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விளம்பர முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 077 198 9445

இந்தப் பத்திரிகை இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் 22.12.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.